கடல் உணவின் களஞ்சியம்
மொத்தமாகவும். சில்லறையாகவும் பெற்றிட
Kasturi Limited
IMPORT & EXPORT
290B, Ealing Road, Wembley, Middlesex, HA0 4LL, UK.
Tel: 0181-903 4276 Fax: 0181-903 0827
Mobile: 0958 248580

France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

# ஈழமுரசு
பிரித்தானியா

Eelamurasu Weekly

முரசு: 3 27 நவம்பர் - 03 டிசம்பர் 1997 முழக்கம்: 150

புதிய நிர்வாகத்தில்
மளிகைப் பொருட்கள் யாவும் மலிவு விலையில்
NEW (SRI) KANNAN STORES
249, Fore street, Edmonton, LONDON, N18 2TY
Tel: 081- 884 4979

# தமிழீழம் எங்கும் மாவீரர் நினைவு நாள்
# மாவீரர் துயிலிடங்களில் தேசியக் கொடி



(25.11.97)

தமிழர்களின் விடுதலைப் போரில் வீரச்சாவெய்திய விடுதலைப் போராளிகளை கௌரவிக்கும் மூன்றுநாள் மாவீரர் எழுச்சி இன்று முதல் தமிழீழப் பிரதேசங்கள் எங்கும் ஆரம்பமாகின்றன. இன்றுகாலை 8 மணி முதல் தமிழீழத் தேசியக் கொடிகள் தமிழீழத்தில் அமைந்திருக்கும் மாவீரர் துயிலும் இல்லங்களில் ஏற்றப்படும். பல்லாயிரக்கணக்கான மக்கள் குழுமி தமது வணக்கத்தினை மாவீரர்களுக்கு செலுத்துவர். 27ம் திகதி மாலை 6 மணிக்கு தேசியக் கொடிகள் இறக்கப்படுவதுடன் வைபவம் முற்றுப்பெறும்.

1989ம் ஆண்டு முதலாவது தமிழீழ மாவீரர் நாள் உத்தியோகபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்று

(☞ 2ம் பக்கம்)

## விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகள் போர்முனைகளில்
### சிறீலங்காப் படைகள் அச்சம்

ஜெயசிக்குறுய் III இராணுவ நகர்வில் ஈடுபட்டுவரும் சிறீலங்காப் படையணிகள் ஒரு முக்கோண வடிவ வியூகத்தை அமைக்க முயன்று வருகின்ற போதிலும், விடுதலைப் புலிகளின் கடுமையான தாக்குதல்களின் விளைவாக தமது நோக்கத்தை நிறைவேற்ற முடியாது பலத்த இழப்புக்களுடன் திண்டாடிக் கொண்டிருக்கின்றனர்.

சிறீலங்கா இராணுவத்தின் 55-வது பிரிவு படையணி புளியங்குளச் சந்தியை கைப்பற்ற பெரும் பிரயத்தனத்தை மேற்கொண்டும் கடும் தாக்குதல்கள் காரணமாக அது நிறைவேறாது திணறிக் கொண்டிருக்கின்றனர்.

(☞ 2ம் பக்கம்)

## தலைவர் பிரபாகரனின் மாவீரர்நாள் உரையை எதிர்பார்த்து வவுனியாவில் உலக செய்தித் தாபனங்கள்

தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் மாவீரர்நாள் செய்தியை எதிர்பார்த்து சர்வதேச செய்தி நிறுவனங்கள் தமது நிருபர்களை வவுனியா நகர்ப்பகுதியில் நிறுத்தி வைத்துள்ளனர். புலிகளின் குரல் வானொலி மூலம் ஒலிபரப்பப்படும் உரையானது உலகம் பூராவும் எதிரொலிக்க உள்ளது.

தமிழீழ மாவீரர் நாளில் தமிழீழத் தேசியத் தலைவர் திரு வே.பிரபாகரன் அவர்கள் ஆற்றும் உரையானது தமிழீழ மக்களும், சர்வதேச சமூகமும் எதிர்பார்க்கும் வரலாற்றுச் சிறப்பு மிக்க விடயமாகியுள்ளது.

இவ்வுரையானது தமிழீழ விடுதலைப் புலிகளினதும், தமிழீழ மக்களினதும் கொள்கைவிளக்க உரையாக மதிக்கப்படுகின்றது.

இவ்வாண்டு சிறீலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்

(☞ 2ம் பக்கம்)

## நல்லூரில் இரு பொலிசார் சுட்டுக் கொலை

(24.11.97)

நல்லூரில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் இரண்டு பொலிசார் கொல்லப்பட்டனர்.

இன்றுமாலை 5.20 மணியளவில் நல்லூர் கந்தசாமி கோவி

(☞ 2ம் பக்கம்)

# 100,000 அமெரிக்கத் தமிழர்கள் போர்க்கொடி
## புலிகளுக்கு ஆதரவாக நீதிமன்றம் முன் மனு

அமெரிக்க இராஜாங்க அமைச்சின் விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடை நடவடிக்கையை எதிர்த்து அமெரிக்கா வாழ் ஒரு இலட்சம் தமிழ் மக்களின் பிராந்திய தமிழர் அமைப்புக்கள் அமெரிக்க நீதிமன்றத்திற்கு செல்ல உள்ளன.

ஜோர்ஜ் ரவுன் பல்கலைக்கழக விரிவுரையாளரும், அமெரிக்க அரசியல் அமைப்புச் சட்ட நிபுணருமான திரு. டேவிட் கூல் தலைமையிலான விசேட சட்ட நிபுணர்கள் குழு அமெரிக்கா வாழ் தமிழ் மக்களின் சார்பாக நீதிமன்றம் முன் மனு ஒன்றைத் தாக்கல் செய்ய உள்ளனர். இது தொடர்பாக ஒரு இலட்சம் தமிழ் மக்களை உறுப்பினர்களாகக் கொண்ட 32 தமிழ் அமைப்புக்கள் அறு பிற ஈழத் தமிழர் அமைப்புக்களுடன் இணைந்து இம் மனுவை தாக்கல் செய்வதென வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் முடிவு செய்துள்ளனர். அமெரிக்காவின் பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தினுடைய அமைப்பு முறை பற்றி அமெரிக்க நீதிமன்றத்தின் முன் விவாதிக்க உள்ளனர்.

கடந்த 22.11.97 அன்று மேரிலாண்ட் பகுதியில் திரு. அரசு

(☞ 2ம் பக்கம்)

## குடாநாட்டு வீதிகளில் வலம்வரும் புலிகளின் அணிகள்

யாழ் குடா நாட்டில் ஆக்கிரமிப்பு படைக்கெதிராக தமது தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ள விடுதலைப் புலிகள் தற்போது குடாநாட்டு வீதிகளில் வலம் வருவதை காணக்கூடியதாக உள்ளதாக குடாநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் இவர்கள் அதிகளவில் நடமாடுவதாகவும் குழுக்களாக இவர்கள் ஆயுதங்களுடன் வலம்வருவதை சாதா

(☞ 2ம் பக்கம்)

சங்கரத்தையில்
## 22 இராணுவம் பலி

(20.11.97)

சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கைகள் மூலம் யாழ். குடாநாட்டை சிறீலங்கா படையினர் ஆக்கிரமித்துக் கொண்டதன் பின்னர் விடுதலைப் புலிகளால் நடாத்தப்பட்ட பாரியதாக்குதல் என வர்ணிக்கப்படும் அதிரடித் தாக்குதல் ஒன்று இன்று பிற்பகல் சங்கரத்தைப் பகுதியில் நடாத்தப்பட்டுள்ளது. இதில் 22

(☞ 2ம் பக்கம்)

## இராணுவத்தைத் தேடி இராணுவம்

(23.11.97)

ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கையிலிருந்து தப்பியோடிய இராணுவத்தினரைத் தேடி இன்று காலை வவுனியாவின் புறநகர்ப்பகுதி கிராமங்களிலும், புகையிரத நிலைய சுற்றாடலிலும் சிறீலங்கா இராணுவத்தினர் தேடுதல் வேட்டை

(☞ 2ம் பக்கம்)



கார்த்திகை எனும் நளி
மாதத்தில் பிறந்தான்
ஆர்த்திடும் புலியென
களத்தினுட் சென்றான்
அனைத்து தமிழர்க்கும்
தலைவனாய் நிற்கின்றான்.
– பாவலரேறு பெருஞ்சித்தரனார்

(தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் 26.11.1997 அன்று 44வது அகவையில் காலடிவைக்கின்றார்)

லண்டனில் நம்பிக்கை = நாணயம் = உத்தரவாதம் = குறைந்த விலை
மங்கையர் நெஞ்சங்களில் குறுகிய காலத்தில் இடம்பிடித்தவர்கள்
RATHY JEWELLERS
தாலிக்கொடி தயாரிப்பில் கைதேர்ந்தவர்களின் கைவண்ணத்தில் சகல நகைகளையும் செய்தும், இறக்குமதி செய்து வழங்குபவர்கள்

28 Ealing Road, Wembley, Middx. HA0 4TL
Tel: 0181-903 3063
Fax: 0181-903 9711
Mon.-Sat. 10.00 A.M. - 6.00 P.M.
Sunday 12.00 Noon - 6.00 P.M.

# விடுதலைப் புலிகளை தமிழ் மக்கள் ஆதரிப்பது தேசவிரோதமெனச் சொல்வது ஜெயினுக்கு இழுக்கு

## - நெடுமாறன் குற்றச்சாட்டு

விடுதலைப் புலிகளை தமிழ் மக்கள் ஆதரிப்பது தேச விரோதம் என்று ஜெயின் கூறியுள்ளது அவரது நேர்மைத் தன்மை பற்றி சந்தேகப்பட வைக்கிறதென்று - தமிழர் தேசிய இயக்கத் தலைவர் நெடுமாறன் கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில்

ஜெயின் கமிசனின் இடைக்கால அறிக்கை பெரும் அரசியல் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

சென்னையில் சிறப்பு நீதி மன்றத்தில் நடைபெறும் ராஜீவ் கொலை வழக்கில், தை மாதம் 28-ம் திகதியன்று தீர்ப்பு வழங்கப்பட்ட பிறகு ஜெயின் கமிசன் அறிக்கை வெளியிடப்படும் என்பதற்கு மாறாக 'திடீர்' என்று இடைக்கால அறிக்கையை ஜெயின் இந்திய அரசிடம் அளித்தார். முழு அறிக்கையே இரண்டு மாதங்களில் வெளியிட இருக்கையில், இடைக்கால அறிக்கையை இப்போது வெளியிட வேண்டிய அவசியமும், அவசரமும் என்ன? அதிலும் இந்த அறிக்கையில் சில பகுதிகள் 'இந்தியா டுடே' இதழில் வெளியிடப்பட்டன. இதன் மூலம் இந்திய அரசிற்கு நிர்ப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு அறிக்கையை உடனடியாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டிய 'அவசியம்' உருவாக்கப்பட்டது.

முக்கிய சில கோப்புகள், ஆவணங்கள் தனது பரிசீலனைக்குத் தரப்படவில்லை என்று நீதிபதி ஜெயின் இந்திய அரசு மீது பகிரங்கமாக குற்றம்சாட்டியிருந்தார். மேலும் சில கோப்புகள் காணாமல்போய்விட்டன என்று முந்தைய காங்கிரஸ் ஆட்சி, நீதிபதி ஜெயினுக்குத் தெரிவித்தது. இந்தக் கோப்புக்கள், ஆவணங்கள் இல்லாமல் சரியான முடிவை ஜெயின் எடுக்கமுடியாது. ஆனால் இத்தகைய உண்மையான ஆதாரங்கள் எதுவும் இல்லாமலே ஊகத்தின் பேரில் நீதிபதி ஜெயின், தனது அறிக்கை அளித்திருக்கிறார். முக்கிய ஆதாரங்களை தலைக்குத்தராமல் மறுத்துவிட்ட முந்திய காங்கிரஸ் ஆட்சியையும் அதனுடைய உள் நோக்கத்தையும் பற்றி ஜெயின் கண்டனம் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ராஜீவ் கொலைவழக்கில் புலன் விசாரணை நடாத்திய சி.பி.ஐ யின் சிறப்புப் புலன விசாரணைக்குழு, புலன் விசாரணை டயரியையும் மற்றும் சில ஆவணங்களையும் நீதிபதி ஜெயினுக்குத் தருவதற்கு கடைசிவரை மறுத்துவிட்டது. இதைப் பற்றியும் ஜெயின் தனது அறிக்கையில் கண்டனம் தெரிவிக்கவில்லை.

ஜெயின் விசாரணையை இடையிலேயே தடுத்து நிறுத்துவதற்காக முந்தைய காங்கிரஸ் ஆட்சியின் தூண்டுதலின்பேரில் டெல்லி உயர் நீதி மன்றத்தில் பொதுநல நோக்கு மனு தாக்கல் செய்யப்பட்டது. தனது விசாரணைக்கு முட்டுக்கட்டை போட முயன்றவர்கள் பற்றியும் ஜெயின் தனது அறிக்கையில் எதுவும் குறிப்பிடவில்லை.

மத்திய உள்துறை அமைச்சராக இருந்த எஸ்.பி. சவான் நாடாளுமன்றத்தில் பின்கண்ட திடுக்கிடும் தகவலைக் கூறினார். 'ராஜீவ் குடும்பப் பொருளாளைக் காப்பாற்றுவதற்காக சில கோரிக்கைகளை நீதிபதி ஜெயினிடம் கொடுக்கவில்லை. இதைப் பற்றியும் ஜெயின் கவலைப்படவில்லை.

இந்திய உளவுத் துறையான ஐ.பி.க்கும், 'ரோ'வுக்கும் இடையே புலிகள் விஷயத்தில் கடும் போட்டா போட்டி நிலவியது. புலிகளுக்கு ஆதரவாக ஐ.பி.யும் புலிகளுக்கு எதிராக 'ரோ'வும் இந்திய அரசுக்குத் தொடர்ந்து அறிக்கைகள் தந்தன. இந்திய அமைதிப்படையின் தளபதிகளாகச் சென்ற லெப். ஜெனரல் திபிந்தர் சிங், மேஜர் ஜெனரல் சத்தேஷ் பாண்டே போன்றவர்கள் 'ரோ' மீது மிகக் கடுமையாக புகார்கள் கூறியுள்ளார்கள். 'ரோ' தந்த உளவுச் செய்திகள் நம்பகத்தன்மை வாய்ந்தவை அல்ல. இந்திய அரசு புலிகள் விடயத்தில் செய்த பல தவறுகளுக்கு 'ரோ' உளவு அமைப்பின் தவறான ஆலோசனையே காரணம்' என்று அவர்கள் தாங்கள் எழுதியுள்ள நூல்களில் பகிரங்கமாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆனால் 'ரோ' உளவுத் துறை சேகரித்த சில செய்திகளின் அடிப்படையில், நீதிபதி ஜெயின் புலிகளுக்கு எதிராக பல முடிவுகளை எடுத்திருக்கிறார். 'ரோ' உளவுத் துறையின் தகவல்கள் உண்மையானவையா என்பதை எந்த வகையிலும் அவர் சரிபார்க்கவில்லை என்பது திட்டவட்டமாகத் தெரிகிறது.

விடுதலைப் புலிகளுடன் தமிழர்களுக்குள்ள நெருங்கிய உறவு தேசவிரோதப் போக்காகும் என்றும் ஜெயின் கண்டனம் தெரிவித்திருக்கின்றார்.

இது அவர் வகிக்கும் பதவிக்கு இழுக்கைத்தேடித் தந்துள்ளது. ராஜீவ் கொலைக்கு ஒட்டுமொத்தமாக தமிழர்கள் மீது அடாத பழியை அவர் சுமத்தியிருப்பது அவரின் நேர்மையைச் சந்தேகிக்க வைக்கிறது.

ராஜீவ் கொலை வழக்கில் தீர்ப்புச் சொல்லப்பட்ட பிறகு தான் உண்மையான குற்றவாளிகள் யார் என்பது வெளியாகும். இந்த நிலைமையில் சதியின் பின்னணியைப் பற்றி ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட ஜெயின் தேவையில்லாமல் வரம்பு மீறிச் சென்று புலிகள் மீதும், தி.மு.க மீதும் குற்றச்சாட்டுகளைச் சுமத்திருக்கிறார்.

இந்த அறிக்கையும், அது வெளியிடப்பட்ட பின்னணியும் பலமான சந்தேகங்களை எழுப்பியுள்ளது. காங்கிரசுக் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கிற குழப்பத்தின் விளைவாக இந்த அறிக்கை அவசர அவசரமாக வெளியிட வைக்கப்பட்டுள்ளது.

சீத்தாராம் கேசரிக்கு எதிராக அர்ஜுன் சிங் போன்றவர்கள் சோனியாவை முன் நிறுத்திக் காங்கிரசைக் கைப்பற்ற முயற்சி செய்து வருகிறார்கள். ராஜீவ் கொலை பற்றிய பிரச்சினையை பெரிய அளவில் கிளப்பி மக்களின் அனுதாபத்தைப் பெற சோனியாகாந்தி பயன்படுவார் என இவர்கள் திட்டமிட்டுள்ளார்கள். மேலும் போபர்ஸ் ஊழல் விசாரணை முடியும் கட்டத்தில் உள்ளது. இந்த ஊழலில், சோனியாவின் உறவினர் குவாத்ரோச்சிக்கு உள்ள தொடர்பு ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டுவிட்டது. மேலும் சுவிஸ் வங்கி இரகசிய கணக்கு விவரத்தை இந்த ஆண்டு இறுதிக்குள் சுவிஸ் அரசு இந்தியாவிற்கு அனுப்ப இருக்கிறது. எனவே அதற்குள் குஜராத் அரசை கவிழ்க்கவேண்டும் என்ற ஆழமான சதித்திட்டம் உருவாக்கப்பட்டு அந்த அடிப்படையில் இப்போது பிரச்சினை கிளப்பப்பட்டுள்ளது.

ஜெயின் அறிக்கையைப் பயன்படுத்தி தி.மு.கவினை குற்றம் சாட்டும் காங்கிரஸ் தலைவர்கள், கண்ணாடி வீட்டிற்குள் இருந்து கல் எறிகிறார்கள். ஈழத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்கென்று அனுப்பப்பட்ட இந்திய அமைதிப்படை, 10000க்கு மேற்பட்ட தமிழர்களை படுகொலை செய்வதற்கும், ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேலான தமிழர்கள் சொத்துக்களை நாசம் செய்வதற்கும் காங்கிரசு ஆட்சியே காரணமாக இருந்தது.

இந்திராகாந்தியின் கொலையையொட்டி டெல்லியிலும், வட நாட்டின் பல பகுதிகளிலும் பல்லாயிரக்கணக்கான சீக்கியர்கள் கொலை செய்யப்பட்டதற்குப் பின்னால் காங்கிரசுக் கட்சி இருந்தது. இந்தக் கொலைகளுக்குக் காரணமாக இருந்த காங்கிரசு, இப்போது தி.மு.க வை குற்றவாளிக்கூண்டில் நிறுத்தியிருக்கிறது. இந்தத் தைரியம் காங்கிரசுக்கு வருவதற்கு தி.மு.க. தலைமையின் தவறான போக்கு தான் காரணமாகும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

போபர்ஸ் விசாரணை இறுதிக்கட்டத்தை நெருங்கிக்கொண்டிருந்த வேளையில் சி.பி.ஐ டைரக்டராக இருந்த ஜோகிந்தர் சிங் மாற்றப்படவேண்டும்; அதன் மூலம் விசாரணைக்கு முட்டுக்கட்டை போடவேண்டும் என்ற நோக்கத்துடன்தான் அப்போதைய பிரதமர் தேவகௌடாவிற்கு எதிராக காங்கிரசு வரிந்துகட்டியது. அதன்படி அவர் மாற்றப்பட்டார். ஜோகிந்தர் சிங்கும் வேறு பணிக்கு மாற்றப்பட்டார். காங்கிரசின் நோக்கம் நிறைவேறியது. ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் தி.மு.க. வோ, மற்ற கட்சிகளோ போபர்ஸ் ஊழல் விசாரணை வேகமாக நடைபெற வேண்டும் என்று வற்புறுத்தவில்லை. காங்கிரஸ் தயவில் பதவியில் நீடித்தால் போதும் என்ற நிலையைக் கையாண்டனர். இதன் விளைவாக தேவகௌடாவின் இரத்தத்தைக் குடித்து ருசி கண்ட காங்கிரசு காட்டேரி, தி.மு.க தலைவர் கருணாநிதியின் இரத்தத்தையும் குடிக்கத் துடிக்கிறது.

தமிழ் நாட்டில் தி.மு.க, அ.தி.மு.க ஆகிய இரண்டு கட்சிகளுடனும் மாறி மாறி கூட்டுச் சேர்ந்து அரசியல் ஆதாயம் அடைந்த காங்கிரஸ் கட்சி இப்போது தி.மு.க மீது பழி சுமத்தி அரசியல் ஆதாயம் அடைவதற்கு முயல்கிறது. தி.மு.க தலைவர் கருணாநிதி காங்கிரசு கட்சியுடன் கொண்ட உறவின் விளைவாகத்தான் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை உணரவேண்டும். காங்கிரசுடன் எக்கால கட்டத்திலும் இனி கூட்டு சேருவதில்லை என உறுதியெடுக்கவேண்டும்.

ஈழத்தமிழர் பிரச்சினையில் உறுதியான, தடம் புரளாத நிலையை கருணாநிதி எடுத்திருந்தால் அவருக்கு இந்தக் கதி வந்திருக்காது. 'ஈழத் தமிழர்களுக்கு ஆதரவு கொடுக்கவேண்டியது ஒவ்வொரு தமிழரின் நீங்காத கடமையாகும். அதைத் தான் நான் செய்தேன் என்று ஆணித்தரமாக அவர் கூறியிருக்க வேண்டும். மாறாக, மத்திய அரசு இந்தப் பிரச்சினையில் என்ன நிலையை எடுக்கச் சொன்னதோ அதைத்தான் நான் எடுத்தேன்' என்று கூறியது, அவருக்கு மட்டுமல்ல தமிழ் இனத்திற்கே தலைக்குனிவை ஏற்படுத்திவிட்டது. தனக்கு ஆபத்து வரும்போது மட்டும் தமிழினத்திற்கு ஆபத்து வந்துவிட்டது என்று கூப்பாடு போடுவதும், தமிழ் இனத்திற்கு ஆபத்துவந்தபோதெல்லாம் ஒதுங்கி நின்று வேடிக்கை பார்ப்பதும் இத்தகைய இக்கட்டான நிலைமையை அவருக்கு ஏற்படுத்திவிட்டது. ஆனாலும் தற்போது அடாத பழியை சுமத்தி தி.மு.க அரசைப் பதவி நீக்க காங்கிரசு செய்யும் முயற்சியை முறியடிக்கவேண்டியது, தமிழர்களின் கடமையாகும்.

காங்கிரசு மற்றும் அகில இந்தியக் கட்சிகள் எதுவானாலும் தமிழர்களுக்கு விரோதமான கட்சிகளே என்ற விழிப்புணர்வு ஒவ்வொரு தமிழருக்கும் ஏற்பட வேண்டுமென வேண்டிக்கொள்கிறேன்.

[signature]

**தனக்கு ஆபத்து வரும்போது மட்டும் தமிழினத்திற்கு ஆபத்து வந்துவிட்டது என்று கூப்பாடு போடுவதும், தமிழ் இனத்திற்கு ஆபத்துவந்தபோதெல்லாம் ஒதுங்கி நின்று வேடிக்கை பார்ப்பதும் இத்தகைய இக்கட்டான நிலைமையை கருணாநிதிக்கு ஏற்படுத்திவிட்டது.**




பிரெஞ்சு அரசால் அங்கீகரிக்கப்பட்டது

# பாரிஸ் தமிழர் கல்வி நிலையம்

CENTRE PARISIEN D'EDUCATION POUR LES TAMOULS

11வது வருட தொடர்ச்சியில்..

குறுகிய காலப் பகுதியில் நீங்கள் பிரெஞ்சு அறிவைப் பெற்றுக்கொள்ள

ஆரம்பமாகின்றன

**புதிய பிரெஞ்சு வகுப்பு**

ஆசிரியர்: கஜன்

ஆரம்பம்: 29.11.1997 சனிக்கிழமை

நேரம்: பிற்பகல் 4 மணி

அனுபவமுள்ள ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றது

**புதிய ஆங்கில வகுப்பு**

ஆரம்பம்: 29.11.1997 சனிக்கிழமை

நேரம்: பிற்பகல் 13 மணி

விரைவில் தையல் வகுப்பு

விரும்புவர்கள் உடன் பதிவு செய்துகொள்ளவும்

உங்கள் தொலைபேசித் தொடர்புகளுக்கு: 01 48 70 17 58

பகல் 1 மணி – இரவு 8 மணி

165 RUE DE CHARONNE, 75011 PARIS

M°: CHARONNE OU ALEXANDRE DUMAS

# முகாம்களிற்குள் முடங்கத் தொடங்கும் ஆக்கிரமிப்பு இராணுவம்

# யாழ். குடாவில் விடுதலைப் புலிகள் தொடர் தாக்குதல்கள்

போர்முனை ஆய்வு




சிறீலங்கா அரசாங்கம் தனது மூன்றாம் கட்ட ஈழப்போரில், முதலாவது மிகப் பெரிய இராணுவ நடவடிக்கையாக 'சூரியக்கதிர்' என்னும் குறியீட்டுப் பெயருடன் 1995ம் ஆண்டின் இறுதியில் யாழ்குடா மீது மேற்கொண்ட ஆக்கிரமிப்பைக் கருதியது. தனது முப்படைகளின் தொகையின் மூன்றில் ஒரு பகுதிக்கும் அதிகமானோரை இவ் இராணுவ நடவடிக்கைக்காக பல கட்டங்களாக யாழ் குடாவுக்குள் அனுப்பியது. விடுதலைப் புலிகளிடமிருந்து யாழ் குடாவை தாம் மீட்டெடுக்கின்றோம் அவர்கள் இனிமேல் யாழ் குடாவிற்குள் நடமாட முடியாதென்றும், தமிழ் மக்கள் தம்மால் விடுவிக்கப்பட்டுள்ளார்கள் என்றும், எக்காளமிட்டுக் கொண்டு சிறீலங்காவின் படைகள் யாழ் நகருக்குள் நுழைந்து கொண்டன. ஆனால் அங்கு மக்களைத்தான் காணவில்லை. இன்று பல்வேறு காரணங்களினால் அங்கிருந்து வெளியேறிய மக்களில் சிறுபகுதியினர் மீண்டும் திரும்பி வந்துள்ளனர்.



அன்று யாழ் நகருக்குள் இராணுவம் நுழைந்ததன் பின் தாம் தமிழ் மக்களை விடுதலைப் புலிகளிடமிருந்து காப்பாற்றுகிறோம் என்று ஒருபுறம் கூறிக் கொண்டு மறுபுறம் தாம் ஒரு ஆக்கிரமிப்பு இராணுவம் என்பதற்கு ஏற்ப காரியங்களை மேற்கொள்ளத் தொடங்கியது. யாழ் குடாவின் பிரதான நகரங்கள் உட்பட மக்கள் குடியிருப்புப் பகுதிகளை மையமாகக் கொண்ட பிரதேசங்களை சுற்றி வளைத்து தமது பிடியை இறுக்கிக் கொண்டது. விடுவிக்கப்பட்ட பகுதி, விடுவிக்கப்படாத பகுதி என யாழ் குடாவின பிராந்தியங்கள் பிரிக்கப்பட்டு தமிழ் மக்களின் நடமாட்டத்தினை முடக்கி ஒருவித திறந்த வெளிச் சிறை ஒன்றினை அங்கு ஏற்படுத்தியது.

யாழ் குடாவைக் கட்டுப்படுத்துவதானால், விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தை தடுக்க வேண்டுமானால் மக்கள் வாழும் பகுதிகளில் தமது அவதானிப்பை அதிகரிக்க வேண்டும் என்ற நிலையில் வல்வெட்டித்துறை, பருத்தித்துறை போன்ற பகுதிகளை உள்ளடக்கிய வடமராட்சி, சாவகச்சேரி, கொடிகாமம் போன்றவற்றை உள்ளடக்கிய தென்மராட்சி, காங்கேசன்துறை, தெல்லிப்பளை போன்ற பகுதி, மாதகல், பண்டத்தரிப்பு, வட்டுக்கோட்டை போன்ற பகுதிகளை உள்ளடக்கிய பகுதி மற்றும் யாழ் நகர், அதன் சுற்றுப்புறம் போன்றவற்றை உள்ளடக்கிய பகுதி போன்றவற்றை பிரதான மக்கள் குடியேற்றப் பிரதேசங்களாகக் கொண்டு அவற்றிற்கிடையே பெரும் தகரங்கள், கம்பி வேலிகள், மண்மூடைகள் போன்றவற்றைக் கொண்டு மிக நீளமான பாதுகாப்பு வலயங்களை ஏற்படுத்தி மக்கள் நடமாட்டத்தை தடுத்து தமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொண்டனர்.

சிறீலங்கா இராணுவமானது பெருமளவிலான தனது ஆட்பலத்தை குடாநாட்டிற்குள் முடக்கியிருந்த போதிலும் மேற்கூறிய குடியிருப்புப் பகுதிகளைத் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களை அவர்களால் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. இக் குடியிருப்புப் பிரதேசங்களுக்கு இடையேயான பகுதிகளில் கூட, அதாவது வடமராட்சிக்கும் தென்மராட்சிக்கும் இடையே உள்ள பகுதிகள், அதே போல் தெல்லிப்பளை, கன்னாகம் போன்ற பகுதிகளிலிருந்து யாழ் நகர் வரையிலான பகுதிகள், மற்றும் மாதகல், பண்டத்தரிப்புப் பிரதேசங்கள் தவிர்ந்து சுழிபுரம் உட்பட மானிப்பாய் வீதியில் யாழ் ஆனைக்கோட்டை வரையான பகுதிகளில் இராணுவம் சில மட்டுப்படுத்தப்பட்ட ரோந்துகளையும், சுற்றி வளைப்புக்களையும் மேற்கொள்வதையும் தவிர, வேறு எதையும் செய்வதில்லை. சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை மூலம் தமிழ் மக்களை ஆக்கிரமித்து, விடுதலைப் புலிகளை யாழ் குடாவிலிருந்து அப்புறப்படுத்த முனைந்த சிறீலங்கா இராணுவம், இன்று தாம் விரித்த வலையில் தாமே விழுந்து தமது சிறைக்குள் தாமே அகப்பட்டு தம்மைக் காப்பாற்றிக் கொள்ள பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை நடைபெற்று சரியாக இரண்டு வருடங்களின் பின் இராணுவம் மீண்டும் யாழ் குடாவில் பெரும் தாக்குதல்களை சந்திக்கத் தொடங்கியுள்ளது. யாழ் குடாவின் இன்றைய நிலைக்கு பெருநிலப் பகுதியில் இராணுவ நடவடிக்கைகளும காரணம் என்ற போதிலும், விடுதலைப் புலிகளின் யாழ் குடா இராணுவ நடவடிக்கைகள் முற்றுமுழுதான வேறுபட்ட பல அணிகளினால் மேற்கொள்ளப்படும் நீண்டநாள் திட்டங்களின் விளைவே ஆகும். பெருநிலப் பகுதியில் 'ஜெயசிக்குறுய்' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் சிறீலங்கா மூன்று முனைகளில் தாக்குதல் களங்களை திறந்து விடுதலைப் புலிகளின் ஆட்பலத்தை சிதறவைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அதேவேளை விடுதலைப் புலிகள் அந்த மூன்று தாக்குதல் களங்களிலும் உறுதியான எதிர்ப்பினை வெளிக்காட்டி, இராணுவத்திற்கு எதிராக யாழ் குடாவில் நான்காவது தாக்குதல் களத்தையும் திறந்துள்ளார்கள்.

**யாழ் குடாவிலிருந்து அப்புறப்படுத்த முனைந்த சிறீலங்கா இராணுவம், இன்று தாம் விரித்த வலையில் தாமே விழுந்து தமது சிறைக்குள் தாமே அகப்பட்டு தம்மைக் காப்பாற்றிக் கொள்ள பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.**

யாழ் குடா ஆக்கிரமிக்கப்பட்ட இரண்டுவருட காலத்திற்குள் வடமராட்சியின் சில பகுதிகள், வலிகாமத்தின் சில பகுதிகள், அதேபோன்று தென்மராட்சியின் பெரும்பகுதிகளிலும் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் இருந்து வந்துள்ளன. ஆனால் பெருமளவிலான தாக்குதல்களை இராணுவத்திற்கெதிராக அவர்கள் நடத்தியிருக்கவில்லை. சிறீலங்கா இராணுவமும் மேற்கூறப்பட்ட பகுதிகளில் தமக்குப் பாதுகாப்பு இல்லை என்ற காரணத்தினால் பெருமளவிலான தமது நடமாட்டத்தை அங்கு குறைத்துக்கொண்டிருந்தனர். ஆனால், கடந்த சில மாதங்களாக யாழ் குடாவில் இராணுவம் எதிர்பாராத, இராணுவ நடமாட்டம், பாதுகாப்பு உச்ச நிலையில் இருக்கும் பல பகுதிகளில் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. நாகர்கோவில் முதல் வெற்றிலைக்கேணி வரையிலான வடமராட்சியின் தென் கரைப் பகுதி விடுதலைப் புலிகளின் முற்றுமுழுதான கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருப்பதாக சொல்லப்படுகிறது. அதேபோன்று வல்லிபுரம், மாமுனை போன்ற பகுதிகளில் அவர்களின் நடமாட்டம் அதிகரித்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது. தென்மராட்சியைப் பொறுத்தவரை ஏற்கனவே பல பகுதிகள் விடுதலைப் புலிகளின் நடமாட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளாகவே இருந்துள்ள போதிலும், இன்று இப் பகுதிகளில் மாத்திரமல்ல, சாவகச்சேரி உட்பட்ட நகரப் பகுதிகளிலும் அவர்கள் தமது நடவடிக்கைகளை விஸ்தரித்துள்ளார்கள். கடந்த சில வாரங்களாக இராணுவத்திற்கு எதிரான தாக்குதல்களில் தென்மராட்சி பெரும்பங்கினை வகித்திருந்தது குறிப்பிடத்தக்கது. இறுதியாக கச்சாய் பகுதியில் நடந்த ஒரு தாக்குதலின்போது அவ்விடத்திற்கு செல்ல முடியாத உதவி இராணுவத்தினர், தமது நீண்டதூர எறிகணைகளை கோண்டாவில் பகுதியிலிருந்து மேற்கொண்டதுவும் தென்மராட்சியில் அவர்களது பிடி தளர்ந்து வருவதையே சுட்டிக்காட்டுகிறது. இப்படியாக வடமராட்சி, தென்மராட்சி, வட்டுக்கோட்டை, சங்கானைப் பகுதிகளில் பல தாக்குதல்களை இராணுவத்திற்கு எதிராக மேற்கொண்ட விடுதலைப் புலிகள், தற்போது யாழ் நகரப் பகுதிகளிலும் தமது நடவடிக்கைகளை விரிவுபடுத்தியுள்ளனர். யாழ் நகரப் பகுதிகளுக்குள் விடுதலைப் புலிகளின் வருகையை தடுத்து நிறுத்த சிறீலங்கா இராணுவம் பல வழிகளிலும் முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது. பூநகரிப் பகுதியினூடாக கொழும்புத்துறை, அரியாலை பகுதிகளால் விடுதலைப் புலிகள் ஊடுருவக் கூடும் என்ற அச்சத்தினால் அப் பகுதிகளின் சில இடங்களிலிருந்து மக்கள் வெளியேற்றப்பட்டு அப் பிராந்தியம் சூனியப் பிரதேசமாக்கப்பட்டுள்ளன. யாழ் குடாவிற்குள் மட்டுமல்லாமல் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் தீவகப் பகுதிகளிலும் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளதானது. அவர்களது படையணிகள் தீவகப் பகுதிகளை தமது தளங்களாக பயன்படுத்துவதை காட்டுவதாக பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு இராணுவ அதிகாரி கூறியிருந்தார். யாழ் குடாவிற்குள் விடுதலைப் புலிகளின் அணிகள் சாதாரணமாக நடமாடுவது, குடாநாட்டில் தினமும் ஒன்றுக்கு மேற்பட்ட தாக்குதல்கள் நடாத்தப்படுவதும் குறிப்பிடத்தக்கது. இம்முறை மாவீரர்நாள் நிகழ்வுகள் அங்கு நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் அவர்களால் விடுக்கப்பட்டுள்ளதும் அவதானிக்கத்தக்கது.

சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை முடிவின்பின்பும், சிறீலங்கா அரசாங்கத்தில் பேச்சுவார்த்தை முன்னெடுப்புக்களின் போதும் யாழ் குடாவில் உள்ள தனது படைகளை சிறீலங்கா மீளப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும், அவைகள் அவ் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கும் முன் இருந்த நிலைக்கே செல்ல வேண்டும் என்றும் விடுதலைப் புலிகள் தொடர்ந்து கோரியிருந்தனர். இன்றைய நிலையை உற்று நோக்கினால் வெகுவிரைவில் விடுதலைப் புலிகளால் சிறீலங்கா இராணுவம் தனது பழைய நிலைகளுக்கு துரத்தியடிக்கப்பட்டு யாழ் மண் மீண்டும் விடுதலை பெறும் என்பது உறுதியானது. இந்நிலை வெகுவிரைவிலேயே தோற்றுவிக்கப்படும். ★

**பாடசாலை மாணவர்களுக்கான Maths, Physique, Biologie, Chimie, Anglais, Français, Informatique வகுப்புகள்**

**6e, 5e, 4e, 3e.... Bac வரை**

சென்ற கல்வியாண்டில் எமது மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளார்கள்.

CP இலிருந்து CM2 வரை வீட்டுப்பாடங்கள் செய்ய, புத்தகங்கள் வாசிக்க, மொழி பேச எம்மை அணுகுங்கள். ஞாயிறு காலை 10.00 மணி முதல்

புதன்கிழமைகளில் பி.ப 2.00 மணியிலிருந்து பாடசாலை மாணவர்களுக்கான வகுப்புகள் Porte de Clignancourt இல் Informatique, Maths, Chimie, Physique, Français, Anglais

**சனி, ஞாயிறுகளில் வகுப்புக்கள் நடைபெறுமிடம்: 41, rue Didot, 75014 Paris. Métro: Pernety Tél: 01 42 57 23 56**

புதிய பிரெஞ்சு வகுப்பு: ஞாயிறு காலை 10.00 மணி வகுப்பு ஆரம்பமாகியுள்ளது.
02.12.97 செவ்வாய் பி.ப 3.30 மணி (Paris 18e)
06.12.97 சனி மாலை 4 மணி

புதிய ஆங்கில வகுப்பு: 06.12.97 சனி, ஞாயிறு காலை 10.00 மணி, பி.ப 3.30 மணி

புதிய கம்பியூட்டர் வகுப்புக்கள்:
12.11.97 புதன் பி.ப 3.30 மணி
01.12.97 திங்கள் பி.ப 3.30 மணி
07.12.97 ஞாயிறு மாலை 4 மணி
Windows'95, Word, Excel ஆரம்ப வகுப்பு.

**கராத்தே வகுப்புக்கள்: 07.12.97 ஞாயிறு பி.ப 3.00 மணி.**


சிறுவர்களுக்கான தமிழ், ஆங்கிலம், கணித வகுப்புக்கள் பிரதி சனிதோறும் பி.ப 1.30 மணி

நடனம், வயலின், வாய்ப்பாட்டு, ஓர்கன் வகுப்புகள் சனி பி.ப 1.30 மணி

திங்கள், புதன் வகுப்புக்கள் நடைபெறும் இடம்: 4, Rue Esclagnon, 75018 Paris. - M°: Porte de Clignancourt Eglist Saint Helène

புதிய பிரெஞ்சு வகுப்பு 02.12.97 செவ்வாய் பி.ப 3.30 மணி

# ஐரோப்பிய நாடுகள் மற்றும் கனடாவில் மாவீரர் நாள் - 1997



ஐரோப்பாவில் இடம்பெறும் அனைத்து மாவீரர்நாள் நிகழ்வுகளிலும் தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்துள்ள சிறப்புப் பேச்சாளர் **திரு.பழ. கருப்பையா** (முன்னாள் ம.தி.மு.க. பிரமுகர்) அவர்கள் கலந்து கொள்வார்.

## பிரான்ஸ்

**காலம்: 30.11.1997 ஞாயிறு**
**நேரம்: பிற்பகல் 4.00 மணி**
**இடம்: L.S.C**
**144/146, Av. Du Président Wilson,**
**93210 La Plaine St. Denis**
**(M°: Porte de la Chapelle**
**RER B: La Plaine Voyageurs**

* * *

**காலம்: 29.11.1997 சனிக்கிழமை**
**நேரம்: மாலை 15.00 மணிக்கு.**
**இடம்: La Maison Des Associations**
**La Place Des Orphelins.**
**67000 Strasbourg.**

* * *

**காலம்: 30.11.1997 ஞாயிறு பி.ப. 14.00 மணி**
**இடம்: Foyer Altram**
**22, Rue de Provence,**
**Mulhouse**

## பிரித்தானியா

**காலம்: 29.11.97 சனிக்கிழமை**
**நேரம்: மாலை 6.30**
**இடம்: Waterfront Leisure Centre**
**High Street, Woolwich,**
**London SE 18.**

(Bus Routes: 51, 53, 122, 96,177,180,272,161 British Rail: Woolwich Arsenal *or* Woolwich Dockyard. Woolwich Ferry: South Side.

## நெதர்லாந்து

**காலம்:** 30.11.97 ஞாயிறு மாலை 3 மணி
**இடம்: De Rijswijkse Schouwburg,**
**Generaal Spoorlaan 10,**
**Rijswijk (Den Haag)**
(Rijswijk புகையிரத நிலையத்திற்கு அருகாமையில்)

## டென்மார்க்

**இடம்** - Sonderagerskolen, Herning
**காலம்** - 29.11.97 சனிக்கிழமை 16.00 மணி

## நோர்வே

**இடம்** - SamfunnShuset, Oslo.
Arbeidrsamfunncts plass 1, OSLO.
**காலம்** - 29.11.97 சனிக்கிழமை
மாலை 6.00 மணி

## கனடாவில் மாவீரர்நாள் நிகழ்வுகள் நடைபெறும் இடங்கள்

**26.11.97 புதன்கிழமை**
இமாகுலேற் கொன்செப்ஸன் சேர்ச்.
2 றிட்சார்ட்ஸன் அவெனியு,
(கில்/ எக்கிளின்ரன்)

* * *

**27.11.97**
**வியாழக்கிழமை**
தமிழீழச் சங்க சபா மண்டபம்
861 புரோட்வியூ அவெனியு.

* * *

மாலை: 7.00 - 9.00
Rose avenue Community & Recreation centre.
675 Ontario Street.
Wellesley & Parliament.

* * *

மாலை: 5.00 - 9.00
Jaffna cooperative Home
2384 Rugby road,
MISSISSAGUA.

* * *

மாலை: 5.00 - 9.00
Winston Churchill collegiate
2239 Lawrence Avenue east,
SCARBOROUGH.

* * *

மாலை: 7.00- 9.00
Tamil cooperative Home
20 Wade avenue,
Toronto.

* * *

மாலை: 7.00 - 9.00
15 Club Golf way,
Don Mills.
Donmills & Elington.

* * *

மாலை: 7.00 - 9.00
Immaculate - Conception church
2 Richardson Avenue.
(Keele / Eglinton)

* * *

மாலை: 5.30 - 9.00
Auditorium, Tamil Eelam Society of Canada.
861 Broadview avenue,
Toronto.

**காலம்: 29.11.97: சனிக்கிழமை மாலை 5.00 -10.30**
**North Albion Collegiate Lustitute, 2580 Kipling Avenue, Kipling.**
**காலம்: 30.11.97 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00-10.30**
**Woburn Collegiate. 2222 Ellesmere Road, Scarborough**





ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# மரணத்தை வென்ற மாமனிதர்கள்

உலகில் பிறந்த எல்லா உயிர்களும் ஒரு நாள் இறப்பது இயற்கை. அதற்கு மனிதன் மட்டும் விதிவிலக்கல்ல. ஆனால் இறப்பை எதிர்கொள்வதில் மனிதனுக்கு மற்ற உயிர்கள் மற்றும் விலங்குகளுக்கும் வேறுபாடுண்டு.

விலங்குகளும் மற்ற உயிர்களும் எப்போதும் இயற்கையோடு இசைந்தே வாழ்கின்றன. இயற்கையின் அனர்த்தங்களால் சுலபமாக அழிவையும் தேடிக்கொள்கின்றன. மனிதன் மட்டும் இயற்கையை வெற்றிகொண்டு அதை அடக்கி வாழப்பழகிக் கொள்வதன் மூலம் அவற்றிலிருந்து தன்னை வேறுபடுத்திக் கொள்கின்றான்.

இந்த இயற்கையை வெற்றிகொள்ளும் தன்மையென்பது மனிதனுக்கு தனக்காக வாழும் ஆசையைக் கொடுக்கிறது. வயது முதிர்ந்து சாகப்போகும் நிலையில்கூட இன்னும் சிறிதுகாலம் வாழவேண்டும் உலக சுகங்களை அனுபவிக்க வேண்டும் என்றே மனிதன் விரும்புகின்றான்.

ஆனால் வாழவேண்டிய வயதில், உலக சுகங்களை அனுபவிக்கவேண்டிய வயதில் தங்களுடைய நாட்டிற்கும் தங்களுடைய தேசத்தின் விடுதலைக்காகவும் தங்களுடைய மக்களின் எதிர்காலச் சந்ததியின் நலனுக்காகவும் தங்களையே தற்கொடையாகத் தருபவர்களையே வரலாறு, மாவீரர்கள் என்கிறது.

இன்று நாங்கள் தமிழீழ தேசிய இனத்தவர்கள், தமிழீழ தேசத்தின் குடிமக்கள் என்று உரிமையோடு சொல்லிக் கொள்வதற்கு, தங்களுடைய உடலையும், உயிரையும் உரமாகத் தந்த மாவீரர்களின் அளவிடப்படமுடியாத, எழுத்துக்களால் வர்ணிக்கப்பட முடியாத தியாகமே காரணமாகும்.

25,26,27–11–97 ஆகிய மூன்று தினங்களும் அந்த மாவீரர்களின் ஈகையை நினைவு கூர்ந்து நமது தேசத்திலும் புலம் பெயர்ந்த நாடுகளிலும் மாவீரர் தினம் நினைவுகூரப்படுகிறது. இந்தப் புனித வாரத்தில் நாமும் அந்த மாமனிதர்களுக்கு சிரந்தாழ்த்தி வீரவணக்கம் செலுத்தி, அவர்களது நாட்டுப் பற்றையும், கொள்கை உறுதியையும், ஈகை மனப்பான்மையையும் வழிகாட்டலாக எடுத்துச் செயற்படுவோம் என்று உறுதி எடுத்துக்கொள்வோம்.

## இவ்வார தலைப்புகள்

### The Indian Express

20 நவம்பர் 1997

#### ஐ.தே.க. உள்நோக்கம்

....குறிப்பிட்ட இடைவெளிக்குள் வடக்கில் புலிகளுக்கு எதிரான அரசின் தாக்குதல் நடவடிக்கை முழுமையாக இயக்கமற்ற நிலையை அடைந்தால் அது குமாரதுங்கா விடுதலைப்புலிக்கு எதிரான இராணுவ வெற்றியை உரிமை கொண்டாடுவதைத் தடுத்துவிடும் என ஐ.தே.க. கருதுகின்றது. இது, எந்த சாத்தியமான அரசியல் தீர்வும் புலிகளின் பங்குபற்றுதல் இன்றி சாத்தியமற்றது என, 'உள்நோக்கம் மறைக்கப்பட்ட' அடிப்படையில், விக்கிரமசிங்கா (ஐ.தே.க.) வேண்டுகோள் விடுத்துவரும் விடயத்திற்கு ஏற்ப சிறீலங்கா அரசை விடுதலைப் புலிகளுடன் பேச நிர்ப்பந்திக்கலாம். ஆனால் பெரும்பாலான சிறீலங்காவினர் தற்போது உணர்ந்துள்ளதுபோல், புலிகளுடன் பேசுவதானது எப்போதும் முன்னைய அரசுகள் தடுக்கி விழுந்ததுபோல் ஆபத்தானது....

### சரிநிகர்

19.11.97

#### துக்ளக் 'சோ' ராமசாமி வழங்கிய விசேட பேட்டி

**கேள்வி:** தொடரும் யுத்தத்தால் தமிழர்கள் படுபாதகமாகப் பாதிக்கப்படுகின்றனர். சிறீலங்கா அரசின் நடவடிக்கை பற்றி உங்கள் கருத்து என்ன?

**பதில்:** ஒரு தீவிரவாத இயக்கம் இருக்கும்போது அரசு அதனது இராணுவத்தை 'கட்டாயம்' பாவித்து அதனை அடக்கவேண்டும். விடுதலைப் புலிகளுக்கு எதிராக படைகளை பாவிப்பதற்கு எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை..

**கேள்வி:** விடுதலைப்புலிகளை சிறீலங்கா அரசால் முழுமையாக அழிக்க முடியுமா?

**பதில்:** அப்படி அழிக்க வேண்டும். பஞ்சாப் பயங்கரவாதிகள் அழிக்கப்படவேண்டுமென கூறினேன். காஷ்மீர் பயங்கரவாதிகள் அழிக்கப்பட வேண்டும் எனக் கோரினேன். அதுபோல் எனது சிறீலங்கா நிலைப்பாடு வித்தியாசப்படாதது.

**கேள்வி:** இந்தியா தலையிடுவதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளனவா?

**பதில்:** இப்போது கூட இது நடக்கலாம். எல்லா விடயங்களும் பத்திரிகைக்கு வராததால் குஜ்ராலும் சந்திரிகாவும் என்ன கதைத்து கொண்டார்கள் என எமக்கு தெரியாது.

### THE HINDU

India's National Newspaper

18 நவம்பர் 97

#### இந்திராவும்-ராஜீவும் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதமும் பணமும் வழங்கினர்

—அத்வானி

தமது அரசு விடுதலைப் புலிகளுக்குக் கொடுத்த ஆதரவு நியாயப்படுத்தக்கூடியது; தி.மு.க.-வின் ஆதரவு அப்படியானதல்ல என்ற காங்கிரஸ் கட்சியின் கருத்தை, பாரதீய ஜனதா கட்சியின் தலைவர் திரு. அத்வானி பெங்களுரில் இருந்து விடுத்த அறிக்கையொன்றில் சாடியுள்ளார்.

திரு. அத்வானியின் இவ்வறிக்கை, எவ்வாறு பாரதீய ஜனதா கட்சி ஜெயின் கமிசன் அறிக்கையில் உள்ள 'கணைகளை' எப்படி பாவிக்கப் போகின்றது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

### திவயின (சிங்களம்)

20 நவம்பர்

#### சிங்கள தேசிய வீரர்கள்...?

...எப்போதும் புலிகளை தோற்கடிக்கமுடியாது என சிலர் முதலைக் கண்ணீர் வடிக்கும் நேரத்தில் இந்த வெற்றிக்காக (மாங்குளத்தைக் கைப்பற்றியதாகச் சொல்லப்படும்) உயிர் கொடுத்த தேசிய வீரர்களுக்கு மரியாதை செலுத்துகின்றோம்

நாங்கள் எல்.ரி.ரி.ஈ யினர் வெறும் பயங்கரவாத இயக்கம் என்பதை திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகின்றோம். ஆனால் ஒவ்வொரு தடவையும் நாங்கள் இவ்வாறு சொல்லும்போது நாங்கள் இனவாதிகளாகவும், சமாதான எதிர்ப்பாளர்களாகவும் வர்ணிக்கப்பட்டோம்.

உலகத்தின் கோபத்தைச் சம்பாதித்துள்ள இந்த 'காட்டுமிராண்டிகள்' தமது இறுதி நேரத்தினை நெருங்கிச் சென்றுகொண்டிருக்கிறார்கள்.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive




# தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்

ஆசிரியர் ஈழமுரசு,

வைகாசி 13-19 நவம்பர் 97 ஈழமுரசு பத்திரிகையில் காக்கைவன்னியன் முதல் கதிர்காமர் வரை தொடர் கட்டுரையில் தவறுகள் பல உண்டு. உண்மைக்குப் புறம்பான விசமத்தனமாக பல விடயங்கள் கூறப்பட்டுள்ளன.

சீனத்தில் சங்காயமாக மாறிய சங்கானை என்று கட்டுரையில் குறிப்பிடும் சங்கானையில் பிறந்து வளர்ந்து வாழ்ந்தவன் என்றவகையிலும் அங்கு நடைபெற்றதாகக் கூறப்படும் சாதிச்சண்டை என வர்ணிக்கப்படும் இரு சமூகங்களுக்கிடையிலான மோதல்களை சமாதான ரீதியாக நிறுத்த முயற்சித்து வெற்றி கண்டவன் என்ற வகையிலும் சில விடயங்களை, உண்மைகளைக் கூற விரும்புகிறேன். கேள்விச் செவியன் ஊரைக்கெடுத்தான் என்பது போல், எங்கோ கேட்டவைகளை அல்லது படித்தவைகளை வைத்துக்கொண்டு பொய்களையும் புனை கருட்டுகளையும் இறக்கித்தள்ளுவது பேனா பிடிப்பவர்களுக்கு அழகல்ல. அது பேனா பிடிப்பவர்களுக்கே அவமானம். கருத்துச் சிதைவு செய்த நக்கீரனும் இப்படியான ஒரு அவமானச்சின்னமே!

வடபகுதியிலேயே முற்போக்குக் கருத்துக்கள் முதன் முதலில் முளைவிட்ட பூமிகளில் சங்கானைக் கிராமமும் ஒன்றாகும். 1943-களில் பெரியார் ஈ.வே.ராமசாமியை அழைத்து வந்து சாதிய எதிர்ப்பு மகாநாடும் பகுத்தறிவு மறுமலர்ச்சி கருத்துக்களை மலரவிட்டு, தழுவிய பூமி அது.

ஏனைய வடபகுதிக் கிராமங்களுடன் ஒப்பிடுகையில் சங்கானைக் கிராமத்தில் ஜாதிய மேலாதிக்கத்தின் தாக்கம் மிகமிகக் குறைவு. காரணம் அங்கே 18 வித்தியாசமான ஜாதிப்பிரிவுகள் இருந்தும், ஒவ்வொரு ஜாதிப் பிரிவும் மற்றைய ஜாதிப் பிரிவுகளில் தங்கி அவர்களுடன் இணைந்து, அனைத்து வாழவேண்டிய சூழ்நிலை. ஆம்! ஒவ்வொரு ஜாதியப் பிரிவினரும் ஏனைய ஜாதியப் பிரிவினருடன் இணைந்து வாழவேண்டிய சமூக அமைப்பே சங்கானையில் நிலவியது.

சங்கானைச் சந்தையில் ஒரு பொதுக்கிணறு உண்டு. அந்த நந்நீர் கிணற்று நீரை அயலில் உள்ளவர்கள் வந்து எடுத்துச் செல்வார்கள். சிறுபான்மைத் தமிழர் என நாமகரணம் செய்யப்பட்ட ஜாதி குறைந்த மக்கள் எல்போர் அக்கிணற்றில் நீர் அள்ள அனுமதிக்கப்படாத காலம் அது.

இதனால் மனம்நொந்து இதற்கு ஒரு முடிவு காண வேண்டும் என்ற நோக்குடன் 'மனித உரிமைக் கழகம்' என்று ஒரு அமைப்பை 1958-ம் ஆண்டு அமைத்தோம். இக்கழகத்தில் தலைவராக நானும், செயலாளராக சிறுபான்மைச் சமூகத்தின் ஒரு பிரிவைச் சேர்ந்தவரான சமாதான நீதவான் இ. நடேசன் செயலாளராகவும், இன்னொரு சிறுபான்மைப் பிரிவைச் சேர்ந்த ஆசிரியர் ஐயம் பிள்ளை பொருளாளராகவும் செயல்பட்டோம். இந்த மனித உரிமைக் கழகத்தில் சங்கானைக் கிராமத்தில் உள்ள 18 ஜாதிப்பிரிவு முக்கியஸ்தர்களும் மனம் விரும்பி உறுப்பினராகச் சேர்ந்ததுடன், கழக செயற்பாட்டுக்கு வசதிபடைத்தோர் தாராளமாக நிதி உதவியும் செய்தனர்.

எமது முதல் நடவடிக்கையாக சங்கானைச் சந்தை பொதுக்கிணற்றில் தாழ்த்தப்பட்டோர் எனப்படுவோர் நீர் அள்ளும் உரிமையைப் பெற்றுத்தருவது என்பதாகும். பல்வேறு ஜாதியப் பிரிவு தலைவர்கள், பிரமுகர்கள் எல்லோரும் கூடிநிற்க, தாழ்த்தப்பட்டோர் என முத்திரையிடப்பட்ட அன்னையர் பொதுக்கிணற்றில் நீர் எடுத்தனர். ஆக, ஜாதிய மேலாதிக்கத்திற்கு முதல் அடி கொடுக்கப்பட்டதே 1958-இல்தான் என்பதை நக்கீரனால் புரிந்துகொள்ள முடியாமல், தான் ஏதோ நேரில் கண்டு கொண்ட சம்பவம்போல் 60-70-களில் நடந்த சம்பவங்களுக்கு ஜாதிச் சாயம்பூச முற்பட்டு தன் முகத்தில் தானே கரிபூசிக்கொண்டதுடன், வாசகர்களை முட்டாள்களாகவும் ஆக்க முயற்சிக்கிறார்.

ஜாதியத்திற்கு எதிரான போராட்டத்தின் அடுத்த கட்டம் 1959-இல் வந்தது. பல தேநீர் கடைகளில் ஏறி இறங்கி ஜாதியத்தின் பெயரால் போத்தல்களில் தேநீர் கொடுப்பதை நிறுத்தும்படியும் மனிதரை மனிதர் சமத்துவமாக நடத்தும்படியும் கோரினோம். பலன், தோல்வியில்தான் முடிந்ததென்பதை ஒப்புக்கொள்வதில் வெட்கமில்லை. ஆனாலும் எமது முயற்சியை நாம் கைவிடாமல் மாற்றுவழி சிந்தித்தோம். அதன் பிரகாரம் அன்றைய தமிழரசுக் கட்சித் தூண்களில் ஒருவரும், முற்போக்குச் சிந்தனை கொண்டவரும், வறுமையில் வாடிக்கொண்டிருந்தவருமான உயர்சாதி வேளாளர் எனப்படும் மரபில் பிறந்த திரு. சின்னையா துரையப்பா மூலம் ஒரு சமத்துவ உணவகத்தைத் திறந்தோம். மீண்டும் சொல்கிறேன். இது 1959-ம் ஆண்டின்கதை; பல்வேறு ஜாதிப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் இந்த உணவகத்திற்கு ஆதரவு தந்தனர். தத்தமது வீடுகளிலேயே உணவருந்தும் நிலை இருந்தும்கூட பல உயர்சாதி வேளாளர் எனப்படுவோர் இவ்வுணவகத்திற்கு வந்து உணவுண்பர். காரணம், தாங்கள் இவ் உணவகத்தையும், சாதி பேதமற்ற சமத்துவ நோக்கை தாம் ஆதரிப்பதாக காட்டிக் கொள்வதற்காகவே! இந்த சமத்துவ உணவகத்திற்கு எக்கச்சக்க வருமானம்.

முன்பே சொன்னேன், சங்கானையில் ஜாதியம் பெரிதாக இருக்கவில்லை. சமத்துவ சிந்தனை பரவலாகவே எங்கும் மக்களிடம் இருந்தது. சிரட்டையில் தேநீரோ, சாப்பாடோ கொடுப்பது நான் அறிந்தவரை இல்லை. நான் பிறப்பதற்கு முன்போ அல்லது நான் அறிவு தெரிந்து சிந்திக்கும் காலத்திற்கு முன்பிருந்திருக்கலாம். எனக்குத் தெரியாது. ஆனால் சிரட்டையில் தேநீரோ... உணவோ கொடுக்கும் ஒரு காட்சியை என் அறிவு தெரிந்த நாளிலிருந்து நான் காணவேயில்லை. இது சத்தியம்.

நக்கீரனார் புலம்பிய ஜாதிக் கலவரத்திற்கு வந்தால், அது ஜாதிக்கலவரமேயல்ல. அது வேளாளர் எனும் மேட்டுக் குடியினர் சம்பந்தப்படாத இரு குறைந்த சாதிகளுக்கிடையில் ஏற்பட்ட மோதல் என்பதே சரியான கணிப்பாகும்.

சக்கரவர்த்தி இராசலிங்கம் நாகேசு (சுவிஸ்)

# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

பெரியார் ஈ.வே.ராமசாமி, இந்துத்துவத்தையும், பார்ப்பனியத்தையும் கேள்விக்குள்ளாக்குவதே சாதி அமைப்பையும் தீண்டாமையையும் ஒழிப்பதற்கு ஒரே வழி என்று கண்டுகொண்டார். அதனால் 'கடவுளை நம்புகிறவன் முட்டாள்' என்றும், பாம்பையும் பார்ப்பானையும் கண்டால் பாம்பை விட்டுப் பார்ப்பானை அடி என்றும், பாமரமக்கள் புரிந்துகொள்ளும் விதத்தில் ஒரு சமூக அரசியல் பிரச்சார இயக்கமாக இதை நடத்தினார்.

## பகுதி II

42

# 1960-களுக்கு முன் நடந்த தீண்டாமை ஒழிப்பு முயற்சிகள்

நாகண்முகதாசன் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சியின் வெகுஜன அமைப்பான தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் 1960-களில் யாழ்ப்பாண சாதி அமைப்புக்கு எதிராக போராட்டம் நடத்துவதற்கு முன்பாகவே, யாழ்ப்பாண வாலிபர் சங்கம் உட்பட பல்வேறு அமைப்புக்கள் தீண்டாமை ஒழிப்பு என்ற பெயரில், சமபந்தி போசனம், ஆலயப் பிரவேசம், சிறிய அளவிலான தேநீர்க்கடைப் பிரவேசம் என்பவற்றை நடத்தியிருக்கின்றன.

1930-களிலே இந்த முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 1960-கள் வரை சாதி அமைப்பும் அதன் அடக்குமுறை வடிவமான தீண்டாமையும் தொடர்ந்து இறுக்கமான கட்டுக்கோப்புக்குள் இருக்கவே செய்தன.

அதற்குக் காரணம் அதுவரை சாதி அமைப்புக்கும் தீண்டாமைக்கும் எதிராக நடந்த போராட்டங்கள், அவற்றின் அடிப்படைக் காரணங்களைத் தகர்த்தெறிவதற்கான அடித்தளத்தைக் கொண்டிருக்காததேயாகும்.

1960 களுக்கு முன் சாதி ஒழிப்பு,' தீண்டாமை ஒழிப்பு போராட்டங்களை நடத்தியவர்கள் இரண்டு பேருடைய முன்மாதிரிகளின் அடிப்படையிலேயே தங்களுடைய போராட்டங்களை நடத்திவிருந்தார்கள்.

அதில் ஒருவர் மகாத்மா காந்தி, மற்றவர் பெரியார ஈ.வே.ராமசாமி.

மகாத்மாகாந்தி ஒருபோதும் சாதி அமைப்பை ஒழிக்க வேண்டும் என்று விரும்பியது கிடையாது. வர்ணக் கோட்பாட்டையும், குலத்தொழில் முறையையும் அதிகமாக வற்புறுத்திய இந்த நூற்றாண்டின் இந்தியத் தலைவர்களில் காந்தி முக்கியமானவர். அவருடைய தீண்டாமை ஒழிப்பு முயற்சிகள் அடக்குபவனுக்கு பங்கம் வராமல், அடக்கப்படுபவரின் போராட்ட உணர்வை 'மழுங்கடிக்கும்' முயற்சிகளாகவே இருந்தன.

தாழ்த்தப்பட்டவர்கள் எல்லோரும் 'ஹரி — ஜனங்கள்' அதாவது கடவுளின் (விஷ்ணு) மக்கள் என்று பிரகடனப்படுத்தியதன் மூலமும் சமபந்தி போசனம், ஆலயப்பிரவேசம் என்பவற்றின் மூலமும் தீண்டாமை ஒழிந்து விடும் என்று காந்தி மற்றவர்களை நம்பும்படி சொன்னார். ஆனால் காந்தி இறந்து இன்றைக்கு 50 வருடங்களாகிவிட்ட பின்பும் இந்தியாவில் சாதி வெறி, அதிகளவில் தலை விரித்தாடுவதும் சாதிக் கலவரங்களால் இந்தியாவே தீப்பற்றி எரிந்துகொண்டிருப்பதும் எந்தளவுக்கு 'காந்தீயம் —தீண்டாமையை ஒழிப்பதற்கு உண்மையில் பாடுபட்டது என்பதற்கு சிறந்த உதாரணமாகும்.

மகாத்மா காந்தியோடு ஒப்பிடும்போது தமிழகத்தில் சாதி அமைப்புக்கு ஓர் அழுத்தத்தை, நெருக்கடியைக் கொடுத்தவர் பெரியார் ஈ.வே.ராமசாமி.

சாதி அமைப்பு என்பது அடிப்படையில் அடிமை மற்றும் நிலப்பிரபுத்துவச் சமூகத்தின் அம்சமாக இருந்த போதிலும், இன்றைய அரைநிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம் மற்றும் நவீன காலனித்துவச் சமூகத்தில் 'கலாச்சார ரீதியாகவே' தன்னை நிலை நிறுத்திக் கொண்டிருக்கிறது. இந்தக் கலாச்சார அம்சத்தில் அடித்தளமாக இந்துத்துவமே இருந்து வந்திருக்கிறது. இந்த இந்துத்துவத்தின் காவலர்களாக பார்ப்பனர்கள் இருந்து வருகின்றார்கள். என்வேதான் பெரியார் ஈ.வே.ராமசாமி, இந்துத்துவத்தையும், பார்ப்பனியத்தையும் கேள்விக்குள்ளாக்குவதே சாதி அமைப்பையும் தீண்டாமையையும் ஒழிப்பதற்கு ஒரே வழி என்று கண்டு கொண்டார்.

அதனால் 'கடவுளை நம்புகிறவன் முட்டாள்' என்றும், பாம்பையும் பார்ப்பானையும் கண்டால் பாம்பை விட்டுப் பார்ப்பானை அடி என்றும், பாமரமக்கள் புரிந்துகொள்ளும் விதத்தில் ஒரு சமூக அரசியல் பிரச்சார இயக்கமாக இதை நடத்தினார். பெரியாரது இந்த முயற்சி சாதி ரீதியாக ஒடுக்கப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களிடையே புத்துணர்ச்சியையும், தன்னம்பிக்கையையும் ஊட்டியது. ஆனால் பெரியார் வெறும் சமூக, அரசியல், பிரச்சார இயக்கமாக இந்த முயற்சியை மட்டுப்படுத்திவிட்டதால், பிற்காலத்தில் அது தேர்தலில் 'வாக்குகளைப் பெறுவதற்காக மக்களை சாதி ரீதியாக அணிதிரட்டுவது' என்கிற நிலையை உருவாக்கிவிட்டது.

யாழ்ப்பாணக்குடா நாட்டைப் பொறுத்தவரை காந்திய வழியைக் கடைப் பிடித்தவர்களே அதிகம். பெரும்பாலும் பிரித்தானிய காலனித்துவ அரசினால அறிமுகப்படுத்தப்பட்ட வாக்குச் சீட்டு அரசியலில் அதிக வாக்குகளைப் பெறுவதற்கு, இந்தக் கனவான்களும் சாதிரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களையும் சில விட்டுக் கொடுப்புகளைச் செய்து அரவணைத்துச் செல்ல வேண்டிய தேவை இருந்தது.

இவர்கள் ஆயிரம், ஆயிரத்து ஐநூறு வருடங்களுக்கு மேலாக அடக்கி ஒடுக்கி வைக்கப்பட்டு, உரிமை மறுக்கப்பட்ட மக்களுடைய குடியிருப்புக்களுக்குச் சென்று சிரமதானம் செய்தார்கள். அவர்களோடு ஒரே பந்தியில் அமர்ந்து உணவுண்டார்கள். அவர்களுடைய கிணறுகளில் தண்ணீர் அள்ளிக் குடித்தார்கள். அவர்களை அழைத்துக் கொண்டு ஆலயப் பிரவேசம் செய்தார்கள்.

வருடம் ஒரு முறை வரும் ஆலய உற்சவங்கள்போல் நடந்த இந்த தீண்டாமை ஒழிப்பு திருவிழாக்களைப் பார்த்து ஒடுக்கப்பட்ட மக்கள் 'அடே எவ்வளவு பெரிய சாதிமான்கள். எங்களையும் மனிதர்களாக மதித்து இதையெல்லாம் செய்திருக்கிறார்களே' என்று புளகாங்கிதம் அடைந்தது என்னவோ உண்மைதான். இந்தத் திருவிழாக்களின் பின்னணியில் அந்தக் கனவான்களுக்கு கிடைக்கவிருந்த அரசியல் பொருளாதார நலன்கள் பற்றி அறிந்துகொள்ளும் பக்குவம் அன்று மக்களிடம் இருக்கவில்லை.

மறுபுறத்தில் 'தம்முடைய தலைவர்கள் சாதி குறைந்தவர்களை சமத்துவமாக நடத்தச் சொல்கின்றார்களே' என்று சொல்லிக்கொண்டு சாதி பார்த்த யாருமே அந்தக் கைவிடவோ, தீண்டாமை கொடியது என்பதை ஒத்துக்கொள்ளவோ தயாராக இருக்கவில்லை. முக்கியமாக காந்திய வழியில் சாதிக்கும் தீண்டாமைக்கும் எதிராகப் போராடுகின்றோம் என்று விளம்பரப்படுத்திக்கொண்ட எந்த அரசியல் தலைவர்களும், தங்கள் பிள்ளைகளுக்கு கலப்புத் திருமணம் செய்து வைக்கவோ, சாதி அமைப்பின் கூர்மையை மழுங்கடிப்பதற்கு கலப்புத் திருமணம் செய்யும்படி தங்கள் கட்சியின் அமைப்பின் தொண்டர்களையும் உறுப்பினர்களையும் தூண்டுவதற்கோ முயலவில்லை.

ஒவ்வொரு தீண்டாமை ஒழிப்புத் திருவிழா நடந்த பின்பும், தாழ்த்தப்பட்ட மக்கள் குடியிருப்புக்களில் வேட்டைத் திருவிழா நடாத்தப்பட்டதுதான் 1960 க்கு முன்னுள்ள சாதி ஒழிப்பு வரலாறு.

தலைவர்கள் சொல்லிவிட்டார்கள். செய்து காட்டி விட்டார்கள் என்று நம்பிக்கொண்டு தேநீர் கடைகளுக்குச் சென்றவர்களுக்கு சுடுதண்ணீர் ஊற்றப்பட்டது. உயர் சாதியினருக்குரிய பொதுக் கிணறுகளில் தண்ணீர் அள்ள முயன்றபோது ஒடுக்கப்பட்ட மக்களுக்கென்றிருந்த குடிதண்ணீர் கிணறுகளில் விசம் கலக்கப்பட்டதும், குடிசைகள் தீக்கிரையாக்கப்பட்டதும், அவர்களது பயிர்கள் நாசமாக்கப்பட்டதும், அதையெல்லாம் கவனிக்க நேரமில்லாமல் 'ஐயா'மார்கள் கொழும்பு அரசியலில் 'பிஸி'யாக இருந்ததும்தான் கடந்தகால வரலாறு.

அகிம்சாவாதிகள் நடத்திய எல்லா சாதி ஒழிப்புப் போராட்டங்களும் முடிவில் ஒடுக்கப்பட்ட மக்களையும் அவர்களிடமிருந்த கொஞ்ச நஞ்ச சேமிப்புக்களையும், பொலீசுக்கும் நீதி மன்றத்தில் வழக்காட வக்கீல் ஐயாமாருக்கும் செலவு செய்யும் நிலையில்தான் இருந்தன.

பெரியார் வழியில் தீண்டாமையை ஒழிக்க யாழ். குடா நாட்டில் முற்பட்டவர்கள் மிக மிகக்குறைவு.

இருந்த ஒரு சிலரும், தங்களுடைய சைவப் பாரம்பரியத்தை கேள்விக்குறியாக்க விரும்பவில்லை. மாறாக, பெரியார் கொள்கையைப் பேசுவதும் இவர்களுக்கு ஒரு 'பாசன்'மாதிரியே இருந்தது.

- நக்கீரன்

மகாத்மாகாந்தி ஒருபோதும் சாதி அமைப்பை ஒழிக்க வேண்டும் என்று விரும்பியது கிடையாது. வர்ணக் கோட்பாட்டையும், குலத்தொழில் முறையையும் அதிகமாக வற்புறுத்திய இந்த நூற்றாண்டின் இந்தியத் தலைவர்களில் காந்தி முக்கியமானவர். அவருடைய தீண்டாமை ஒழிப்பு முயற்சிகள் அடக்குபவனுக்கு பங்கம் வராமல், அடக்கப்படுபவரின் போராட்ட உணர்வை 'மழுங்கடிக்கும்' முயற்சிகளாகவே இருந்தன.





# சினிமா

# ராமன் அப்துல்லா:

## பாத்திரங்களின் வழி ஒரு பார்வை

பாலுமகேந்திராவின் சமீபத்திய படமான ராமன் அப்துல்லா தமிழகத்தில் மிக நன்றாக ஓடிக்கொண்டிருக்கிறது. 'பிளாக்கில்' டிக்கெட் வாங்கிப் பார்க்கும் அளவிற்கு தனது கதாநாயக அந்தஸ்து வளர்ந்திருப்பதற்கு சந்தோஷப்பட்டிருக்கிறார் நடிகர் விக்னேஷ். அடக்கமான அடக்கத்திற்காக ஈஸ்வரி ராவ் என்கிற நாயகியை வியந்திருக்கிறது 'நந்தன்' விமர்சனம். ஆரோக்கியமான நகைச்சுவை மனிதனுக்குத் தேவை என்று படம் குறித்துச் சொல்லியிருக்கிறார் பாலு மகேந்திரா. இன்றிருக்கிற சூழலில் 'ஸீரியஸ்' ஆன படம் தருவது சாத்தியமில்லையாதலால்தான் இப்படத்தைத் தந்திருக்கிறேன் என்கிறார் பாலு மகேந்திரா.

இப்படத்தில் தர்க்கம் பார்ப்பது அபத்தம். பாலுமகேந்திரா எல்லாமும் தெரிந்துதான் இப்படியொரு படத்தைக் கொடுத்திருக்கிறார். இப்படியொரு படத்தைத் தருவதற்கு பாலுமகேந்திரா வேண்டுமா? என்று குமுதம் வாசகன் தொடங்கி சாமான்ய சினிமா ரசிகன் வரை கேட்கிறார்கள். பாலுமகேந்திரா இந்திய சினிமாவின் எல்லா இயக்குனர்களையும் போலவே இந்து - முஸ்லீம் சமூகங்களுக்கிடையில் உள்ள உறவை அல்லது பிளவைச் சித்தரிக்க முயன்றிருக்கிறார். எல்லா மதமும் எல்லாக் கடவுள்களும் ஒன்றே என்று உபதேசமாக வரும் 'டைட்டில் ஸாங்கும்' படத்தில் இருக்கிறது.



சமீபத்திய தமிழக இந்து முஸ்லீம் பிரச்சினைப் படங்களில் இருந்து ராமன் அப்துல்லா படம் ஒரு முக்கியமான அடிப்படையில், வேறுபடுகிறது: இப்படத்தின் மையமான பாத்திரம் சிவகுமார் ஏற்கும் ஹாஜியார் பாத்திரம்தான். ஹாஜியாரின் குடும்பம்; அவரது ஆளுமை அவரது குடும்பம்; அவரது சூழல். அவரது வீடு, மகள் சமூகத்தில் அவரது பாத்திரம் போன்றன மையமான இடம் பெறுகிறது. படத்தில் மிக நேர்மையானவராகவும், கடுரமானவராகவும் சமூகத்தில் மிக உயர்ந்த ஒழுக்கங்களைக் கடைப்பிடிக்கும் உதாரண மனிதராகவும் ஹாஜியாரே திகழ்கிறார். அவர் மனிதராகவும் சமூக ஆளுமையாகவும் விரிந்த சமூகப் பின்புலம் உள்ளவராகவும் சித்தரிக்கப்பட்டிருக்கிறார். காயுதே மில்லத் பள்ளிக்கூடமும் அவரது நடவடிக்கைகளும் அவருக்கு மிக அழுத்தமான முஸ்லீம் அடையாளத்தையும் (Identity) வழங்குகிறது. தமிழக வாழ்வுக்குள் பல் கலாச்சார நோக்குகளையும், அடையாளங்களையும் விரும்புகிறவர்கள் சந்தோஷப்படும் ஒரு காரியம் இதன் மூலம் சினிமாவுக்குள் நிறைவேறியிருக்கிறது. ஹாஜியார் முஸ்லீம் அடையாளம் கொண்டவர்தான். ஆயினும் அந்த தனித்த அடையாளம் எவ்வகையிலும் பிற மனிதர்கள்/ மதத்தவர்களோடு உறவு கொள்வதிலின்று அவரை விலக்கிவிடவுமில்லை. இவ்வகையில் ஹாஜியார் பாத்திரம் என்பது, தமிழ் சினிமா வரலாற்றில் மிக முக்கியமான பாத்திரமாக ஆகிறவர்.

தயாவான்களாக இந்துக்கள் இருக்க, வில்லன்களாக முஸ்லீம் மக்கள் சித்தரிக்கப்பட்டு வந்ததுதான் 'இதுவரை' வழக்கமாக இருந்தது. தயாவான்களையும் வில்லன்களையும் மதமோ, ஜாதியோ, இனமோ உருவாக்குவதில்லை. அதிகாரமும்; அதிகார நிறுவனங்களும், பொருளாதார பலமும்தான் வில்லன்கள்- நிலப்பிரபுக்களை- கோயில் டிரஸ்டுகளை, ராமன் அப்துல்லாவில் இந்துக் கோயில் பெரிய மனிதரை உருவாக்குகின்றன. இந்த அதிகாரம் அரசியல் போன்றவை பற்றியெல்லாம் பாலு மகேந்திராவின் படங்களில் நாம் என்றுமே எதிர்பார்க்க முடியாது. இந்தப் படத்திலும் அத்தகைய எதிர்பார்ப்புக்களுடன் போகிறவனுக்கு ஏமாற்றம்தான் மிஞ்சும்.

ஹாஜியார் ஊரில் மரியாதை மிக்க மனிதர். அநியாயம் கண்டு சகிக்காதவர். கல்வியில் ஜாதிமத வேற்றுமை பார்க்காதவர். பொய் சொன்னால் சகிக்க மாட்டாதவர். அதேவேளை அப்துல்லா 'முஸ்லீம் அல்ல இந்து என்று சொன்னால்' அடிக்கவும் வந்துவிடுகிற குணாம்சமும் கொண்டவர் என்று சார்லி ஏற்கிற முஸ்லீம் பாத்திரத்திற்கு தெரியும். முஸ்லீம் முஸ்லீமாகத்தான் இருக்கவேண்டும். இந்து இந்துவாகத்தான் இருக்கவேண்டும். இதில் வழிபாட்டு மாறுபாடு நடந்தால் ஊரில் இந்து பெரியமனிதர்களுக்கு மட்டுமல்ல, ஹாஜியாருக்கும் நிச்சயம் கோபமும் வன்முறை உணர்வும் வந்துவிடும். இதுவெல்லாம் ஹாஜியாரின் பாத்திர வளர்ச்சியில் இருக்கிற விசயம்தான்.

தமிழ் சினிமாவில் சில ரௌடிகள் கத்தி வைத்திருப்பவர்கள். ஒரு பிராமண நியாயவானைக் கண்டால் நடு நடுங்கி அவர் பார்க்கின்ற பார்வைக்கே கத்தியைப் போட்டுவிட்டுப் போய்விடுவார்கள். இங்கு ஹாஜியாரைக் கண்டால் மிரண்டு போட்டுவிட்டுப் போய்விடுவார்கள். எங்கேயிருக்கிறது நிஜ வாழ்வும் யதார்த்தமும்? இப்படியெல்லாம் கேள்வி கேட்க முடியாது. ஏனெனில் இது நகைச்சுவைப்படம். தர்க்கம் பார்க்கக் கூடாது. திரைக் கதையை மிக நுட்பமாகப் பார்க்கிறவர்களுக்குத் தெரியும். ஒரு விசயம் மிக வெளிப்படையாக இருக்கிறது. அது இந்து முஸ்லீம் வழிபாடு என்பதைச் சுற்றி கதை நிகழ்கிறது. அவரவர்- அவரவர் வழிபாடு செய்யவேண்டும். பிற வழிபாட்டு முறைக்கு தனிமனிதன் விரும்பினாலும் போகக் கூடாது. தன்னலத்தை இரண்டு பெரியவர்களுமே ஒப்புக்கொள்கிறார்கள். இரண்டு மதப் பார்வையாளர்களுக்கும் பிரச்சினை சுலபமாகத் தீர்ந்துவிடுகிறது.

இரண்டாவது பிரச்சினை: மதம்விட்டு மதம், மணம் செய்யும் பிரச்சினை. இது பார்வையாளன்/ கதை மனதுக்குள் சிக்கலாக உருவாகிறது. அதையும் நகைச்சுவை மன்றாட்டத்தில் அற்புதமாகத் தீர்த்துவிடுகிறார் பாலுமகேந்திரா. கடைசியில் முஸ்லீம் ஆணும், பெண்ணும் / இந்து ஆணும் பெண்ணும், மணம் செய்துகொண்டுவிட படம் குடும்பத்துடன் சிரிக்க சுபமாக முடிகிறது.

ஆக, கதை எடுத்துக்கொள்ளும் இரண்டு முக்கியமான வரலாற்றுப் பிரச்சினைகளுமே இரண்டு மதத்தவர்களும் வைதீக ரீதியில் சம மனத்துடன் ஒப்புக்கொள்ளும்படி கதையோட்டம் இருக்கிறது. அதனாலென்ன இருக்கவே இருக்கிறது நகைச்சுவை. ரொம்ப சந்தோஷம். இதற்கு எதற்கு இந்து முஸ்லீம் பிரச்சினை! நரேஷ் சுரேஷ் என்றோ, ராணி மகாராணி, நாடோடி மன்னன் என்றோ படம் எடுத்து நகைச்சுவை கலந்தாலும் இப்படி வந்து விடும் படம்.

நாட்டாமைக்கு கோயில் அதிகாரமும் தங்கை மீதான 'கற்பதிகாரமும்' மிக முக்கியம். கடைசியில் இரண்டுமே கறைபடாமல் காப்பாற்றப்பட்டு விடுகிறது. பாதிவில்லன்; பாதி நல்லவன். கடைசியில் திருந்தி விடுகிறார். அப்புறம் 'என் முஸ்லீம் ரத்தம் கொதிக்கிறது' என்று வசனம் பேசி நடனமாடும் சார்லி; பொண்டாட்டி மீது சந்தேகப்பட்டு சதா துப்பாக்கியுடன் அலையும் இராணுவ சிப்பாய்; ஜாதியொன்றுக்கு ஒன்றுவீதம் பாத்திரங்கள். இந்தப் பாத்திரங்களில் தேர்ந்து கொள்ளக்கூடிய வளர்ச்சியுற்ற பாத்திரங்கள் ஏதுமேயில்லை.

படக்கதையில் பாதியிடத்தை எடுத்துக்கொள்வது காதல்



நினைவுகள், கனவுகள் மற்றும் பாடல்கள். சத்தமில்லாமல் பேசும் பெண்கள், காதலர்களைக் காப்பாற்றும் பெண்கள், அடக்கமே நிறைந்த பெண்கள். 'திராவிட அழகு' என்று பாலு மகேந்திரா குறிப்பிடும் பெண் அழகு முகங்கள். அநேகமாக இன்றைய தினத்துக்கு தமிழ் நாட்டுப் பார்வையாளனின் 'இலட்சிய மணப்பெண்', ஈஸ்வரி ராஜாவாத்தான் இருப்பார். அண்ணன்கள் மற்றும் தகப்பன்களால் கடைசியில் காப்பாற்றப்பட்டு சுபமாக, கல்யாணமும் செய்து வைக்கப்படுகிறார்கள். படம் பார்வையாளர்களிடம் கணிசமான வரவேற்பு பெறக் காரணம் மிகவும் எளிமையான இலட்சிய பூர்வமான இப் பெண்கள்தான். காதல் தொடர்பான காட்சிகளை, கவிதை மாதிரி தந்திருக்கிறார் பாலுமகேந்திரா.

இந்தப் படம் ஆரம்பத்தில் பிரச்சினையைச் சந்தித்தது. அப்துல் ராமன் எனும் பெயர் ராமனின் அடிமை என பொருள் தரும் என முஸ்லீம்



சமூகத்தினர் ஆட்சேபனை தெரிவித்ததால், ராமன் அப்துல்லா எனப்பெயர் மாற்றினார் பாலுமகேந்திரா.

இப்போது படத்தில் ஆட்சேபத்திற்குரிய விஷயங்களோ, பிரச்சினைக்குரிய சித்தரிப்புகளோ படத்தில் ஏதுமேயில்லை. எடுத்துக்கொண்ட

I. வழிபாட்டுப் பிரச்சினை,

II. மதம் தாண்டிய திருமணம், இரண்டுமே வைதிக நம்பிக்கைகளின்படி சுலபமாகத் தீர்க்கப்பட்டு விடுகின்றன.

இப்படத்தில் இரண்டு விடயங்கள் முக்கியமாகப் பார்க்கப் பட வேண்டும் என நினைக்கிறேன்.

I. இதுவரையிலான தமிழ் சினிமா கதை சொல்லல் என்பது இந்து சமய வாழ்க்கை வழியிலான கதை சொல்லல்தான். அது 'ஆக்சன்' படமோ, நகைச்சுவைப் படமோ, குடும்பப் படமோ, எதுவானாலும் சரி.

ராமன் அப்துல்லா படம் நிலவும் நகைச்சுவை வகைக்குள் (அது பற்றிய விமர்சனம் வேறுவிடயம்) முதன் முதலாக முஸ்லீம் மக்களின் வாழ்க்கை வழி கதை சொல்லலாக இருக்கிறது.

**இவ்வகையில் ராமன் அப்துல்லா, தமிழ் சினிமா சரித்திரத்தில் முக்கியமானபடம்.**

II. மதம், ஜாதியம், இனம் போன்றவை எப்போதுமே தனது 'அடிப்படைத் தூய்மையை' அகமணமுறைக்குள்தான் காத்துக்கொள்கின்றன.

அகமணமுறைபற்றி அம்பேத்கார், பெரியாரிலிருந்து இன்றைய தலித்திய விவாதங்கள் வரை 'நிறைய' பேசப் பட்டிருக்கிறது.

ஈரான், ஈராக் எகிப்து போன்ற நாடுகளில் மிகச் சிவப்பான முஸ்லீம், ஆபிரிக்கக் கறுப்பர்களை மணம் முடிப்பதில்லை என்பதை இங்கு கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

இங்கு மதம் என்பதை விடவும், நிறமும் இனமும் அடிப்படை வாதத்திற்கான வேர்களாக இருக்கின்றன.

இந்து வைதீக சமூகத்தில் பிராமணர்களின் நிறம், மற்றவர்களை விலக்கி வைப்பதற்கான அடிப்படையாகவும் இருப்பதை இதனோடு சேர்த்துப் பார்க்கலாம்.

விடுதலை அரசியல் பற்றிப் பேசுகின்றவர்கள் இனி, அகமணமுறை, ஜாதி, இனம், நிறம் என்றும் விவாதத்தை எடுத்துச் சொல்ல வேண்டிய 'தேவை இருக்கிறது.

இவ்வகையில் ராமன் அப்துல்லா படம் சினிமாவாவதற்கு ஒரு பங்களிப்பைச் செய்திருக்கிறது. அதேவேளை, சிந்திப்பவர்களுக்கிடையில் அகமண முறை குறித்த விவாதங்களை வேறு ஒரு வடிவத்திலும் அது தூண்டும், தூண்டவேண்டும் எனக் கருதுகிறேன்.

ஊட்டியின் மீதும், இளையராஜாவின் இசையின் மீதும் பாலுமகேந்திராவுக்கு இருக்கிற காதல், நம்மைப் பரவசப்படுத்துகிறது. பச்சை இன்றும் மனசுக்குள் நிற்கிறது. இளையராஜாவின் இசையும் பாடல்களும் நீண்ட நாட்களுக்கு நின்று நிலைக்கும்.

யமுனா ராஜேந்திரன்

இவ் வாரம் தனது பிறந்த தினத்தைக்
கொண்டாடும் **செல்வன் ஆதவன் நடனபாதத்தை**
பல்கலையும் கற்று சிறப்புடன் வாழ்கவென
குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற
சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.

## இவ்வாரக் கைவண்ணம்

**செல்வன் சிவநாதன் சுகந்தன்**

**வயது:** 6 (25.4.91)
**இடம்:** Frauenfeld, Switzerland.



அணில்

1 அணில் அழகான பிராணி
2 அணில் முதுகில் மூன்று கோடு உண்டு
3 அணில் பழங்களை விரும்பி உண்ணும்
4 அணில் [illegible] ஏறும்
5 அணிலின் வால் குஞ்சம் போன்றது
6 அணிலில் பல வகை உண்டு
7 அணில் மரத்தில் கூடு கட்டி வாழும்
8 அணில் கீச்கீச் என்று கத்தும்
9 அணில் குட்டி ஈனும்
10 அணிலின் குட்டியை அணிற்பிள்ளை என் அழைப்பர்



**செல்வி லக்ஷிகா ஸ்ரீ**

**வயது:** 6 (28.09.91)
**இடம்:** அன்னை பூபதி கலைக்கூடம் ஒஸ்லோ, நோர்வே

புகழ் பெற்ற தமிழ்ப் புலவர் திருவள்ளுவர்

இவர் தமிழ் நாட்டில் மைலாப்பூரில் பிறந்தார். இரண்டாயிரம் ஆண்டிற்கு முன் வாழ்ந்தார். இவர் மனைவி பெயர் வாசுகி. உலகத்திருமறையான திருக்குறளை யாத்தவர். திருவள்ளுவரின் வேறு பெயர்களான நாயனார், தேவர், முதற்பாவலர், தெய்வப்புலவர், நான்முகனார் செந்நாப்போதார். திருக்குறள் உலக மொழிகள் பலவற்றிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. திருக்குறள் போல நீதி கூறி நெறியான வாழ்க்கையை உருவாக்கும் நூல் வேறெதுமில்லை.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"




இதை எழுதி அனுப்பியவர்



**செல்வன் ஆனந்த் குலதாசன்**

**வயது:** 13 (13.10.84)
**இடம்:** உ.த.இ. தமிழாலயம் பிறேமன், யேர்மனி

# தியாகம்

தன் நாட்டுக்காகவும், தன் இனமக்களுக்காகவும், தன் தாய்மொழியின் வளர்ச்சிக்காகவும் விருப்பத்தோடு மரணத்தை தழுவுவது தான் தியாகம்.

ஆம்! எமக்காகவும், எம் நாட்டுக்காகவும், தாய்மொழியின் வளர்ச்சிக்காகவும், தம் இன்னுயிரையே அர்ப்பணித்து தியாகங்கள் புரிந்து வருகிறார்கள் எம் சகோதரர்கள். உயிரினும் மேலான எம் தாய்நாடு சுதந்திரம் பெறுவதற்கு களத்திலே சாவைக்கட்டிக் கொண்டு போராடி வருகிறார்கள். அது மட்டுமா? கரும்புலியாகி வாகனத்திலும், தம் உடம்புகளிலும் வெடி மருந்துகளை ஏற்றிச் சென்று, எதிரிகளை அழித்து, தாமும் சிதறி தியாகங்கள் புரிந்தவர்கள் எத்தனையோ பேர். அவர்கள் நடத்திய தியாகங்களுள் தியாகச் சுடர்களாக ஒளிவீசிக்கொண்டிருப்பவர்கள் அண்ணன் திலீபன் அவர்களும், அன்னை பூபதி அவர்களும். தம் இன்னுயிரைத் தியாகம் செய்த இவர்கள், தமிழினத்தால் மறக்க முடியாத தியாகத் தெய்வங்கள். அண்ணன் திலீபனின் தியாகமும், அன்னை பூபதியின் தியாகமும் ஒரு வரலாற்று நிகழ்ச்சியை உருவாக்கியதோடு, பாரத நாட்டையும் தலைகுனிய வைத்தது. எத்தனையோ வீரர்கள் களம் சென்று, மெழுகுவர்த்தி போல உருகி தியாகங்கள் புரிகிறார்கள். ஆனால் வெளிநாடுகளில் சிலர், எங்கே வெயில்? எங்கே வெயிலின் வெப்பம்? என்று கேட்பதைப் போல் இன்னமும் நம் மத்தியில் உள்ளனர். எம் தாய்நாட்டில் என்ன நடக்கிறது? யாருக்காக அந்த மாவீரர்கள் தியாகம் புரிகிறார்கள்? என்பது எதுவுமே தெரியாதவர்களாக இருக்கிறார்கள். அவற்றை நினைக்கும்போது மிகவும் வேதனையாக இருக்கிறது. எமக்கென்று ஒருநாடு வேண்டும் என்று போராடி, ஆளைக் கொல்லும் நஞ்சைக் குடித்து மரணித்த மறவர்களே! நெஞ்சிலே குண்டேந்தி மாண்ட மாமனிதர்களே! ஆறடி மண்ணில் அடங்கிவிட்டோம் எனக் கூறி காற்றுடன் கலந்து விட்ட கரும்புலியாகிய மாவீரர்களே! உங்களுக்கும் ஒரு வளமான வாழ்வு இருக்கிறது என்பதை மறந்துவிட்ட தியாகச் செம்மல்களே! நாளை.....

விடுதலைப் போரின் வீர வரலாற்றிலே வீர வேங்கைகளாகிய உங்களின் வாழ்க்கை, மெழுகு வர்த்தி, சுதந்திர வானில் உங்கள் தியாகம் தமிழீழ வரலாற்றிலே என்றுமே நிலைத்து நிற்கும். நாட்டின் சுதந்திரத்திற்காகவும் மக்களுக்காகவும் மடிந்து தியாகங்கள் புரிந்த நல்லவர்களை மரணம் என்றுமே வென்றதில்லை தமிழ் மக்கள் நெஞ்சங்களுள் என்றுமே நீங்கள் வாழ்ந்து கொண்டிருப்பீர்கள்.

**'வாழ்க மாவீரர்களின் தியாகப் புகழ்'**
**'வளர்க தமிழீழம்'**

## குட்டிக்கதை படிப்போம்

### யானைச்சாமியும் பாகன் சாமியும்



ஒரு குருவானவர் தனது மாணவர்களுக்கு பல உபதேசங்கள் செய்தார். 'கடவுள் எங்கும் இருக்கிறார். எதிலும் இருக்கிறார். எல்லா உயிர்களுமே இறைவன் அம்சம். எனவே எல்லா உயிர்களையும் கடவுளாகக் கருதி வழிபட வேண்டும்'

இதைக் கேட்டுக்கொண்டிருந்த குருவின் மாணவர்களில் ஒருவன் ஒருநாள் கடைவீதி வழியாக நடந்து கொண்டிருந்தான். வீதியிலே யானையொன்று வெறி பிடித்து ஓடிவந்து கொண்டிருந்தது. யானைப் பாகனோ யானையைக் கட்டுப்படுத்த முடியாமல் பின்னால் ஓடிவந்து மக்களை எச்சரித்துக் கொண்டிருந்தான். மாணவனோ யானையைக் கண்டதும், தனது குரு கூறியபடி கடவுள் யானை உருவில் வருகிறது என்று கைகூப்பி வணங்கியபடி அதன் அருகில் சென்றான். பாகன் 'யானை வெறி பிடித்து வருகிறது. அதனை எவரும் நெருங்காதீர்கள்' என்று எச்சரித்தான். மாணவனோ, பாகன் கூறியதை கவனிக்கவில்லை. யானை மாணவனை தும்பிக்கையால் தூக்கி வீசியது. விழுந்து எழுந்த மாணவன், நொண்டியபடி தனது குருவிடம் சென்று நடந்த சம்பவத்தைக் கூறினான்.

'யானைச்சாமியை நீ கடவுளாக கருதி வழிபட்டது சரி. ஆனால் பாகன் உருவில் வந்த சாமியின் எச்சரிக்கையை நீ அலட்சியம் செய்யலாமா? பாகன் சாமியின் பேச்சைக் கேளாததால் நீ இந்த கஸ்டத்தை அனுபவிக்கத்தான் வேண்டும்' என்றார் குருவானவர். அதைக் கேட்ட அங்கிருந்த எல்லோரும் பலமாக சிரித்தார்கள்.

*- தமிழ்நாட்டு கிராமியக்கதைகள்*

### சிரிக்க.... சிந்திக்க....

**தந்தை:** டேய்! காலையில முட்டை வாங்கிட்டு வாவென்று சொன்னேனே? எங்க போனாய்.
**மகன்:** பரீட்சைக்கு போனேன் அப்பா.
**தந்தை:** முட்டை வாங்கிட்டு வந்தியாடா.
**மகன்:** மறக்காமல் சிலேட்டில வாங்கிட்டு வந்துட்டேனப்பா.



# பெண்விடுதலை

## நிகழ்ச்சிக் குறிப்பேடு

1691 **அமெரிக்கா:** மசாசூசெட் மாநில ஆட்சியில் பெண்கள் வாக்களிக்கும் உரிமையைப் பெற்றனர். 1780 இல் இந்த உரிமையைப் பெண்கள் இழந்தனர்.

1792 **பிரிட்டன்:** 'பெண்கள் உரிமைக்கான நியாயவாதம்' என்னும் நூலை மேரிவொல்ஸ்டோன் கிராப்ட் என்னும் பெண்ணுரிமைப் போராட்ட வீராங்கனை வெளியிட்டார்.

1840 **அமெரிக்கா:** ஏனையவர்கள் போன்று பெண்களுக்கும் கறுப்பர்களுக்கும் சமத்துவ உரிமைகோரி 'சமத்துவ உரிமை இயக்கத்தை' லுக்ரீசியாமொற் என்பவர் தொடங்கினார்.

1857 **அமெரிக்கா:** புடவை ஆலைப்பெண் தொழிலாளர்கள் நாளொன்றுக்கு பத்துமணி நேர வேலையையும், ஆண்களுக்குச் சமமான ஊதியத்தையும் கோரி மார்ச் 8—ம் நாள் வேலை நிறுத்தம் செய்து ஆர்ப்பாட்ட அணிவகுப்புகளையும் நடத்தினர்.

1859 **ரஷ்யா:** சென்பீட்டர்ஸ் பார்க்கில் பெண் விடுதலை இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது.

1862 **சுவீடன்:** மாநகரசபைத் தேர்தலில் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டது.

1868 **பிரிட்டன்:** தேசிய பெண்கள் வாக்குரிமை இயக்கம் தொடங்கப்பட்டது.

1869 **அமெரிக்கா:** தேசிய பெண்கள் வாக்குரிமை இயக்கம் தொடங்கப்பட்டது.

1870 **சுவீடன்:** பிரான்ஸ்: மருத்துவப் படிப்பைத் தொடர பெண்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

1878 **ரஷ்யா:** சென்பீட்டர்ஸ் பார்க்கில பெண்களுக்கான முதல் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது.

1882 **பிரான்ஸ்:** விக்டர் கியூகோவின் ஆதரவுடன் 'பெண்கள உரிமைக்கான அமைப்பு' தொடங்கப்பட்டது.

1888 **அமெரிக்கா:** வட அமெரிக்காவினதும் ஐரோப்பாவினதும் பெண்கள் அமைப்புக்கள் வாசிங்டனில் ஒன்று கூடி அனைத்துலக பெண்கள் சபையை ஏற்படுத்தின.

(மிகுதி அடுத்த வாரம்)

# ஐ.நா. சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமைப் பொறுப்பு முதல் முதலாக பெண்ணின் கையில்

ஐரிஸ் நாட்டைச் சேர்ந்த 'மேரி ரொபிசன்' ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவியாக செப்டெம்பர் மாதம் 12—ம் திகதி தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் மிக விரைவில் ஜெனீவாவிற்குச் சென்று தனது புதிய பதவியை பெற்றுக்கொள்வார். மேலும் மேரி ரொபின்சன் அவர்கள் ஐரிஸ் நாட்டில் சமூகங்கள் மத்தியிலிருந்து பின் தள்ளப்பட்டு வைக்கப்பட்ட கைதிகள், பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட பெண்கள், பின தங்கிய கிராமத்தவர்கள் மற்றும் தன்னிச்சைப் பேர்வழிகள், விவாகரத்தடைந்த பெண்கள், கருச்சிதைவுக்குள்ளாகிய தாய்மார்கள் என்று முற்றிலும் மற்றவர்களால் ஓரங்கட்டப்பட்டவர்களிற்காகக் கடுமையாகப் போராடி அவர்களிற்கு சமூகத்தின் மத்தியில் ஒரு நல்ல இடத்தைப் பெற்றுக்கொடுத்தார். இவர் சட்டம் பயின்றது, 'கவாட்' கல்லூரியில் ஆகும். அதனோடு பிரிட்டிஷ் அரசாங்கத்தின் முடியாட்சியிலிருந்து 1949 ம் ஆண்டு ஐரிஸ் நாடு விடுவிக்கப்பட்டதிலிருந்தே இவர்தான் தலைமைப் பதவியிலிருந்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. ஐரிஸ் நாடு கத்தோலிக்க மதப் பீடியினும், ஆணாதிக்கவாதிகளின் நெருக்கடியிலுமாக காணப்பட்டபோதும் அதை துணிவாக எதிர்த்துப் போராடி அங்கு சிறந்ததொரு புதிய வடிவிலான நீதி நிறைந்த வாழ்க்கை முறையை அமைப்பதில் 'கடுமையாகப் போராடி' வெற்றி கண்ட முதல் பெண் இவராகத்தான் இருக்கும். இதோடு தனக்குள்ள சட்ட அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்யாமல் மனிதாபிமான அடிப்படையில் நல்லதொரு பெண்மணியாகத் திகழ்ந்து மக்கள் மத்தியில் பெரிதும் செல்வாக்கு பெற்றுள்ளார். இதோடு ஐக்கிய நாடுகள் சபையில் செயலாளர் நாயகமாக ஒருமுறை இவர் தெரிவு செய்யப்பட்டபோதும் அமெரிக்க அரசால் அதை ஏற்கமுடியாத இடத்தில் விலக்கப்பட்டிருந்தார் என்பதும் மிக முக்கியமானதொன்றாகும்.



# வாடாமல்லிகைகளே!

*வாழ்க்கை எனும் படகு வழிமாறிச் சென்றதனால்*
*வாழும் சமுதாயத்தால் வெறுத்தொதுக்கப்பட்டு*
*கானல் நீரோ எம் வாழ்வென்ற மங்கைகளே*
*கலங்காதீர் கைகொடுப்போம் சோதரிகள் நாங்கள்...*

*நீண்ட வாழ்க்கையதில் சில பிழைகள் சாத்தியமே*
*அதை — நீந்தி எதிர்போகும் தைரியந்தான் நிச்சயமே*
*கயவர்களின் உடற்பசிக்கு இரையான பாவைகளே*
*அதில் — காயம்பட்ட உடல்போக கற்பிழந்தா போனீர்கள்?*
*இல்லை.. தாய்மையான உமதுள்ளம் மாசுபட்டுப் போகவில்லை!*

*காதலனின் கதைகேட்டு கறைபடிந்த சீதைகளும்*
*கொண்டவனின் கொடும்பிடியால் மணவாழ்வு சிதைந்தவரும்*
*மாண்டுதான் போகவென்ற மரபுவிதி ஏதுமில்லை..!*

*பழிப்பும் சிரிப்பும் பசப்பு வார்த்தைகளும்*
*பார்ப்பவர் கண்களுக்கெல்லாம் பரிகாசமானவரே..*
*பதறாதீர் நீங்கள் ஒன்றும் அறநெறியைக் கொல்லவில்லை*
*அழகான வாழ்வதனை அழித்தொன்றும் செய்யவில்லை.*

*நீதியும் அன்பும் நிலையான பண்பும்*
*நிறைந்த கனிவைக் கொண்ட நெஞ்சங்கள் எல்லாம்*
*நேசமாய் உம்மீது உறவையே கொட்டும்...*
*அதில் நிச்சயமாய் உம் வாழ்க்கை வசந்தத்தை முட்டும்!!*

- குழலி

# குழந்தையின் வளர்ப்பிற்கும் கவனத்திற்கும் தேவையானவை

## இருத்தல்

குழந்தை 6 மாதத்தால் இருக்கத் தொடங்கும். குழந்தை தன் முயற்சியால் இருக்கும் வரை நாம் அநேகநேரம் குழந்தையை இருத்தி வைக்கக்கூடாது. இருக்கத் தொடங்கும்போது சாய்வதற்கு முதுகுக்கு ஏதாவது வைக்க வேண்டும். அநேகமாகக் குழந்தைகள் 7 அல்லது 8 மாதத்தில் தாங்களாகவே இருப்பார்கள். குழந்தை தாமதமாக இருக்கத் தொடங்கினால் புத்தி குறைவு என்று நினைக்கக்கூடாது. ஏதாவது மனதிற்கு சந்தேகம் ஏற்பட்டால் உங்கள் குடும்ப வைத்தியரிடம் கலந்து ஆலோசியுங்கள்.

## நடத்தல்

குழந்தை 9,10 மாதத்தில் நடக்கத் தொடங்கும். இந்த நேரத்தில் தன் உடம்பில் குழந்தை கவனமாக இருக்கும், தனது நிறைக்கு ஏற்றபடி பாதங்களைத் தூக்கி வைத்து நடக்கும். குழந்தை நடக்க தொடங்கும் முன் நாங்கள் வற்புறுத்தக்கூடாது. அதிக நேரம் குழந்தை நடக்கத் தொடங்கும் பொழுது அவர்களுடன் அருகில் ஒருவர் பாதுகாப்பாக நிற்க வேண்டும். அவர்களுக்கு நடை வண்டில் உபயோகமாக இருக்கும்.

## குழந்தையின் வளர்ச்சி

### (வளருதலும், கவருதலும்)

ஒரு வயது குழந்தைக்கு அமைதியான சூழ்நிலை தேவைப்படுகிறது. குழந்தை வசதியாக சுதந்திரமாக இருக்காவிட்டால் மகிழ்வாக இருக்காது எந்நேரமும் சிணுங்கிகொண்டிருக்கும்.

## குழந்தையின் உலகம்

வாழ்க்கையில் சிறுவரும் சென்றவுடன் நீங்கள் உலகத்தின் நடுவே வருகிறீர்கள். குழந்தையை அன்பாகவும், கவனமாகவும் நேசிக்கிறீர்கள். புத்துணர்ச்சி ஏற்படுத்தி சுற்றியிருந்த பொருளைக்காட்டி அசைவுகளை உணரச் செய்து குழந்தையுடன் பேசுகிறீர்கள். குழந்தை புது உணர்வுடன் பொருட்களை தொட்டுப்பார்த்து புன்சிரிப்பு சிரிக்கும். குழந்தைகளுக்கு புத்தகங்கள் வாங்கும் பொழுது, பிரகாசமுள்ள சின்ன எழுத்துள்ள படங்களுடன் வர்ணமானவுள்ளதை வாங்குங்கள். குழந்தை புத்தகத்தை நன்றாக விரும்பி கூர்மையாக நோக்கும். வளர்ந்தவுடன் குழந்தை மற்றவர்களுக்கு விளங்கப்படுத்தும்.



(தொடரும்)

# முகம் பொலிவுபெற சில வழிகள்....



முகத்திற்கு அழகான தோற்றத்தைக் கொடுப்பதற்கு 'மாஸ்க்' பாவிப்பது மிகவும் சிறந்த பலனைத்தரும். இதைப் பாவிப்பதன் மூலம் சருமம் மிகவும் மென்மையாகவும் பளபளப்பையும் பெறுகிறது. இது பழவகைகளிலிருந்து பெறப்படுபவையாயினும் நிறைமே பயன்படுத்தலாம்.

வறண்ட சருமத்தை உடையவர்கள் பப்பாளிச்சாறு ஆணைக்கொய்யாகூழ் (பட்டர் புறுட்) தயிர் அல்லது கரட் சாற்றை சம அளவில் கலந்தெடுத்து அதனுடன் தேசிக்காய் சாறு மற்றும் தேன் சில துளிகளையும் சேர்க்கலாம் சாதாரண சருமத்தை உடையவர்கள் ஒலிவ் ஒயில 1 தே.க., தோடம்பழச்சாறு 1 தே.க., ஜெல்ட் வில்லை 2 மாகக் கலந்து கிடைக்கும் கலவையைப் பயன்படுத்தலாம். இவை யாவற்றையும் பூசி 20 நிமிடங்களிற்குப் பின்னே முகத்தை கழுவி விடலாம். இதைவிட முகத்தில் கரும்புள்ளிகள், பருக்கள் உடையவர்கள் வேறு விதமாகத் தயாரிக்க வேண்டும். ஒரு முட்டையை அடித்து அதனுள் தேசிக்காய்ச்சாறும் தேனும் சிறிது கலந்து பூசலாம். இத்தகைய பூச்சின் இறுதியில் முகச் சருமத்தைப் பலப்படுத்துவது அவசியமாகையால் பஞ்சுத்துண்டொன்றால் நனைக்கப்பட்ட 'ஸ்கின்டோனர்'ரை முகம் முழுவதும் பூசலாம். அல்லது கடையில் கிடைக்கும் 'விச்ஹேஸல்' தண்ணீரைக் கலந்தும் பூசலாம். இந்த ஸ்கின்டோனரை இயற்கையாகச் செய்து கொள்ள குளிர்நீரில் கரட்சாறு, வெள்ளரிச்சாறு, தேசிக்காய்ச்சாறு கலவையையும் பயன் படுத்தலாம்.

# சாளரம்

நமது கலாச்சார மரபில் ஒரு புதிய அறிமுகம், ஒரு புதிய அறிமுகத்தில் நம் கலாச்சாரம் என்று இணை நிலையாக 'ஒளிவீச்சு' என்ற இந்த ஒளியிழைப்பேழை சஞ்சிகை வெளிவருகிறது. விஞ்ஞானம் தந்த தொழில் நுட்பத்தின் புதிய வரவாக ஒலியும், ஒளியும் இணைந்த 'ஒளியிழைப்பேழை' அறிமுகமாகிய பின் அதில் சஞ்சிகை என்ற அம்சமும் உருவாகி விட்டது. நேரடியாக, காட்சியாகவும் ஓசையாகவும் பார்ப்பவருக்குச் சாட்சியாகும் ஒளிவீச்சின் இந்தப் பதிவுகள், சமகால வாழ்வின் உள்ளடக்கம்தான். ஒரு சமுதாயத்தின் கலாச்சாரம் அதன் வளர்ச்சியோடும், வாழ்வோடும் இணைந்திருக்கும். நம் வாழ்விலும் வளர்ச்சியிலும் ஒரு அம்சமாக இன்று ஒளியிழைப்பேழை சஞ்சிகையும் இணைந்து விட்டது. ஒரு சாதனத்தின் அறிமுகம் அல்லது அதன் வழியாக கலையும் வளர்கிறது. இன்றைய கலை, தொழில்நுட்பமயப்படுத்தப்பட்டு வருகிறது. இந்தப் பின்னணிகளில்தான் 'ஒளிவீச்சு' (விவரண) ஒளியிழைப்பேழை சஞ்சிகையும் அமைந்திருக்கிறது.

இந்த ஒளியிழைப்பேழை சஞ்சிகை, ஒளியிழைப் பேழையின் பயன்பாட்டை நமது சூழலில் 'முறையாகப் பயன்படுத்தும்' ஒரு ஊடகமாகச் செயற்படுவதை அவதானிக்கலாம். ஒளியிழைப் பேழைக்குரிய சலனத் தன்மைக்கேற்ப காட்சிப்படுத்துவதிலும் தமது சமூக அடையாளங்களையும், இனத்தின தனித்துவங்களையும் வெளிப்படுத்துவதிலும் தென்படும் அக்கறைகள் மகிழ்ச்சியளிப்பவை. போர்க்கால நெருக்கடி வாழ்வில் மறுதலிக்கப்பட்ட, அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வளங்களையுடைய சாதனங்களை பயன்படுத்தி வெளிவரும் இந்த 'ஒளியிழைப்பேழை சஞ்சிகை' ஒடுக்குமுறையின் எதிர்ப்படையாளமாகவே இருக்கிறது.

மக்கள் எழுச்சி, போராளிகளின் அர்ப்பணிப்பு மிக்க செயற்பாடுகள், நுட்பமும் வீரமும் நிறைந்த போர்நடவடிக்கைகள், நமது மண்ணின் உற்பத்திகள், வெளியீடுகள், நெருக்கடி மிக்க இந்தக் கால கட்டத்தில் உத்வேகத்துடன் துன்ப துயரங்களைக் கடந்த போராட்ட வாழ்வுடன் இணையும் மக்கள் என்பவற்றை நேரடியாகப் பதிவாக்கி 'உலகின் முன்' வைக்கிறது ஒளிவீச்சு.

ஒரு ஒளிவீச்சு சஞ்சிகையில், செய்திச்சரம், மாவீரர் நினைவுகள், சமகாலப் பார்வை, மண்ணும் மக்களும், கலையும் மக்களும், நடமாடும் ஒளிவாங்கி, காட்சியும் கானமும், காலத்தின் வரிகள், குறும்படம் ஆகியவற்றுடன் இன்னும் சில அம்சங்களும் இடம்பெறுகின்றன.

சிங்கள அரசு நமது பிரச்சினைகளை இருட்டடிப்புச் செய்து, தான் வேறுவிதமாகப் புனைந்து

# வாழ்வின் சுவடும் - நம் சமகாலத்தின் உண்மை முகமும்

## நிதர்சனம் நிறுவனத்தின் 'ஒளிவீச்சு' ஒளியிழைப்பேழை சஞ்சிகை பற்றிய மதிப்புரை

ஒளிவீச்சில், சமகால நிகழ்ச்சிகள்- மக்கள் வாழ்வின் முக்கிய பிரச்சினைகளாகவும், நம் தேசிய பிரச்சினையின் அரசியல், இராணுவ நடவடிக்கைகள் பற்றியதாகவும், பண்பாடு, கலை சமூகவியல் என்று - பல விதங்களில் பதிவு செய்யப்படுகின்றன. நம் சமகால வாழ்வின் தொகுப்பு அல்லது பதிவு என்று இதைச் சொல்லலாம். அரசி




யல், சமூகவியல், பண்பாட்டு அம்சங்கள், மற்றும் கலை என்று அது தன்னுள் ஒரு பரந்த தளத்தைக் கொண்டிருக்கிறது. அத்தோடு யதார்த்தத்தைப் பேணுவதிலும், மெய்மைத்தன்மையுடைய அரசியல், இராணுவ போராட்ட அம்சங்களை வெளிப்படுத்துவதிலும் மிக்க பங்கை ஆற்றுகின்றது. சம கால நிகழ்வுகளை பதிவு செய்வதுடன் அவற்றை வெளியுலகுக்குக்கொண்டு செல்வதினூடாக இரு நிலைச் செயற்தளத்தில் 'ஒளிவீச்சு' பங்காற்றுவதைக் காணலாம். 1993 மேயிலிருந்து தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக வெளிவரும் காட்டுகிறது. ஆனால் ஒடுக்குமுறைக்கெதிரான நமது அரசியல், இராணுவ எதிர்ப்பு நடவடிக்கைகள், மக்கள் எழுச்சி மற்றும் மக்கள் இன்னல்கள் என்பவற்றை அவற்றின் நேரடிக்காட்சிப் பதிவுச் சான்றுகளாக - உலகின் முன்வைக்கும் ஒரே சக்தி மிக்க ஊடகமாக இது இருப்பது இதன் விசேடமாகும்.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

'ஒளிவீச்சு' விவரணங்களை அதிகமாகக் கொண்டது. தமிழீழ மக்களின் வாழ்நிலை - அரசியல் நிலை வெளிப்பாடுகளைக்கொண்ட விவரணங்கள் ஒளிவீச்சில் இடம்பெறுகின்றன. விவரணங்கள், அனைவராலும் விரும்பிப் பார்க்கப்படுவனவல்ல. விடயங்களை மட்டும்கொண்டதாக இருந்தால் உரிய பார்வையாளரை சென்றடையமுடியாதிருக்கும். இதன் காரணத்தால் நாம் கலைப் பிரக்ஞையை நிவிரப்படுத்த வேண்டும். இங்கு ஒளிப்படக்கலைதான் முக்கியத்துவம் பெறுகின்றது. எந்த ஒரு சட்டகத்தில்/ உள்ளடக்கம் கொண்ட காட்சிகள் ஒளிப்பட பதிவாளர்களால் பதிவு செய்யப்படுதல் முக்கியம். வெறுமனே Pan shots, Zoom shots ஒளிப்படக் கலையாகாது. அநேகமான விவரணங்களில் Zoom (காட்சி விரிவாக்கும்- சுருக்கம்) தன்மையிருக்காது. ஒரு காட்சி எந்தச் சட்டகத்தில் விடயத்தை சிறப்பாக வெளிப்படுத்தும் என்பதை ஒளிப்படப் பிடிப்பில் தீர்மானிக்க வேண்டும். சில வேளைகளில், ஒரு காட்சி, சில நிமிடங்கள் 'அசையாது இருந்தால்தான்' பார்வையாளரின் மனதில் பதிவை ஏற்படுத்த முடியுமென்றால், அப்படித்தான் அமைய வேண்டும். வேகமாகக் காட்சிகளை நகர்த்தினால் காட்சியின் உட்பொருளை ரசனையாளன் உள்வாங்க முடியாது போகும். அப்படியானால், ஒரு காட்சி நீடிக்கவேண்டியதேவை இருப்பின் புலனைச் சிதறவிடாது தடுக்கச் சட்டகம் - ஒளியமைப்பு - காட்சி - கோணம் என்பவற்றில் கவனம் செலுத்தப்படுதல் அவசியம்.

விவரணம் எனும்போது வெறுமனே உரையும் காட்சியுமல்ல. தனியே உரையும் காட்சியும் சலிப்பூட்டுபவையாகவே இருக்கும். ஆகவே ஒவ்வொரு விவரணமும் உயிர்ப்புடையவையாக செதுக்கப்படுவது அவசியம். பின்னணி இசை மண்ணின் - இனத்தின் தனித்தன்மை கொண்டதாக இன, மொழி, கலாச்சார, வாழ்முறைமையின் தனித்துவ அடையாளங்களை வெளிப்படுத்துவதாக அமைவது சிறப்புடையது. இவ்வாறான போது ஒளிவீச்சு வழங்கும் விடயங்களுடன் எங்களின் முழு மொத்தமான உணர்வையும் பிரச்சினைகளையும் பார்ப்போர் உணர மேலும் வசதி உண்டாகும்.

உலகத்தின் முன் கவனம் பெறும் படைப்பாக 'ஒளிவீச்சு' அமைவதால் இந்தத் தனித்துவம் பேணப்படவேண்டியதாகிறது.

# நாற்று

## இளம் ஆக்கங்கள்

### எமது யாழ்நகரைத் தேடுகின்றோம்

யாழே உனது செழிமையிகு அழகு எங்கே சென்றுவிட்டது.
எங்கெங்கு பார்க்கினும் கண்ணீர் கண்ணீர் தேசமாகி விட்டதே யாழே.
யாழே உன்னை ஒரு திறந்தவெளிச் சிறைச்சாலையாக்கிவிட்டார்களே
சந்திரிகாவின் இராணுவக் குண்டர்கள்...
யாழே உன்னை தனிமையில் விட்டுவிட்டு எத்தனை எத்தனை
மனித நேயங்கள் பிரிந்துவிட்டார்கள்...

தண்ணீர் பந்தலிட்டு தாகம் தீர்த்த யாழ் நகரே நீ நித்தமும் குருதியால்
நனையும் கொடுமை தனை சகிக்காது அகதியாய் ஓடிவந்து வன்னியில்
குடிப்பதற்கு நீரின்றி அலையும் உனது மக்களின் துயரம் அறியாயோ!

ஈழத்தமிழன்
ஆர். சுதா (இத்தாலி)

* * *

### இது வேங்கைகள் தேசம்

பாதை திறப்போம் என்று
போதையில் நினைந்துவிட்டாய்
பாவம் நீ மறந்து விடு

பக்குவம் பார்த்து
பெற்றெடுத்த பிள்ளைகளின்
பாசறைக்கூடம் இது
பைந் தமிழ் ஈழம் இது

பாசாங்கு காட்டுகின்ற
பாவியவள் ஆட்சியிலே
பட்டினி கிடந்தாலும்
பாசறை நாம் காப்போம்

தாண்டிக் குளம் என்ன
புளியங் குளம் என்ன
தாண்டி வா தெரியும்
புலிகளின் குணம் தெரியும்

பாதையா அமைக்கப் போகிறாய் - வா
போதி மரத்தடியில்
போதனை செய்தாலும்
பாதி வழியில்
உன்கதை முடியும்

-பகவான் (ஜேர்மனி)
டோட்முன்ட்

* * *

### 'மனது மறக்குமோ!'

போர்க்கால மேகங்கள்
பொழியும் யுத்த மழையதனில்....
புதைந்து நிற்காமல் – மாவீரர்
புகழ் நினைக்கும் வாரமிது

நிலத்தில் ஒரு நினைவுக்காய்...
நிறுத்திய நிழலதனை...
நிலைக்காமல் தகர்ப்பதனால்...–உள்ளத்தில்
நிலைத்திட்ட நினைவதனை தகர்ப்பாரோ!
தலைசாய்வாரோ?

போதி மரப் போதனையின்...
அவதார அரக்கர்கள்...
அழிப்பிற்கு அஞ்சாமல் – களத்தில்
அகலாமல் நின்றவர்கள்...!

சரித்திரங்கள் படைத்து நின்று,
சாதனைகள் புரிகையிலே ...
எதிர்க்கணைகள் எப்படியோ...–நெஞ்சில்
ஏறியதால்...ஏறியதால்...!

- பிரியங்கா

## சிறுகதை

# தர்ம அடி

(சென்ற வாரத் தொடர்ச்சி)

ஒரு மாதத்திற்கு மேலாக இருண்டு கிடந்த பார்வதியின் வாழ்வில் ஒளி வீசியது. மதிய போசனத்தையும் அவள் உண்ணவில்லை. தாயகச் செய்திகளைத் தாங்கிவந்த பத்திரிகையை படிக்கத் தொடங்கினாள். அப்போது சுந்தரமும், பிள்ளைகளும் மேலே வரும் சத்தம் கேட்டது. பார்வதி பத்திரிகையை தனது அறைக்குள் ஒழித்துவிட்டு, புலிகள் விடுதலைப் படமோடும் விளம்பர பிரசுரத்தை மகனின் கண்ணில் படும்படி போட்டுவிட்டு, மதியபோசனத்தை சாப்பிடத் தொடங்கினாள். சுந்தரம் விளம்பர பிரசுரத்தை வாசித்துவிட்டு கசக்கி குப்பைக் கூடையில் எறிய முற்பட்டபோது, பார்வதி அதை வாங்கி படிப்பதுபோல் படித்துவிட்டு, 'என்னடா... தாயகத்தைப் பற்றி படம் ஓடுறாங்கள்! நீ அந்தப் பிரசுரத்தை குப்பைக் கூடையிலை போடப் பார்க்கிறாய்'. சுந்தரம் தாயைப் பார்த்து சினத்துடன், "அதைக் கொண்டு போய் மெத்தையிலை வையுங்கோ" என்று சொல்லிக்கொண்டு விலகிச் சென்றான். பார்வதிக்கு கையிலிருந்த கோப்பையால் எறியவேணும் போல் ஆத்திரம் வந்தது. அதை அடக்கிக் கொண்டு, "என்ன செய்யிறது... மகனிட்டை பிச்சைச் சோறு தின்ன வந்ததுதான் செய்த தவறு. அங்கை பெடியள் அன்போடை அள்ளித்தந்த அமுதை விட்டிட்டு இஞ்சை வந்து உன்னட்டை நான் அவமானப்படுகிறேன்" என்று மனதுக்குள் குமுறிக்கொண்டு, தனது அறையுள் புகுந்தாள். சுந்தரமும் மனைவியும் பிள்ளைகளும் சாப்பிட்டுவிட்டு வழமைபோல் தங்கள் பொழுது போக்குகளுக்கு புறப்பட்டனர்.

பார்வதி தனது மகன் தன்னைச் சினந்து பேசிய நாளிலிருந்து, தனது மனவேதனையைப் போக்கிக் கொள்ள முடியாமல் தவித்தாள். இறுதியில் தன்மகன் தானே பொறுத்துக்கொள்வோமென மனதைச் சாந்தப்படுத்தித் தேற்றிக்கொண்டு, 'ஒளிவீச்சு' ஒளி நாடாவைப் பார்க்கத் தொடங்கினாள், அப்போது வாசல் கதவின் மணி மூன்று தரம் அடித்தது, பார்வதியும் ஓடிப்போய் வாசல் கதவைத் திறந்தாள். அங்கே சோகம் நிறைந்த முகத்தோடு முரளியும், சேரனும் நின்றார்கள். அவர்கள் தங்கள் கையிலிருந்த ஓர் துண்டுப்பிரசுரத்தை பார்வதியிடம் கொடுக்க அவளும் அந்தச் செய்தியை வாசித்தாள். கண்களிலிருந்து கண்ணீர் நிரம்பி வழிந்தோடக் கதறி அழுதாள். சர்வதேச நிதிப்பொறுப்பாளர் லெப்டினன்ட் கேணல் நாதன், ஈழமுரசு ஆசிரியர் கப்டன் கஜன் ஆகியோரின் அகாலமரணச் செய்தியே அது! தாயகத்தின் விடிவுக்காய் தம்மை அர்ப்பணித்து வாழ்ந்த தியாக வேங்கைகளின் உடல்களைத் துப்பாக்கிக் குண்டால் துளைத்த சிங்களக் கைக்கூலிகள் நாசமாய்ப் போகவேண்டும் என்று அந்த தாய்மையுள்ளம் குமுறியது. அந்தத்தாயின் சோக உணர்வைக் கண்டு முரளியினதும், சேரனதும் கண்களிலிருந்து கண்ணீர் வழிய, அதை அவர்கள் மெல்லத் துடைத்துக்கொண்டு பார்வதிக்கும் ஆறுதல் கூறிக்கொண்டு கண்ணீர் அஞ்சலிக்கூட்ட துண்டுப் பிரசுரத்தை மற்ற வீடுகளுக்குப் போடுவதற்கு விரைந்து சென்றார்கள்.

பார்வதியும் அந்தத் துயரச் செய்தியை மனதில் சுமந்துகொண்டு கண்ணீர் வெள்ளத்துடன் கட்டிலில் சாய்ந்தாள். சுவர் கடிகாரத்தின் முள்ளுகள் நான்கு மணியைத் தாண்டின. பார்வதியும் எழும்பவில்லை. சுந்தரமும் வேலை முடித்து, மனைவியுடனும் பிள்ளைகளுடனும் வீட்டிற்கு வந்தான். வழமையாக வேலையால் வரும்போது தாய் வீட்டு மண்டபத்தில் இருப்பாள். இன்று காணவில்லையே. காலைச் சாப்பாடும் அப்படியே சாப்பாட்டு மேசையில் கிடக்குது. என்ன நடந்திருக்கும்? என்று யோசித்தபடியே தாய் படுத்திருந்த கதவுகளைத் தட்டிக்கொண்டே திறந்தான். அப்போது தாயின் கண்களில் கண்ணீர் வழிந்தோடிக் கொண்டிருப்பதைக்கண்டு... 'எதற்காக நீங்கள் அழுதுகொண்டிருக்கின்றீர்கள்' என்று வினாவியபடி தாய்க்குக் கிட்ட நெருங்கியபோது தாய் அவனிடம் கண்ணீர் அஞ்சலிக்கூட்ட துண்டுப் பிரசுரத்தைக் காட்டி, தான் அந்தக் கூட்டத்திற்குப் போகவேண்டும், தன்னைக் கூட்டிக்கொண்டு போகும்படி கேட்டாள். சுந்தரம் அந்தத் துண்டுப் பிரசுரத்தை வாசித்துவிட்டு தாயைக் கோபத்துடன் பார்த்து, "இந்த நாட்டிற்கு வந்தால் நீங்கள் இந்த நாட்டிற்கு ஏற்றபடி வாழப் பழகிக்கொள்ள வேண்டும். யாரோ சுடுபட்டுச் செத்துப் போனதிற்கு, எதுக்கு நீங்கள் இஞ்சை இருந்து கண்ணீர் வடிக்கிறீங்கள். நான் இந்த கூட்டத்திற்கெல்லாம் வரமாட்டன். உங்களோடு கதைத்துக் கொண்டிருந்தால் நான் எங்கடை நட்புறவுச் சங்கக் கூட்டத்திற்கு நேரம் தாமதித்துத்தான் போகமுடியும்" என்று கூறியபடி கதவை அடித்துச் சாத்திப்போட்டு வெளியே சென்றான். அவ்வளவுதான் பார்வதியின் மனம் எரிமலையாக வெடித்தது. கோபம் பொங்கியெழ வீடே அதிரும்படி 'டேய்' என்று கத்திக்கொண்டு படுக்கையை விட்டு வெளியே வந்து 'கல்நெஞ்சா நாளை எங்கள் சந்ததி வாழ எங்களுக்காய் வாழ்ந்த அந்த தியாக வேங்கைகளையா! நீ யாரோ என்று கூறினாய்; பாவி' என்று கத்தினாள். தாயின் கோபத்தைப் புரிந்துகொண்ட சுந்தரம், ஏதும் பேசாது குளியலறைக்குள் புகுந்தான். கயல்விழி மாமியின் கோபத்தைப்பற்றி சரிவரவே அறிந்தவள். அவளுக்கு பயம் ஏற்பட்டது. ஒன்றும் பேசாமல் பிள்ளைகளையும் இழுத்துக் கொண்டு அறைக்குள் ஓடி ஒழித்துவிட்டாள். வீட்டில் மயான அமைதி. அப்போது தொலைபேசி அடித்தது. பார்வதி இருந்த கதிரைக்குப் பக்கத்தில் இருந்த மேசையில் தொலைபேசி இருந்ததால் கயல்விழியும் பிள்ளைகளும் பயத்தில் தொலைபேசிக்குக் கிட்டவே வரவில்லை. தொடர்ந்து பலமுறை அடித்தது. பார்வதி தொலைபேசியை எடுத்தாள். மறுமுனையில் இருந்து பேசிய சுந்தரத்தின் நண்பன் சுரேஸ், தனது வாகனம் பழுதடைந்துவிட்டது, நட்புறவுச் சங்கக் கூட்டத்திற்கு சுந்தரம் போகும்போது தன்னையும் கூட்டிக்கொண்டு போகட்டாம் என்று சொல்லுங்கோ என்று கூறினான். இவனையும் விடக்கூடாது தனது மகன் இவங்களோடை சேர்ந்துதானே தாயக உணர்வே இல்லாது வாழ்கிறான் என்று எண்ணியபடி 'மலைகள் சாய்ந்திருக்கு. உலகத் தமிழினமே அழுது புலம்பிக்கொண்டிருக்கு. இந்த வேளை உங்களுக்கென்னடா ஒரு நட்புறவுச் சங்கக்கூட்டம், தமிழன் என்று சொல்லித் திரிய உங்களுக்கென்ன யோக்கியதை இருக்கு' என்று கத்திக்கொண்டிருக்க சுந்தரம் தாயிடம் இருந்த தொலைபேசியைப் பறித்து 'ஹலோ!' என்று அழைக்க, மறுமுனையிலிருந்து எந்தப் பதிலும் வரவில்லை. சுந்தரம் தாயைக் கோபத்துடன் பார்த்து 'உங்களுக்கென்ன பைத்தியமா அம்மா. என்ரை சினேகிதங்களோடை இப்படி ஏன் கேவலமாக நடக்கிறீர்கள். என்ரை மரியாதை உங்களாலை போகுது' என்று தாய் மீது எரிந்து விழுந்தான். பார்வதிக்கு அவன் மேல் மேலும் கோபம் அதிகரிக்க 'டேய் நானுனக்கு அம்மாவுமில்லை; நீ எனக்கு மகனுமில்லை. தாயக உணர்வில்லாமல் வாழுறது. பெற்ற தாய் மீது பாசமில்லாமல் வாழுறதிற்கு ஒப்பாகும். நீ எங்கடை குடும்ப மரியாதையை கெடுக்க வந்த காளான். இனி உன்ரை வீட்டிலை ஒரு நிமிசமும் இருக்க மாட்டன். டென் மார்க்கிலையுள்ள புலிகளுடைய அலுவலகத்திலை தஞ்சமடைந்து எனக்கு ஊருக்கு போகத் தெரியும்' என்று கூற, கயல் விழி "அப்படிச் சொல்லாதீங்க மாமி. அத்தான் இனி உங்கள் மனம் புண்பட நடக்கமாட்டார்' என்று பார்வதியின் கரங்களைப் பற்றினாள். தாய் கூறிய வார்த்தைகள் சுந்தரத்தின் மனதை உறுத்தியது. தாய் நாட்டை மறந்து வாழ்ந்தது தான் செய்த தவறென்று உணர்ந்துகொண்டான். பிறந்த பொன்நாட்டை தான் மறந்து வாழ்ந்து, தனது தேசத்தைக் காக்க உழைக்கவேண்டிய நேரத்தை மண்ணாக்கி விட்டேனே என்று கவலையுடன் தாயின் கரங்களைப் பற்றி, "அம்மா நான் தாயகத்தை மறந்து வாழ்ந்தது குற்றம்தான்" தன்னை மன்னிக்கும்படி மன்றாடிக் கேட்டான். பார்வதி, என்று மகன் கூறியதைக் கேட்டு மெல்லச் சிரித்து அவனை அணைத்துக்கொண்டாள். தாயின் சிரித்த முகத்தைப் பார்த்தபடியே சுந்தரம், "எல்லோரும் கண்ணீர் அஞ்சலிக் கூட்டத்திற்குப் போவோம்" என்று கூறினான்.

சுந்தரமும் குடும்பத்தினரும் கண்ணீர் அஞ்சலிக்கூட்ட மண்டபத்திற்குள் நுழைந்தனர். சோகமே உருவெடுத்து அந்த மண்டபம் காட்சியளித்தது. கண்களில் கண்ணீரைத் துடைத்துக்கொண்டிருந்தவர்கள் ஒருபக்கம்; அந்த வீரவேங்கைகளின் தியாகத்தைப் பற்றி பேசிக்கொண்டிருப்போர் இன்னொருபக்கம். இவற்றையெல்லாம் பார்த்தபடியே அவர்கள் அந்த தியாக வேங்கைகளை நினைத்துக் கலங்கியபடி தியாகச் சுடர்களை ஏற்றிக்கொண்டிருக்கும் மக்களுடன் வரிசையில் நின்றனர். சுந்தரத்தின் குடும்பத்தினர் தியாகச் சுடரை ஏற்றினார்கள். அப்போது அங்கு நின்ற முரளியும் சேரனும் பார்வதிக்குக் கிட்ட ஓடிவந்தார்கள். பார்வதியின் கண்களில் இருந்து கண்ணீர் வெள்ளம் ஆறாய் ஓடியது. சுந்தரம், முரளியினதும் சேரனதும் கைகளை இறுகப் பற்றி தன் தவறுகளுக்கு மன்னிப்புக் கேட்பதுபோல் நடந்துகொண்டான். தாயின் தர்ம உபதேசத்தால் தானும் மனிதனாகி இந்த விடுதலைப் பாதையில் காலடியெடுத்து வைத்தது தான் செய்த பாக்கியம் என்று பெருமூச்சு விட்டபடி சோகமயமாக நின்ற மக்களுடன் துயர வெள்ளத்தில் ஆழ்ந்தான் அவன்.

(முற்றும்)



எஸ். ரீ. அருள்

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.
**RCS PARIS**
B 399 673 110 (95B01491)
**Directeur de la publication:**
P. Velupillai
**Redacteur:**
P. Sivaguru
**Impression:**
IMPRIMERIE MEAULLE
நிர்வாகி:
ப. வேலுப்பிள்ளை
நிறுவன ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்
ஆசிரியர்:
பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris, France
E.Mail-eelamurasu@aol.com

விளம்பர கிளைகள் தொடர்புகட்கு:
பாரிஸ்:
Tel: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64
ஜேர்மனி:
போ. சிறீஸ்கந்தராஜா
Tel: 03 04 35 29 23
அருந்தவராஜா:
Tel / Fax: 02 151 39 73 83
டென்மார்க்:
S.E. மகேந்திரன்
SPURVE VEJ-20,
7200 GRINSTED.
Tel + Fax: 75310546
சுவிஸ்: மக்கள் கடை
Tel: 01-271 7374
லண்டன்:
ஜெயந்தன் - Tel: 0956906145
குமார் - Tel: 0956277718
இத்தாலி:
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056
நோர்வே:
JAFFNA FOOD
Tel: 22425527
நெதர்லாந்து:
தமிழ்அங்காடி
Tel: 076 5425804


(1ம் பக்கத் தொடர்ச்சி)
## நல்லூர்...

லுக்கு அண்மையாக சிறீலங்கா போலிசார் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ள முயன்றனர். இவர்கள் மீதே விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர் கொல்லப்பட்டவர்களின் உடல்களை சிறீலங்கா பொலிசார் அப்புறப்படுத்தியுள்ளனர்.

# 'தாகத்தால் தவித்த கிருஷாந்திக்கு தண்ணீர் கொடுத்தேன்'

## கிருஷாந்தி வழக்கில் பொலிஸ்காரர் கட்சியம்

சிறிய பற்றை ஒன்றுக்குள் அரை மயக்கத்திலிருந்த கிருஷாந்தி 'தண்ணீர் தண்ணீர்' என்று கேட்டார். நான் தண்ணீர் வாளியைக்கொண்டு சென்று அவர் அருகில் வைத்த போது, இரண்டு கைகளாலும் தண்ணீரை அள்ளி அள்ளி அவர் குடித்தார் என்று, அரச தரப்புச் சாட்சியான பொலிஸ்காரர் அப்துல்ஹமீத் நசார் கடந்தவாரம் நடைபெற்ற கிருஷாந்தி வழக்கில் சாட்சியமளிக்கும்போது தெரிவித்துள்ளார்.



கண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவியான கிருஷாந்தி - அவரது தாயார் மற்றும் அவரது சகோதரன், அவரது அயல் வீட்டுக்காரர் ஆகியோரது கொலை தொடர்பான வழக்கு மூன்று நீதிபதிகள் முன்னிலையில் ஜூரிமார்கள் இல்லாத 'ட்ரயல் அட்பார்' முறையில் கொழும்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வருகின்றது.

இந்த வழக்கில் 8 இராணுவத்தினரும், ஒரு பொலிஸ்காரருமாக 9 பேர் மீது கொலை மற்றும் பாலியல் வன்முறைக் குற்றம் உட்பட 11 குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளனர்.

மேலும் அவர் சாட்சியளிக்கையில், உயிருக்கு அச்சம் ஏற்படும் என்ற காரணத்தால் நான் பல உண்மைகளை இராணுவப் பொலிசாருக்கும், சிவில் பொலிசாருக்கும் தெரிவிக்க முடியாத நிலையில் இருந்தேன். நான் திரும்பவும் இந்த எதிரிகளுடனேயே யாழ்ப்பாணத்தில் கடமையாற்ற வேண்டியிருந்தது. தான் எதிரிகள் - கிருஷாந்தியை பாலியல் வன்முறைக்கு உட்படுத்தியது, கொலை செய்தது தொடர்பான உண்மைகளை அப்போது கூறியிருந்தால் எனது உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று அஞ்சியதாலேயே அவற்றை மறைத்தேன் என்று கூறியுள்ளார்.

இவ் வழக்கில் 50-க்கு மேற்பட்டோர் சாட்சியாக அழைக்கப்பட்டபோது, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சாட்சிகள் பலர் விசாரணைக்கு சமூகமளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## விடுதலைப் புலிகள்...

இதேநேரம் 53-வது படையணி புளியங்குளச் சந்தியிலிருந்து மூன்று மைல் தொலைவினூடாகவே நகர்ந்து வருகின்றது.

சிறீலங்காப் படையினர் மீதான தாக்குதல்களை மூத்த தளபதிகள் கருணா, ஜெயம் ஆகியோரின் வழிநடத்தலில் புலிகளின் படையணிகள் ஒரு பகுதியில நடாத்தும்போது, மறுபகுதியில் மூத்த தளபதிகள் பால்ராஜ் - பானு ஆகியோரின் வழிநடாத்தலில் தாக்குதலை புலிகளின் அணிகள் தீவிரப்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## சங்கரத்தையில்...

சிப்பாய்கள் பலியாகி மேலும், பலர் படுகாயப்படுத்தப்பட்டுள்ளனர்.

பிற்பகல் 2.00 மணியளவில் வட்டுக்கோட்டையிலிருந்து சங்கரத்தையை நோக்கி சென்ற இராணுவ அணியினை சுற்றிவளைத்து, விடுதலைப் புலிகள் பெரும் அதிரடித் தாக்குதலை நடாத்தினர். சுமார் ஒன்றரை மணித்தியாலமாக கடும் தாக்குதல் இரு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்டன. விடுதலைப் புலிகளின் தாக்குதலை தொடர்ந்தும் எதிர் கொள்ள முடியாதரோந்து அணி சிதறியோடத் தொடங்கியது.

தாக்குதலின் முடிவில் 22 சிப்பாய்கள் பலியாகியுள்ளதா தாக்குதலை ஒத்துக்கொண்ட இராணுவ வட்டாரங்கள் 10 சிப்பாய்கள் அவ்விடத்திலேயே பலியாகி மேலும், சிலர் பின்னர் பலியானதாகவும் கூறியுள்ளனர்.

இத்தாக்குதலை அடுத்து மாவிட்டபுரம், அளவெட்டி, அராலி பகுதிகளைப் படையினர் சுற்றிவளைத்து தேடுதலை நடாத்திய போதும் விடுதலைப் புலிகள் பாதுகாப்பாக தளம் திரும்பி விட்டனர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## குடாநாட்டு...

ரமைமாகப் பார்க்கக் கூடியதாக இருப்பதாக கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையொன்று தனது முன்பக்கச் செய்தியில் தெரிவித்துள்ளது.


# 6ம் மாத நினைவஞ்சலி

அன்னையின் மடியில்:
01.04.1972

அந்நியர் அழிப்பில்:
19.05.1997



## கப்டன் தாயகம்

**பாலசுந்தரம் ரமேஷன்**

*அன்புத்தாய் மடியில் பூத்த அருந்தவச் செல்வமே*
*தமிழ் ஈழமண்ணின் மீட்பிற்காய் உதித்தவரே*
*உங்களை இழந்து மனந்தளர்ந்து உருகித்தவிக்கின்றோம்.*
*கண்களில் அழுதழுது நீரும் வற்றிவிட்டதே ஐயா,*
*உங்களை மணவாளக் கோலத்தில் காணவிருந்தோமே*
*நாளை மலரும் தமிழீழத்தின் வீரவேங்கையே புலிவீரரே*
*உங்கள் கனவு நிச்சயம் நிறை வேறட்டும் என்றும்*
*ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கிறோம்.*

தகவல்: அம்மா, அக்காமார், அத்தான்மார், மருமக்கள்.
திருமதி. சறோஜினிதேவி. பாலசுந்தரம்
Schwarzenburg Str- 256,3098, Koniz.
Tel: 031/ 97 20 298.


(1ம் பக்கத் தொடர்ச்சி)
## தமிழீழம்...

வரை தமிழீழம் எங்கும் மாவீரர்கள் தொடர்ச்சியாக கௌரவிக்கப்பட்டு வருவதுடன் அவர்களது குடும்பங்கள் இத் தினங்களில் தேசத்தின் கௌரவ பிரஜைகளாக மதிக்கப்படுவர்.

1990 முதல் 1994 வரை மாவீரர் நாள் நவம்பர் 21ம் திகதி முதர் 27ம் திகதி வரை அனுட்டிக்கப்பட்டது. 1995ம் ஆண்டிலிருந்து 25ம், 26ம், 27ம் திகதிகள் மாவீரர் எழுச்சி நாளாக கடைப்பிடிக்கப்படுகின்றன.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## இராணுவத்தைத்...

விலை நடாத்தியுள்ளனர்.

கற்குளி, வைரவப்புளியங்குளம் ஆகிய பகுதிகளிலேயே படையினர் சல்லடை போட்டுத் தேடியுள்ளனர் ஜெயசிக்குறுய் படை நடவடிக்கைக்கென அனுப்பப்பட்ட படையினரில் 60 சிப்பாய்கள் தங்களது முகாமைவிட்டு ஓடிச் சென்றதையடுத்தே படையினர் இத் தேடுதலை நடாத்தியுள்ளனர்.

இதே வேளை வவுனியாவிலிருந்து கிடைத்த இன்னொரு செய்தியின்படி தப்பிச் சென்ற படையினரைத் தேடச் சென்ற சிப்பாய்களில் சிலரும் தப்பிச் சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## தலைவர்...

புலிகள் பல வெற்றிகர தாக்குதல்களை நடாத்திய அதே வேளையில் மரபு ரீதியான போர்முறையில் தமது மேம்பாட்டை வெளிப்படுத்தி வருகின்றனர். இதேவேளை சந்திரிகா அரசு தனது நம்பகத்தன்மையை அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் இழந்து வருவதினால் தலைவரின் உரை பிருந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## 100,000...

செல்லையா தலைமையில் இடம் பெற்ற மகாநாட்டில் உரையாற்றிய சட்ட நிபுணர் கூலே அவர்கள் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமானது அமெரிக்க அரசமைப்புக்கு ஏற்புடையதல்ல எனக் குறிப்பிட்டார். மேலும், அமெரிக்க முதலாம் சட்ட திருத்தத்தின் கீழ் குறிப்பிட்ட ஏதாவது அமைப்பு சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதை நிரூபித்தால் அன்றி அவ் அமைப்பிற்கு நிதி உதவி செய்வதை தடுக்கவில்லை என்பதை அமெரிக்க மேல்முறையீட்டு நீதிமன்றம் ஏற்கனவே ஒரு வழக்கில் தீர்பளித்துள்ளது என்பதைச் சுட்டிக்காட்டினார்.


## லாச் சப்பலில் குறைந்த செலவில் நிறைந்த பிரயாணச் சேவை

**ERRANCES TRAVELS**

Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39 - Li: 075 95 01 37
55, Rue Louis Blanc, 75010 Paris.
M°: La Chapelle *ou* Louis Blanc

*à partir de*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Bombay | - 3,900 Frs. | | Londres | - | 790 Frs. |
| Delhi | - 3,900 Frs. | | New york | - | 2,600 Frs. |
| Bangkok | - 3,400 Frs. | | Montreal | - | 2,800 Frs. |
| Colombo | - 3,950 Frs. | | Oslo | - | 2,010 Frs. |
| Singapour | - 3,900 Frs. | | Toronto | - | 2,800 Frs. |
| Madras | - 4,300 Frs. | | Nepal | - | 4,820 Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

# காயத்திரி தொலைத்தொடர்பு நிலையம்

## Gayathree Mobile Communication LTD

குறைந்த செலவில் சர்வதேச தொலைபேசி தொடர்புகளுக்கும் மலிவான அழைப்பு அட்டைகளுக்கும் உங்கள் நினைவில் இருக்கவேண்டியது காயத்திரி தொலை தொடர்பு நிலையம்

NEW



**MOTOROLA MEMPHIS**
**£9.99**
தற்போது இலவசம்



**NOKIA 1620**
**£19.99**
தற்போது இலவசம்



**ERICSSON GF768**
**£149.99**
பல கவர்ச்சிகரமான சலுகைகளுடன்



**ERICSSON PH388**
**£49.99**
தற்போது
**£44.99**



**NOKIA 8146**
**£99.99**
தற்போது
**£79.99**



**STAR TAC MOTOROLA**
**£149.99**
**£10** கழிவு
(ஈழமுரசு வாசகர்களுக்கு மட்டும்)

### சர்வதேச அழைப்பு கட்டணங்கள்

| | |
|---|---|
| சிறீலங்கா | – 60 p. நிமிடத்திற்கு |
| பாகிஸ்தான் | – 57 p. நிமிடத்திற்கு |
| இந்தியா | – 49 p. நிமிடத்திற்கு |
| பங்களாதேஷ் | – 60 p. நிமிடத்திற்கு |
| அமெரிக்கா | – 20 p. நிமிடத்திற்கு |
| சோமாலியா | – 70 p. நிமிடத்திற்கு |
| ஈகுவடோர் | – 49 p. நிமிடத்திற்கு |
| கொலம்பியா | – 45 p. நிமிடத்திற்கு |

ஏனைய நாடுகளுக்கும் குறைந்த கட்டணமே

விரைவில் எமது நிலையத்தில் E-Mail சேவையும் ஆரம்பிக்கப்படவுள்ளது. சகல கைத்தொலைபேசி இணைப்புப் பாகங்களும் எம்மிடம் கிடைக்கும்

GMS & Voda One 2 One

*291A High Street North*
*Manor Park E 12*

**Tel: 0181 552 9113**

**Mobile 0958632428**
**Fax 0181 552 9313**

Pub

# சங்கர் அன் கோ

## மாபெரும் மலிவு விற்பனை

டிசம்பர் முதலாம் திகதி முதல் ஜனவரி 14 ஆம் திகதி வரை



**GRAND SALE**



**Tamil, Hindi, Punjabi & Sinhala**

* *Films Songs*
* *Devotional songs*
* *Classical Vocal & Intruments*
* *Christian Songs*





**CDs from.................. .99P**
**Audio cassetts from. .50P**
**Video cds from.........£6.00**
**Videos from.............£1.99**

தமிழ், ஹிந்தி, பஞ்சாபி, சிங்களம் ஆகிய மொழிகளில்

சினிமாப் பாடல்கள், பக்திப் பாடல்கள், சாஸ்திரிய சங்கீதம்,
- வாய்ப்பாடு
- வாத்தியங்கள்

கிறிஸ்தவப் பாடல்கள்

**SHANKAR & CO**

231, NORTHOLT ROAD
SOUTH HARROW
MIDDLESEX
HAZ SMN
Tel: 0181 - 42 68 960
Fax: 0181 - 86 15 248



**ALL SRILANKAN PRODUCTS AT WHOLE SALE PRICES**

Pub

# என்னவாச்சு என் தேசத்திற்கு...?

## பாமரன்

அன்பு மிக்க இளைஞனே,
வணக்கம்
நாட்டில் நலமா அனைவரும்?
இம் மண்ணில் பொன்விழாப் பொழுதில் உன்னோடு
பல விசயங்களைப் பகிர்ந்து கொள்வது
பரவசப்படுத்துகிறது நண்பனே.
'பொன்விழா' என்றதும் ஏனிப்படித் திருப்புகிறாய் முகத்தை?
புரிகிறது...
'எல்லாம் சடங்காகிப்போன
இந்த தேசத்தில்
இதுவும் அதுவாகிப் போனது'
என மேதின விழாவுக்கு உனது நண்பன் எழுதிய
கவிதை நினைவுக்கு வருகிறதா..?
எதையும் சடங்காக்குபவர்கள்
இதையும் சடங்காக்கட்டும்.
ஆனால்...
சீரான திசையை நோக்கி
சிரத்தைத் திருப்புபவர்கள்
சரியான சபதமேற்பதற்கான
சமயமாய்... இதையேன் கொள்ளக்கூடாது...?
அந்த ஆவலில் உதித்ததுதான் இந்த மடல்!
பேருந்துக் கம்பியைக் கரங்கள் பற்றும்போது கக்கத்திலிருக்கும் கிழிசல்
கண்ணில் பட்டுவிடுமோ எனக்
கவலைகொள்ளும் இளைஞர்கள்..
படிக்க வக்கற்றும்
படித்தால் வேலையற்றும்
டிக்கடை செய்தித்தாளில்
ஆட்கள்தேவைப் பகுதிகளிலேயே
அன்றைய பொழுதை அழித்துக் கொள்ளும் இளைஞர்கள்...
பத்துப் பாத்திரம் தேய்க்கும் தாய்
மூட்டை தூக்கும் தகப்பன்...
தாயின் சேலையை தாவணியாக்கிக் கொண்ட தங்கை...
இவர்களை மீட்க வழியற்று
பெரியாசுபத்திரியின் பிரேத பரிசோதனைக் கூடத்தில்
கிடத்தப்பட்ட இளைஞர்கள்...
'ஒரு வாய்ப்பு குடுங்க சார்... எஸ்.பி.பி குரல் எனக்கு அத்துப்படி'
என்று ஒவ்வொரு இசையமைப்பாளரை நோக்கியும்
படையெடுக்கும் இளைஞர்கள்...
அறை நண்பனின் தயவில் அன்றைய காலை உணவை
அரை 'பன்'னோடு முடித்துக் கொண்டு...
'அகிரா குரோசோவாவையே அசத்தும்படி கதை ஒன்னு
வெச்சிருக்கண்ணே.... நம்ம நாசரும், ராதிகாவும்
பொருத்தமா இருப்பாங்க... என்று
இயக்குநர்களைத் துரத்தும் இளைஞர்கள்...
புதுமைப் பித்தனும், சுந்தரராமசாமியும் படித்துவிட்டு அன்றைய சோத்துக்காக
ஆபாச பத்திரிகைக்கு அச்சுக் கோர்க்கும் இளைஞர்கள்...
என்னவாச்சு என் தேசத்துக்கு...?
அன்பு நண்பா!
'வேலை தேடல் எங்கள் வேலை' என்று சினிமாப்பாட்டு
பாடுவதோடு பூர்த்தியடைந்து விடாது உன் பணி!
வேலை தேடல் மட்டுமே உன் வேலையல்ல.
வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க சரியான
வழியைத் தேடுவதும்தான் உன் வேலை!!
'இதற்குக் காரணம் அரசியல்வாதிகள்தான்... இல்லை
அதிகாரிகள்... இல்லையில்லை மதவாதிகள்தான்...
அதுவுமில்லை மக்கள்தான்' என்று
பட்டிமன்றப் புலிகள் வேண்டுமானால்..
புலம்பிக்கொண்டு போகட்டும்.
உனக்கு அறிவுரை சொல்லும் அருகதை இல்லை எனக்கு.
எனக்குப் பிடிக்காதவைகளில் 'தன்னம்பிக்கை வியாபாரமும்' ஒன்று.
தண்ணீருக்குக் கூட 'விலை' வந்து விட்ட இந்த மண்ணில்
இன்னமும் இலவசமாய்க் கிடைப்பது இந்த 'அறிவுரை' ஒன்றுதான்.
உனது திறமைகளில் எவ்விதச் சந்தேகமுமில்லை எனக்கு...
இருப்பினும்...
எப்படிச் சாத்தியமற்றுப் போனது உனக்கான ஒரு வாழ்க்கை...?
உனது வாழ்க்கையைப் பறித்தவர்கள் பட்டியலில்
யார் யார் இருக்கிறார்கள்...?
யார் யாரை நோக்கி கை நீட்ட?
ஒரு வேளை,..
ஐம்பதாண்டுகளுக்கு முன்னர் விடிந்த 'காலை'
சரியான விடியலில்லையோ...?
இல்லை... இதற்கான சரியான விடைகளில்லையோ...?
வரலாறு அநேக விசயங்களை விழுங்கி விட்டதோ...?
வரலாறே உண்மையோ...?
வராமற்போன வரலாறுகளும் உள்ளனவோ..?
யோசிக்காதே... உண்மையும் அதுதான்.
கைராட்டையும் - கதர்க்குல்லாயும் மட்டுமே
வணிகனாய் வேடமிட்டு வந்த வெள்ளையனை வெளியேற்றியதா.?
அவனது வெளியேற்றத்திற்கான அனேக காரணங்களில்
அதுவும் ஒன்று. ஆனால் அது மட்டுமே காரணமன்று.
இதற்குப் பின்னால் மறைக்கப்பட்டிருப்பது உன்னைப்போன்ற
ஓராயிரம் இளைஞர்களது உன்னத தியாகங்கள்.
இது குறித்து நம் பாட நூல்கள் வேண்டுமானால்...
மௌனம் சாதிக்கலாம்...
ஆனால் நாம்...?
வீரமிகு இளைஞர்களது வீரவரலாற்றை நினைவு கூர்வதும்...
அதிலிருந்து பாடம் பெறுவதுமே
இப் பொன்விழாப் பொழுதின் பிரதான கடமையும்,
அவ்விளைஞர்களுக்கு நாம் திருப்பிச் செலுத்தும் நன்றிக் கடனுமாகும்.
விவஸ்தை கெட்ட தமிழனுக்கு கோடம்பாக்க சங்கரால்
அறிமுகப்படுத்தப்பட்ட 'நேதாஜி சுபாஷ் சந்திரபோசை' தெரியும் நமக்கு.
ஆனால்...
அவரது இந்திய தேசிய இராணுவம் குறித்தோ...
அதன் நடைமுறை குறித்தோ...
எத்தகைய சுதந்திரத்தினை அவர் அடைய முற்பட்டார்
என்பது குறித்தோ தெரியுமா நமக்கு...?
இவர் இறந்தது குறித்த விவாதங்களை வைக்கும் அரசுகள்...,
அவர் வாழ்ந்தது குறித்த வரலாற்றினை விளக்குவதேயில்லை.
இப்படித்தான்.... இப்படியேதான்
சித்திரவதைக்குப் பேர் போன காரட் கார்ஸான் வில்லியை
இலண்டனில் வைத்து தோட்டாக்களால் துளைத்த மதன்லால்திங்கரா...
1914 இல் கப்பற் படை எழுச்சியை ஒடுக்கிய ஹாப்கின்சனை
பட்டப்பகலில் கனடா நாட்டு நீதிமன்றத்தில் வைத்து
சுட்டுப் பொசுக்கிய மேவாசிங்...
லாகூர் சிறையில் உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த
ஜதீந்தரநாத்தாஸ்...
இப்படித்தான்...இப்படியேதான்...
இவர்கள் எவர் குறித்தும் வாயே திறப்பதில்லை வரலாறு.
இனிய நண்பா!
நமது அகிம்சை வெள்ளையனுக்கு மட்டுமே
வசதியான ஆயுதமில்லை... அவனுக்குப் பின்னால் வந்த கொள்ளையர்களுக்கும் வசதியான ஆயுதம்தான் என்பதனை இம் மறைக்கப்பட்ட வரலாறுகளை விரிவாகப் படித்தால் நீயும் தெளிவாக உணர்ந்து கொள்வாய்.
இவர்களது வரலாற்றைத் தேடிப் படிக்கும் போது...
'மகனே!
உன்னை எரிப்பதா
இல்லை புதைப்பதா
என்று கேட்டார்கள்...
விதைத்துவிடச் சொல்லிவிட்டேன்'
எனும் கவிதைவரிகள் நினைவுக்கு வருவதை தவிர்க்க முடியவில்லை.
இப்படி எத்தனை எத்தனையோ இளைஞர்கள்...
இயக்கங்கள்... இம் மண்ணோடு மண்ணாகப் புதைந்து போய்...
அந்த இளைஞர்கள் கண்ட கனவும்... எண்ணிய
சுரண்டலற்ற வாழ்க்கை முறையும் வேறு..., நமக்கு வந்து
வாய்த்ததோ வேறு...
இல்லாவிட்டால்
'இரவில் வாங்கினோம்
இன்னும் விடியவேயில்லை' என்று
புலம்பல் ரகக் கவிதைகளை எழுதிக்கொண்டிருக்க வேண்டிய
அவசியம் நேர்ந்திருக்காது நமக்கு.
இனி வரும் பொழுதாவது இனிதாகட்டும். அதுவும்
நமதாகட்டும் வெற்றி நமதே.
இத்தோடு நம் இனிய பெண்மணிக்கும் இன்னொரு
மடலை இணைத்துள்ளேன். அவரையும் அவசியம் படிக்கச் சொல்.

அன்புடன்
பாமரன்

---

# ஓராண்டு கண்ணீர் அஞ்சலி



**அன்பரசி சீனிவாசன்**

தோற்றம்: 25.07.1974

**சீனிவாசன் புவியழகன்**

தோற்றம்: 08.10.1975



**மறைவு: 23.11.1996**

**(நாவற்குழி கிழக்கு, கைதடி)**

கடவுள் தந்த இரு மலர் மொட்டுக்கள் அவை மலரும் முன்னே! மறைந்ததம்மா! ஒரே மரத்தில் உதித்த இவ்விரு மலர் மொட்டுக்களும், இவை மலர்வதைக் காத்திருந்த ஏனைய மலர்களுக்கும் ஆறாத்துயரை உருவாக்கிச் சென்று விட்டன. தம் வாழ்க்கையின் மலர்வினை எதிர்நோக்கிய வண்ணம் பரவசமாய் பறந்து வந்த பாதி வழியில் பயங்கரமான விமான விபத்தைத் தழுவிக் கொண்டனர். ஒரு மலர் தான் மலருமுன்னே அது அம்மரத்தில் மொட்டாகக் காணப்படும் பொழுது, அது மலர்வதைக் காண எத்தனை ஆவலாகக் காத்திருப்போம். நாம் காத்து நிற்கும் தருணத்தில் அது கனப்பொழுதில் மலராமலே மறையும் பொழுது அந்த மலரை எப்பொழுது காண்போம் என்னும் துயரத்தையும் அதிர்ச்சியையும் அடைகின்றோம். எல்லா மலர் மொட்டுக்களும் அவை மலராகிப் பின் மறைகின்றன. ஆனால் இவை மலரும் தருணத்திலேயே மறைந்துவிட்டன.

யாழ்ப்பாணம் நாவற்குழியைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. வைரமுத்து சீனிவாசன் அவரது துணைவியாராகிய சீனிவாசன் புனிதவதி ஆகியோரின் அன்புக் குழந்தைகளாகிய சீனிவாசன் அன்பரசி, சீனிவாசன் புவியழகன் ஆகிய இவ்விருவருமே சென்ற ஆண்டு 23.11.96 எத்தியோப்பிய விமானம் மூலம் தமது பிரயாணத்தை ஆரம்பித்த வேளையில் கோமறோஸ் என்னும் தீவை அண்மித்த வேளையில் விமானம் விபத்தில் சிக்கியது. அக்கோர விபத்தில் இவ்விருவரும் மரணத்தைத் தழுவிக் கொண்டனர்.

இவர்களது ஓராண்டு கண்ணீர் நினைவு தினத்தை அனுஷ்டிக்கும் வண்ணமாகவும், அவர்களது ஆத்மா சாந்தியடையவும் வண்ணமாகவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம். இவ் அறிவித்தலை ஏற்று இவர்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும் வண்ணம் தாழ்மையாக வேண்டுகிறோம்.

சென்ற வருடம் இவர்களின் இத்துயரமான சம்பவம் ஏற்பட்ட வேளையில் எமது துயரத்தில் பங்கு கொண்டும், தொலைபேசி மூலம் தமது ஆழ்ந்த துயரத்தை தெரிவித்த உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

**தகவல் தருபவர்கள்:**
சகோதரி ஸ்ரீமதி ஆனந்தராஜன்
மைத்துனர் அருள் ஆனந்தராஜன்
Via del castello 66/2
16036 RECCO GE, ITALY
Tel: 0039 33 820 80 422




காலங்கள் கெதியா மாறிக்கொண்டு போகுது பிள்ளையள். முந்தி நான் சின்னவனா இருக்கேக்க என்ர பெத்தாச்சிக்கிழவி, எங்களை தூங்க வைக்கிறதுக்கு கனக்க நல்ல நல்ல கதையள் எல்லாம் சொல்லுவா. கற்பனையா இருந்தாலும் பெத்தாச்சி கதை சொல்லேக்கை அவவின்ர அசைவுகளைப்பாக்க உண்மை மாதிரியே இருக்கும். நாங்களும் சுத்திவர இருந்து இரவிரவா கேட்டுப்போட்டு அதே நினைவோட தூங்கியும் போயிடுவம். இப்பிடி வளந்தனாங்கள்... எனி எங்கட பேரப்பிள்ளையளுக்கு அந்தக் கதையளைச் சொல்லி சந்தோஷம் காணுற சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடும் போல கிடக்கு! ஏனெண்டா நாங்கள் கதைக்கிறது ஒரு மொழி. அதுகள் கதைக்கிறது இன்னொரு மொழியா எல்லோ இருக்குது...!

விரிவான ஆராய்ச்சியெல்லோ நடத்துகினம்! தாய்மாருக்கு இவை கதைக்கிற மொழி விளங்கேலையோ... இல்லை, தங்கட கதை ருசியில இதுகள் கதைக்கிறதைப் பற்றி அக்கறைப் படேலையோ(...?) தெரியேலை. அவையளுக்கு விளங்குமெண்டு தெரிஞ்சிருந்தா அதுகள் அவையோடை இருந்து அப்பிடிக் கதைச்சிருக்குங்களே? இருக்குறுள்ள நான் இறங்க வேண்டிய இடமும் வந்துட்டுது. ஆத்தாம இறங்கேக்க எழும்பிப்போய் தாய்மாரை பாத்து 'உங்களுக்கு பிரெஞ்ச விளங்குதமோ? எண்டு கேட்டுக்கொண்டு இறங்கி வெளியிலபோட்டன்.....

ஏனிந்த தமிழ் 'நையினரி' இப்பிடிக் கேட்டதெண்டு பிறகு யோசிச்சுப்பாத்து அண்ணைக்கு அந்த சின்னனுகளுக்கு சாத்து விழுந்துதோ தெரியாது. இஞ்ச பிள்ளையளுக்கு என்னெண்டு அடிக்க முடியும்? கையைக்கிப்பை வைச்சா, பிள்ளையள் பொலிசுக்கெல்லோ அடிச்சு சொல்லிப்போடுங்கள். எனக்குத் தெரிய ஒரு நாலு வயசுப் பொடியன் இருக்கிறான், தேப்பன்காரன் அடிக்கிறதுக்கு கையை ஓங்கினாக்காணும் டெலிபோனடிக்க ஓடிப்போய் நிண்டு சொல்லுவான். பொலிசுக்கு

# ஒண்ணுமே புரியல்லை...
# அம்மாவுக்கு மொழிதெரியல்லை.

கதைக்கிறது ஒரு மொழி. அதுகள் கதைக்கிறது இன்னொரு மொழியா எல்லோ இருக்குது...! பெத்தவைக்கும் பிள்ளைக்கும் இடையிலேயே ஒரு இடைவெளி விழுந்து கொண்டிருக்கேக்க, இனிவாற சந்ததியில, பேரன்மார் பேரப்பிள்ளையளோட நிலை கைப்பாசையாத்தான் இருக்கப்போகுது பிள்ளையள்.......!

என்ன செய்யிறது இக்கரைக்கு அக்கரைப் பச்சை மாதிரி. பிரான்சில இருந்து லண்டனுக்கும், லண்டனில இருந்து கனடாவுக்கும். கனடாவில இருந்து சுவிசுக்குமெண்டு அடிக்கொருக்கா நாடு மாறுறதால பிள்ளையள் மட்டும் பலமொழியளைப் படிச்சு பல்கலைக்கழகமா மாறுதெண்டது உண்மைதான்,

> நாங்களும் சுத்திவர இருந்து இரவிரவா கேட்டுப்போட்டு அதே நினைவோட தூங்கியும் போயிடுவம், இப்பிடி வளந்தனாங்கள்... எனி எங்கட பேரப்பிள்ளையளுக்கு அந்தக் கதையளைச் சொல்லி சந்தோஷம் காணுற சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடும் போல கிடக்கு! ஏனெண்டா நாங்கள் கதைக்கிறது ஒரு மொழி. அதுகள் கதைக்கிறது இன்னொரு மொழியா எல்லோ இருக்குது...!

ஆனா அந்தப் பிள்ளையளின்ர தாய்தேப்பன்ர நிலையெல்லோ யோசிக்க வேண்டியதாய்க் கிடக்கு! அவையளவையள் இருக்கிற நாட்டு மொழியை கதைக்கத் தெரியாட்டியும், அதை புரிஞ்சுகொள்ள எண்டாலும் தெரிஞ்சு வைச்சிருக்கவேணும் கண்டியளோ.

இப்பிடித்தான் நேற்று 'மெற்றோ'வுக்க ஏறுறன், அந்தப் 'பெட்டி'க்க எங்கட சனங்களும் இருக்கினம். எங்கையோ கொண்டாட்டங்களுக்கு போகினமோ இல்லை, போட்டு வருகினமோ தெரியேலை. எங்கட ஆக்கள் கொண்டாட்டங்களுக்கு போகினம் எண்டால் புரியா தெரியும் கண்டியளோ. அதுவும் பெம்பிளையள் எண்டால் சந்தேகமில்லாமல் சொல்லலாம். அய கதையைக் கேளுங்கோவன்... அந்த ரெண்டு தாய்மாரும், தங்கத்தோட இண்டைய விலையும் தரமும் பற்றி பெரிய விவாதம் நடத்துகினம். அவையளின்ர பிள்ளையள் ரெண்டும் தங்கட பாடு. நான் தாய்மாற்ற பிரசங்கத்துக்க காதைக் குடுத்துட்டன். (ஒட்டுக்கேட்டுக்கோட்டே அடுத்த பிறவியில அருவையர் பாம்பாத்தான் பிறப்பாரெண்டு சாபிச்சுப் போடாதையுங்கோ பிள்ளையள்) அதால அந்தச் சின்னனுகள் ரெண்டும் என்ன கதைக்குதெண்டு முதலில நான் அக்கறைப்படேல்ல. திடீரெண்டு அங்கால காதைக்குடுத்தா......!

எனக்கு 'ஷாக்'காப் போச்சுது பிள்ளையள்! இத்தனைக்கும் அவையளுக்கு பத்துப்பன்ரெண்டு வயசுதான் வரும். அவை என்ன கதைச்சவையெண்டோ யோசிக்கிறியள்? இஞ்சத்தை காதலர்மாற்ற முத்தங்களைப் பற்றி ஒரு

அடிச்சுச் சொல்லிப்போடுவன்' எண்டு! தேப்பன்காரர் அவ்வளாத்தோட சரி! தூக்கின கையை அப்பிடியே மெல்ல...... கீழ விடவேண்டியதுதான். இஞ்சத்தை சட்டத்தை மதிக்கவேணும் அதோட எங்கட கலாச்சாரத்துக்கு ஏத்தமாதிரி வாழுறதெண்டா சரியான கஷ்டம்தான் பிள்ளையள்.

தங்கட பிள்ளையள் மட்டும் மொழியைப் படிச்சாக்காணும், தாங்கள் இப்பிடியே ரெண்டு சொல்லை தெரிஞ்சு வைச்சுக்கொண்டு காலத்தை தள்ளுவம் எண்டு நினைக்கிறவையின்ர பாடுதான் பெரும்பாடாக்கிடக்கு...... வேலை செய்யிற இடங்களில 'பெரியவங்கள்' ஏதாவது சொன்னாக்கூட உடன 'ஓம்' எண்டு சொல்லி முறிய வேண்டியல்லோ கிடக்கு. இல்லையெண்டு சொன்னா, அதுக்கவன் ஏனெண்டு திருப்பியொரு கேள்விகேட்டா, பதில் சொல்லத் தெரியவேணுமே....! அதால எங்கட சில சனங்கள் எல்லாத்துக்கும் 'ஓம்' எண்டு சொல்லியே பழகிப்போச்சுதுகள்.


அதைவிட சிலபேர் ஊர் நினைப்பிலை இஞ்சையும் வெத்திலை பொட்டலம் கொண்டு திரியினம். அவைக்கு வெத்திலையையும் பாக்கையும் போட்டு சப்புசப்பெண்டு சப்பி நாலு துப்பு துப்பினாத்தான் நிம்மதியேவரும். அப்பிடி ஒருத்தரை பொலிஸ்காரர் பிடிச்சு அவற்றை பொட்டலத்தை எடுத்து வெத்திலையை என்னெண்டு கேட்டிருக்கினம் அதுக்கவர் 'இலங்கையான் சலாட்' எண்டு சொல்லிச் சமாளிச்சுப்போட்டார். சுண்ணாம்பு டப்பியை என்னெண்டு கேக்க, சலாட்டில பூசி சாப்பிடுறதெண்டு கைப்பாசையில காட்டியிருக்கிறார். அதோட விட்டிச்சினமே? சுண்ணாம்பை அள்ளி வெத்திலையில பூசிப்போட்டு சாப்பிட்டு காட்டெண்டு சொல்லியிருக்கினம்..... பொட்டலத்தை வைச்சிருந்தவர் அதுக்கு விளக்கம் குடுக்கிறதுக்கு பட்டபாடிருக்கே..... கடைசியா அதை வாங்கின கடைவரைக்கும் போய் விளக்கம் கொடுக்க வேண்டியதாப்போச்சுது கண்டியளோ.

பெரியவையின்ர நிலைமை இப்பிடியிருக்க அடுத்த சந்ததியின்ர நிலைமையொல்லோ எதிர்மாற போய்க்கொண்டிருக்கு! சில தாய்தேப்பன் பிள்ளையள் ரெண்டு மூண்டு மொழியிலை படிச்சா அதுகளுக்கு மூளை குழம்பிப்போமெண்டு. 'கட்' பண்ணுறது என்னவோ தங்கட தாய் மொழியைத்தான். அதால தங்கட சந்ததிக்கிடையில விலகிக்கொண்டு போற உறவைப்பற்றி அவையள் சிந்திக்கிறேல்லை. இதென்னெண்டா வாகனம் ஓட்டுறவருக்கு கண்ணும், காலும், கையும் எப்பிடி ஒரே நேரத்தில கவனமா இருக்க முடியுமெண்டு கேட்ட மாதிரியிருக்கும் பிள்ளையள். நாகரிகம் எண்டு நாங்க நினைச்சுக்கொண்டு விடுற தவறு வளந்துவாற அந்தப் பயிர்களையும் பாதிக்கிறதெண்டதை எண்டாலும் இந்த நேரத்தில நாங்கள் புரிஞ்சு கொள்ளவேணும். நாளைக்கு அதுகள் ஏடாகூடமா ஏதாவது செய்தாப்பிறகு அழுது ஆர்ப்பாட்டம் செய்யிறதிலை பிரயோசனம் இல்லைக் கண்டியளோ!

'ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனை சான்றோன் எனக்கேட்ட தாய்' வள்ளுவருடைய அனுமதியில்லாமல், சின்னத் திருத்தம் செய்வம் பிள்ளையள்.

'சான்றோன் எனச் செயலவைத்த தாய்'.

**அருமைத்தம்பி**




குசைப்பிள்ளை - பாரிஸ் 11.

♦ ஒரு நல்ல தலைவனாவது எப்படி?

✍ இலட்சிய உறுதி, பாசாங்கு இல்லாத செயற்பாடு, விட்டுக் கொடுப்பில்லாத போர்க்குணம் இந்த மூன்றும் உள்ள ஒருவன் தொடர்ச்சியான செயற்பாட்டின் மூலம் நல்ல தலைவனாக வரலாம்.

சி.குட்டி - பாரிஸ் 20.

♦ சொந்த நாட்டைத் துறந்து அந்நிய நாட்டுக்கு வந்தும் தமிழர்களின் துரோகத்தனம் மறையவில்லையே அது ஏன்?

✍ இது உடன் பிறந்தே கொல்லும் வியாதி. பரதேசம் வந்தாலும் மறையாது.

இராஜதுரை சுரேஸ் - ஒன்டாரியோ

♦ தாயகத்தில் ஒருவேளை சோற்றுக்கு மக்கள் அல்லல் படும் போது, இங்கு கேளிக்கை விருந்துகள் தேவை தானா?

✍ தாயகம்! What is that?.. நீர் கேளிக்கை விருந்து கூடாது என்று சொல்வது அராஜகமாக்கும்!!

மாலதி, பாரிஸ் - 10

♦ செய்திகளை உள்ளதை உள்ளபடி கூறாமல் கவர்ச்சிகரமாக பெரிதுபடுத்தி வெளியிடும் பத்திரிகைகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

✍ செய்தி வியாபாரிகள்.

துளசி, ஈஸ்ட்ஹாம் - லண்டன்

♦ புலம்பெயர் வாழ்வில் அல்லலுறும் அகதிகளுக்கு உமது ஆலோசனை என்ன குப்தனாரே?

✍ தண்ணீரை விட்டு விலக்கப்பட்ட மீனின் நிலையும் தாயகத்தை விட்டுப் பிரிந்தவனின் நிலையும் ஒன்று. மீனுக்கு தண்ணீர்தான் பாதுகாப்பு. அது போல் ஒவ்வொரு மனிதனுக்கும் அவனது தாயகத்தில்தான் உண்மையான பாதுகாப்பும் நிம்மதியும் கிடைக்கும். புலம்பெயர் வாழ்வில் சலுகைகளை தேடி அலைவதைவிட்டு தாயகத்தை மீட்க வழி தேடுங்கள்.

அருள்சாமி, Bodswana, அபிரிக்கா

♦ 2000—ம் ஆண்டில் உலகம் அழிந்துவிடுமாமே. பிறகேன் விடுதலைப் போராட்டம் குப்தனாரே?

✍ உலகம்' என்பது எந்த உலகம்? மனிதர்கள் வாழும் உண்மையான உலகம் அழிவதற்கு பல கோடி வருடங்கள் இருப்பதாக விஞ்ஞானிகள் சொல்கிறார்கள்.

ரவீந்திரன் ராகினி
- பாரிஸ் 18, பிரான்ஸ்

♦ பாரிசில் நம்மவர்களின் வட்டி வீதம் எவ்வளவு போகிறது குப்தனாரே?

✍ 60% அதாகப்பட்டது. நூற்றுக்கு மாதம் 5 ரூபா (5%) வட்டி. வருடத்திற்கு 60 ரூபா (60%).

மாலா, டென்மார்க்

♦ டார்லிங் சித்திரகுப்தனாரே, எங்கே பல நாட்களாகக் காணவில்லையே?

✍ அடியேன் நீண்ட 'ஊர் லாப்பில்' போய்விட்டேன்.

ஆர்.சதீஸ் - போர்தே, பிரான்ஸ்

♦ ஜெயசிக்குறுய் III பாதை திறக்குமா? அல்லது பாதையில் காணாமல் போகுமா?

✍ அது சுக்குநூறாகிவிடும்.

வசந்ததாஸ் லதா- நொயிஸ், ஜேர்மனி

♦ ஜே.என்.தீட்சித் கொழும்புப் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் பிரபாகரன் தலைசிறந்த அரசியல் சாணக்கியன் என்பது பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?

✍ சிலருக்கு பதவியில் இருக்கும் போது எதுவும் தெரிவதில்லை. ஓய்வுபெற்ற பின்புதான் ஞானம் பிறப்பது வழக்கம். தீட்சித்தும் அந்தவகை தான்.

வி.ஆனந்தன் - சூரிச், சுவிஸ்

♦ எனது தலைமயிர் உதிர்கின்றது. எனது நண்பர்கள் சொல்கிறார்கள், பிடுங்கி நடலாம் என்று. எனக்கு விருப்பமில்லை. உமக்கு இதுபற்றி ஏதாவது வைத்தியம் தெரியுமா?

✍ தலைமயிர் உதிர்வதற்கு, தலை நரைப்பதற்கு மருத்துவ ரீதியாக பல காரணங்கள் உண்டு. சில காரணங்களை மருத்துவ ரீதியாக தடுக்கலாம். சிலவற்றைத் தடுப்பதற்கு அதிக செலவாகும். பிடுங்கி நடுவது அந்த வகைதான். வழுக்கை என்பதும் தலை நரைப்பதென்பதும் உயிருக்கு அச்சுறுத்தல் தரக்கூடிய நேரமல்ல. இயல்பு நிலையை ஏற்றுக்கொள்வது தான் புத்திசாலித்தனம். இயல்புக்கு மறைப்புத் தேட முற்பட்டால், வாழ்க்கையில் எல்லா விடயங்களிலும் நீர் மறைப்புத் தேடும் ஆளாக இருப்பீர்.


## சிவதயா தமிழ் அச்சகம்

★ உங்கள் சகலவித அழைப்பிதழ்களும் மிக அழகான, நவீன, தரமான அழைப்பிதழ்களிலும் மற்றும் சகல அச்சுப் பதிப்புகளுக்கும் குறித்த நேரத்தில் மிக விரைவாக செய்து தரப்படும்.

★ எம்மிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டால் நாம் இலவசமாக Model Cards உங்களுக்கு அனுப்பி, Fax or Telephone மூலமாக விபரங்களை பெற்று குறிப்பிட்ட தவணையில் உங்களுக்கு அழைப்பிதழ்களை பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைப்போம்.

**தொடர்புகளுக்கு: Mr. K. Siva**

*Haupt Str - 13, 6313 Menzingen (Zug, Switzerland)*
*Tel: & Fax: 41/ 7553192*

**அழைப்பிதழ் தயாரிப்பாளர்களுக்கு!**
தரமான அதிநவீன அழைப்பிதழ்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

தேசிய மாவீரர்களுக்கு
எமது வீர வணக்கம்

SAI TRADERS



Rasamahickam Import
Asp Strasse-6
8759 Spreitenbach (AG), Swiss.
Tel: 056-4102100 / 41021014102
Fax: 056-4102104

Sri Murugan

உங்கள் தேவை! உங்கள் கடை!! எங்கள் சேவை!!!

மாவீரர்களுக்கு
எமது
வீர வணக்கங்கள்



எமது
நேரடி இறக்குமதியில்
* சிங்கப்பூர் 22 கரட் தங்க நகைகள் எமது S.A.M. முத்திரை பதிக்கப்பட்டு உத்தரவாதத்துடன் இறக்குமதி செய்து தரப்படும்.
* பனாறிஸ், காஞ்சிபுரம் மற்றும் அனைத்து சேலை வகைகள்
* குழந்தை முதல் பெரியோர் வரை அனைத்து ரக உடுப்புகள்
* அனைத்து புதிய பழைய ஓடியோ, சீடிக்கள், அத்துடன் தமிழ், ஹிந்தி ஒறிஜினல் வீடியோ கசட்டுக்கள் வாடகைக்கும், விற்பனைக்கும் எம்மிடமுண்டு.

மற்றும்
* மளிகைப் பொருட்கள்,
* மரக்கறி வகைகள்,
* கடலுணவு வகைகள்,
* எவர்சில்வர் பொருட்கள்

அனைத்தும் மிக மிக மலிவு விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு

**Wiesen Str 3A, 4900 Langenthal, Switzerland**
Tel: 062 9221798
Fax & Tel: 062 9227833
H.P (Natel) 079 3326208 Maniccam, Illamurugan
தொடர்புகளுக்கு: மாணிக்கம் இளமுருகன் - Tel: 079. 3326208
**Sri Murugan Garments & Jewellers**
Oriental Food Specialites & Sea Foods

மாவீரர்களுக்கு எமது வீரவணக்கம்

உங்கள் பண மாற்றுக்கள்,
உடனுக்குடன் நேரடியாக குறித்த
நேரத்தில் விநியோகிக்க வேண்டுமா?
நம்பிக்கை! நாணயம்!! உத்தரவாதம்!!!

காந்தி ரேடர்ஸ்

உடன் தரமான மரக்கறி வகைகள்,
மீன் வகைகள், தமிழ் சஞ்சிகைகளுக்கும்
நாடவேண்டிய ஒரே நிறுவனம்.

GANDHI TRADERS
AV. DE FRANCE - 2,
1004 LAUSANNE.
TEL/ FAX: 021 625 29 25

தமிழீழ தேசத்தின் உதயத்திற்காய்
வித்தாகிவிட்ட மாவீரர்களுக்கு
எமது வீர வணக்கம்

ஏசியன் என்ரபிறைஸ்



பழைய நகைகளை விற்பனை செய்வதற்கும்; பழைய நகைகளை மீளப் புதுப்பிப்பதற்கும், புது நகைகள் செய்வதற்கும், பல வகைப்பட்ட தங்க நகைகளுக்கும் புதுப்புது டிசைன்களில் பஞ்சாபி வகைகளுக்கும் ஏசியன் என்ரபிறைஸ்ஸை நாடுங்கள்

* தங்க நகைகளுக்கு உத்தரவாதமும் பற்றுச்சீட்டும் வழங்கப்படும் *

ASIAN ENTERPRISE
Hohl.Str 78, 8004 Zurich.
Tel: 01/291 46 52 Fax: 01/291 46 37

# புகலிட நிகழ்வுகள்

## 20ம் ஆண்டு நிறைவு விழா!

சைவ முன்னேற்றச் சங்கத்தின் (பிரித்தானியா கிளை) 20-வது ஆண்டு நிறைவு விழா, கடந்த 15-ம் திகதி (சனிக்கிழமை) Nov. 97 இல் ஈஸ்ற்ராம் இல் உள்ள நகர மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. சங்கம் இருபதாவது ஆண்டில் காலடி எடுத்து வைப்பதை குறிப்பதற்காக இருபது தீபங்கள் ஏற்றி வைத்ததுடன், திருமறையும் பாடப்பட்டது. தொடர்ந்து வரவேற்புரை சங்கத் தலைவர் திரு ஆர். பத்மநாதன் அவர்களால் வழங்கப்பட்டது. சிறப்பு அதிதியாக MR.Stephen Timms அவர்களும், (MP. For. East Ham) கௌரவ விருந்தினராக திரு.கோபாலசுப்பிரமணியம் அவர்களும் இந்த நிகழ்வுக்காகவே கொழும்பில் இருந்து வந்து கலந்து கொண்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர் உதவித்தலைவர் சைவ முன்னேற்ற சங்கம் கொழும்பு என்பதும் குறிப்பிடத்தக்கது. இவரின் உரையை தொடர்ந்து மனனத்தேர்வில் மாணவர்களுக்கு பரிசளிப்பும் நடந்தது.

தொடர்ந்து நாவலர் கலைக் கல்லூரி (Academy) மாணவிகளால் செல்விகள் சத்தியா இலிங்கானந்தன், காயத்திரி சூரியகுமாரன் நாட்டியத்திற்கு திருமதி சுகிர்தகலா கடாட்சம் அவர்கள் பாட்டுப்பாட, திரு. விசாகன் அவர்கள் மிருதங்கம் வாசிக்க ஜெயலட்சுமி நவசிவாயம் அவர்கள் வயலின் வாசித்தார். நடன ஆசிரியர் திருமதி ராஜினி மோகனராஜ் என்பதும் குறிப்பிடத்தக்கது.

முக்கிய நிகழ்வான National Lottary Charty Board இனால் வழங்கப்பட்ட காசோலையான (32,000 டொலர்கள் பெறுமதியானது) M/S Sharan அவர்களால் வழங்கப்பட்டது. தொடர்ந்து சைவ முன்னேற்றத்திற்காகவும் சமூகத்திற்காகவும் பாடுபட்டவர் பொன்னாடை போர்த்தியும் பாராட்டுகள் வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர். தொடர்ந்து விணையை அபிராமி தசரதகுமார், சுபாஞ்சலி வாமனானந்தன் அவர்கள் மீட்டி பரவசத்தில் ஆழ்த்தினார்கள்.

தொடர்ந்த நிகழ்வுகளில் சங்கத்தினால் விற்பனை செய்யப்பட்ட சீட்டிழுப்பு (அதிர்ஷ்ட) முடிவுகள் அறிவிக்கப்பட்டது.

எல்லா நிகழ்வுக்கும் சிகரம் வைத்தால் போல அமைந்தது 'வருங்கால முத்துக்கள்' நாடகம் மிகவும் திறமையாகவும் சபையோரைக் கவர்ந்ததுமான பல பாத்திரங்கள் நாடகத்தில் காணப்பட்டன. இதற்கு காரணமாக அமைந்த அவர்களின் முகபாவனை நடிப்பு, தமிழில் சரளமாக உரையாடியதுமே!

நன்றியுரையை திரு வி.ஆர் இராமநாதன் அவர்கள் நிகழ்த்தியிருந்தார். மொத்தத்தில் நிகழ்ச்சிகள் யாவும் சிறப்பாகவும் அமைப்பாளர்களின் தீவிர முயற்சியுமே இது சிறப்பாக அமையக் காரணமாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## சுதந்திரப் பொன்விழா இலக்கியப் போட்டிகள்

தமிழ்நாடு திருப்பூர் கலை இலக்கியப் பேரவை சர்வதேச ரீதியிலான சுதந்திரப்பொன் விழா இலக்கியப் போட்டியொன்றினை நடாத்தவுள்ளது. சிறந்த படைப்புகளுக்கு பணப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. நாவல், சிறுகதை, புதுக் கவிதை, மரபுக்கவிதை என்பன போட்டிக்காக எதிர்பார்க்கப் படுகின்றன. படைப்புகள் யாவும் சமூக அக்கறையுடனும் நவீன வாழ்க்கையின் சிக்கல்களை மையமாக்கியும் இருத்தல் வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது. படைப்புகளை 'திருப்பூர் கலை இலக்கியப் பேரவை' 10, ஸ்டேன்ஸ் இரண்டாம் வீதி, திருப்பூர் -641602 என்ற முகவரிக்கு எதிர்வரும் 30.01.98 க்கு முன் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். மேலதிக விவரங்களுக்கு 743148, 764294 என்ற தொலை எண்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

## தமிழாலய கல்விப் பொதுத்தேர்வில் 1855 மாணவர்கள் தோற்றினர்

ஜேர்மனி உலகத் தமிழர் இயக்கத்தின் கல்விப்பணி நாடு முழுவதும் கடந்த சனியன்று ஆண்டுப் பொதுத் தேர்வை நடாத்தியது. நாடு முழுவதிலுமுள்ள தமிழாலயங்களை ஒன்றிணைத்து 26 மத்திய நிலையங்களில் தேர்வு நடைபெற்றது.

ஜேர்மனியில் 1855 தமிழாலய மாணவர்கள் இத் தேர்வில தமிழ்மொழி சமூகக்கல்வி ஆகிய பாடங்களில் தோற்றினர். தேர்வு நடைபெற்ற 26 நிலையங்களுக்கும் ஒரே நேரத்தில் காலை கேள்விப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. அதேபோன்று தேர்வு முடிந்ததும் மாணவர்கள் எழுதிய விடைப் பத்திரங்களை ஒரே நேரத்தில் சேகரிக்க உலகத் தமிழர் இயக்க கல்விப்பணி ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

காலை தமிழ் மொழித்தேர்வும் பிற்பகல் சமூகக்கல்வியும் இடம்பெற்றன. தேர்வு நிலையங்களில் மேற்பார்வையாளர்களாக நூற்றுக்கும் அதிகமான ஆசிரியர்கள் கடமையாற்றினர். மேற்படி தேர்வுகளில் கடந்த வருடத்தையும் விட இவ்வருடம் அதிகமான மாணவர்கள் பங்குபற்றியது இங்கு குறிப்பிடத்தக்கது. தமிழீழத்திற்கு வெளியே புலம்பெயர்ந்த மக்கள் வாழும் வெளிநாடுகளில் ஒரே நாளில் தமிழ் மொழித் தேர்வில் பெருமளவில் தமிழ் மாணவர்கள் பங்குபற்றுவது ஜேர்மனியில் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த 15.11.97 சனியன்று பொதுத்தேர்வு திட்டமிட்டதின் படி சிறப்பாக நடந்தேறியதாக உலகத் தமிழர் இயக்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## 'பூவரசு' நடாத்தும் இலக்கியப் போட்டிகள்

ஜேர்மனியில் இருந்து வெளிவரும் 'பூவரசு' இதழ் தனது 7-வது ஆண்டு நிறைவினையொட்டி ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர்களிடையே சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டிகளை நடாத்தவுள்ளது. சிறுகதைகள் மேலைத்தேச, கீழைத்தேச கலாச்சாரப் பின்னணியை கருவாக கொண்டதாக அமைய வேண்டும். கவிதைகள் 'எங்கு தான் செல்வாய் இனி!' என்ற தலைப்பினைக் கொண்டதாகவும் கட்டுரைகள் 'மண்ணும் மனிதமும்' என்ற தலைப்பினைக் கொண்டதாகவும் அமைய வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது. போட்டிக்கான முடிவு திகதி 20.12.97 ஆகும். மேலதிக விபரங்களுக்கு 'Poovarasu' Sinniah Maheswaran, Otto Brenner Allee 56, 28325 Bremen, Germany என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

## 125வது ஆண்டு நிறைவு விழா

காவலூர் புனித அந்தோனியார் கல்லூரியின் 125-வது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 13.12.97 அன்று இலண்டனில் நடாத்தப்பட ஏற்பாடாகியுள்ளது. Sedgehill School hall, Sedgehill Road, Catford London Se 6 3 QW என்ற முகவரியில் நடைபெறவிருக்கும் மேற்படி நிகழ்ச்சியில் கலந்துகொள்ளுமாறு கல்லூரி பழைய மாணவர்களும், காவலூர் தொகுதியை சேர்ந்தவர்களும், அவர்தம் நண்பர்களும் குடும்பமாக அழைக்கப்படுகின்றனர்.

பல்வேறு கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடாகியிருப்பதுடன் இரவு விருந்துபசாரமும் நடைபெறவுள்ளது.

## பாரிஸ் Noisy Le Grand ல் புதிய தமிழ்ச்சோலை ஆரம்பம்

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பிரான்ஸ் கிளையினர் பிரான்சில் பலபகுதிகளிலும் 'தமிழ்ச்சோலை' கல்வி நிலையங்களை ஆரம்பித்து வருகின்றனர். புலம்பெயர்ந்த தமிழ் சிறார்களுக்கு தாய் மொழிக் கல்வியை பயில விக்கும் நோக்கத்துடன் இயங்கி வரும் தமிழ்ச்சோலை கல்வி நிலையங்கள், ஆரம்பிக்கப்படும் இடங்களிலெல்லாம் அப்பகுதி வாழ் தமிழ் பெற்றோர்களின் வரவேற்பைப் பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

கடந்த 16.11.97 இல் பாரிஸ் புறநகரப் பகுதியான Noisy Le Grand இல் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தமிழ்ச்சோலை நிலையத்தின் ஆரம்ப நிகழ்வுக்கும் ஏராளமான தமிழ் பெற்றோர்கள் கலந்துகொண்டதுடன், கல்வி நிலையத்தின் வளர்ச்சியில் பங்கெடுத்துக் கொள்வதாகவும் பலர் உறுதியளித்துள்ளனர்.

தமிழ்ச்சோலை வகுப்புகள் சனிக்கிழமை மாலை 16.30 தொடக்கம் 18.30 வரையிலும் ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி தொடக்கம் மாலை 18.00 மணிவரையும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. 111, La Piazza Mont D'Est, 93160 Noisy Le Grand என்ற முகவரியில் நடைபெறும் தமிழ்ச்சோலை வகுப்புகளில் பயில விரும்புவோர் 01 43042596 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

## இலண்டனில் நடைபெறும் 'கல்லூரிப் பூக்கள் - 97'

தாயக மண்ணில் பெற்றோர்களை இழந்த பிள்ளைகளுக்கு ஆதரவு வழங்கும் முகமாக இலண்டன் சர்வதேச தமிழ் மாணவ மன்றத்தினர் 'கல்லூரிப் பூக்கள் -97' என்னும் கலை நிகழ்ச்சியை நடாத்தவுள்ளனர்.

மேற்படி கலை நிகழ்ச்சியில் சுபாலேந்திராவின் நெறியாள்கையில் 'மெய்சுடரே...' கவிதா நிகழ்வு, Tamil Vibration வழங்கும் மேற்கத்திய இசைநடனம், இன்னிசைவிருந்து. பல்கலைக்கழக மாணவிகள் வழங்கும் பரதநாட்டியம் போன்ற பல நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. எதிர்வரும் 30.11.97 ஞாயிறு மாலை 6 மணிக்கு Ealing Town hall, New broadway, Ealing, London w5 என்ற முகவரியில் நிகழ்ச்சிகள் நடைபெறும்.

தமிழீழத்தில் பிரசித்தி பெற்ற

REEGAL VIDEO MOVIES

றீகல் வீடியோ மூவிஸ்

தமிழ் வீடியோ துறையில் 'கொம்பியூட்டர் எடிட்டிங்' முதல் முறையாக அறிமுகப்படுத்துவோம்.

தொலைபேசி: 06 60 94 75 91 / 01 49 88 93 15

மேலதிக விபரங்களுக்கு:

THAVAM VIDEO CENTER

64, Rue louis Blanc, 75010 Paris. M°: La Chapelle

தொலைபேசி: 01 42 09 35 53

ஹப்பி ரெக்ஸ்

தொலைபேசி: 01 40 05 08 09

பாரிஸ் மாநகரில் மக்களுக்கு அரிய சேவையாற்றுகிறது

# கெஞ்சிக்கேட்டு சுதந்திரம் வரப்போறதில்லை போராடித்தான் பெறவேண்டும்

## - கனிமொழி அரவிந்தன்

*சமீபத்தில் சர்வதேச கவிஞர்கள் விழா ஒன்றிற்காக பிரெஞ்சு அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று கவிஞரும், தமிழக முதல்வரின் மகளுமான திருமதி கனிமொழி அரவிந்தன் தமிழகத்திலிருந்து பாரிசுக்கு வந்திருந்தார். ஈழமுரசு வாசகர்களுக்காக அவர் வழங்கிய பிரத்தியேக செவ்வி இது. கவிஞர் கனிமொழி எழுதிய கவிதைகள் 'கருவறை வாசல்' என்ற நூலாக வெளிவந்திருக்கின்றது.*

*கேள்வி: பாரிசுக்கு வந்த காரணத்தைச் சொல்ல முடியுமா?*

*பதில்:* உலகத்தின் பல்வேறு நாடுகளிலிருந்தும் பல்வேறு மொழிகளைப் பேசுகின்ற கவிஞர்களை இங்கே அழைத்திருக்கிறார்கள். அந்த வகையில் தமிழ் நாட்டிலிருந்து என்னையும், கவிஞர் ஞானக்கூத்தனை'யும் கூப்பிட்டிருக்காங்க.

*கேள்வி: எப்படிக் கவிதை எழுதத்தொடங்கினீர்கள்?*

என்ன காரணம் என்று எனக்குச் சொல்லத் தெரியவில்லை. என்னுடைய வெளிப்பாடுகளை வெளிப்படுத்த வேண்டும். என்னை வெளிப்படுத்துகிற ஊடகமாக கவிதையை நான் தேர்ந்தெடுத்தேன். அவ்வளவு தானே தவிர அதை ஒரு இலக்கியமாகவே. அதே நேரத்திலே அதனால பெரிய மாற்றங்களைச் செய்யலாமென்று எனக்குத் தோனவில்லை.

*கேள்வி: உங்களுடைய கவிதைகளின் பெண்நிலைவாத நிலைப்பாடுகள் வெளிவந்தது தற்செயலாகவா அல்லது அவ்வகையான எண்ணத்தை வெளிப்படுத்த வேண்டும் என்று நீங்கள் விரும்பினீர்களா?*

*பதில்:* அதெல்லாம் என்னைத் தாக்கிய விடயங்கள். நிச்சயமாக வந்து என்னை ரொம்ப பாதிக்கிற விசயம் பெண்களை நம்ம சமூகம் நடத்திறவிதம். இது வந்து என் கவிதைகளில் பிரதிபலிக்கலாம். என்னுடைய கவிதைகள் சமூகத்தை மாத்தும் என்கிற பெரிய நம்பிக்கை எனக்கில்லை. நிச்சயமாக வந்து என்னுடைய கோபம் என்னுடைய கவிதைகளில் வெளிப்படுகிறது.

*கேள்வி: கவிதையில் இருக்கிற கோபத்தை நடை முறையில் காட்டுவதற்கான செயற்பாடுகளில் உங்களை இணைத்திருக்கிறீர்களா?*

*பதில்:* ஒரு பெரிய அமைப்பு என்ற அளவில் நான் எதுவுமே செய்யல்ல. சாதாரணமாக தினம் சந்திக்கின்ற பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவுறது அந்த மாதிரியான விடயங்களைத்தான் நான் செய்கின்றேன். நிச்சயமா பெரிசா சொல்லிக்கிறபடி நான் ஒன்னுமே செய்யல்ல.

என்னுடைய ஆதங்கத்தை எழுதி வெளிப்படுத்திக்கிட்டும் பேசித் தீர்த்துக்கிட்டும் இருக்கிறேன். நிச்சயமா நான் வந்து ஆக்க பூர்வமான ஒன்னுமே செய்யல்ல என்கிறத ஏத்துக்கிறன்.

*கேள்வி: இலக்கியங்கள்தான் எங்களுடைய சமூகத்தின் இவ் வகையான நிலைகளுக்குக் காரணம், எங்களுடைய படித்த தமிழ் இலக்கியங்கள்தான் இவற்றை காப்பாற்றி வைத்திருக்கின்றன. இலக்கியங்கள் தான் இருந்த சமுதாயத்தை கட்டுப்படுத்துகின்றன. என்று நீங்கள் கருதுகிறீர்களா?*

*பதில்:* அது, அதை மற்றவங்க பார்க்கிற பார்வையிலதான் இருக்கு. சிலப்பதிகாரத்தை எடுத்துட்ட மென்னா அதில இருக்கிற தமிழையும், கவித்துவத்தையும் பார்க்காமல் கண்ணகியை இந்தக் காலப் பெண்ணோட ரோல் மொடலாகவே பாக்கிறது. இந்தக் காலத்துப் பெண்களைப் பற்றிப் பேசிறப்போ கண்ணகியை முன்னுதாரணமாக காட்டிறது. அப்படி காட்டிறப்போது- அரசனைப் போய் கேள்வி கேட்ட அவளோட வீரத்தை தைரியத்தை பேசுறவங்க சொன்னதெல்லாங் கேட்டிட்டு, கண்மூடித்தனமா இருந்த அவளோட முட்டாள் தனத்தை யாருமே சாடுறதில்லை. இன்று அந்த மாதிரி செய்யாத பெண்களை ஆகா அன்று கண்ணகி அந்தக் காலத்தில் பெய்யெண்ணா மழை பெஞ்சிச்சு, இந்தக்காலத்தில பொம்பிளைங்க புருசன் பேச்சைக் கேக்கிறதில்லை, அதனாலதான் இப்போ உலகமே கெட்டுப் போச்சு, பெண்கள் வேலைக்குப் போறதினாலைதான் ஆண்களுக்கு வேலை கிடைக்கிறதில்லை என்கிறாங்க.

தமிழகத்திலுள்ள ஒரு பத்திரிகை வாராவாரம் பெண்கள் பிரச்சினை பற்றி எழுதிக்கிட்டு வந்தது. ஒரு வாரம் பெண்களுக்கு உரிமை வேண்டும் ஆனா இந்தளவுக்கு இல்லை என்று தலைப்புப் போட்டு அட்டையில் ஒரு காட்டூன் போட்டிருந்தாங்க. அதில ஒரு புருசன் உட்கார்ந்திருக்கிறான். பொம்பிள கரண்டியால அவனை அடிக்கிறா. அதற்கு முன்னர் அந்த பத்திரிகைகளில் வந்த விடயங்களில் இந்த மாதிரி எதுவும் கிடையாது. உண்மையான அக்கறையோட கவலையோட எழுதியிருந்தாங்க. ஆனால் பெண்கள் பத்தி இவங்க ஒரு கோடு போட்டிறாங்க. இதைக் தாண்டி அவங்க பேசக்கூடாது என்கிற மாதிரி, இது வரைக்கும் நீங்க உரிமைகளை கோரலாம், இது வரைக்கும் நீங்க எல்லாம் பண்ணலாம். இதைத் தாண்டிப் போகக்கூடாது. அந்தக் காலத்தில் பெண்கலளப் பற்றி திருவள்ளுவர் முதலானவர்கள் எடுத்துச் சொன்னவதச் சொல்லுறாங்க. இந்தக் காலத்தில நீ வேலைக்குப் போகலாம் - என்னவும் செய்யலாம். இருந்தாலும் பெண் என்னா ஒரு அடக்கத்தோடு ஒரு நளினத்தோடு ஒரு அச்சத்தோடு இருக்கனும் என்று எதிர்பார்க்கிறாங்க. பெண் என்னா இப்படித்தான் இருக்கனும் என்று சில இலக்கணங்களை வைச்சிருக்கிறாங்க. அதை வந்து விட்டிட்டு வாறத்துக்கு நாங்க தயாராகவே கிடையாது.

*கேள்வி: பெண்ணடிமைத் தனத்தை வலியுறுத்தும் இலக்கியங்களை புறக்கணிக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களா?*

*பதில்:* புறக்கணிககனும் என்று நான் சொல்லலாம். அதை வந்து அறிவு பூர்வமாபார்த்து நாம ஏற்றுக் கொள்ளனும் என்று சொல்லுறன். அந்தக் காலக் கவிதைகளில பெண்கள் வர்ணிக்கப்படுறாங்க, அதில ஒரு அழகிருக்கு. ஆனா பெண் வந்து இப்படித்தான் இருக்கனும். பூ வந்து தலையிலை வைச்சா இடுப்பொடிஞ்சிடும் என்னு சொன்னா அவளாலை என்னத்தை சாதிக்க முடியும். கவிதைகளிலை உள்ள அழகை எடுத்துக்கோங்க; அதை விட்டுட்டு குதி என்னா குதி, எரி என்னா எரி, இராமன் சந்தேகப் பட்டான்னா நெருப்பில இறங்கிடு என்கிற அந்த மாதிரி பெண்கள் சாத்தியமில்ல. அப்படி இருக்கவும் கூடாது அதை வந்து நாம புரிஞ்சுக் கனும்.

*கேள்வி: நீங்கள் ஏன் கவிதையை தாண்டி இன்னும் போகவில்ல? உங்க அப்பாவின் பின்பலம் அதாவது அரசியல் இதுக்குத் தடையாக இருந்திருக்கிறதா?*

*பதில்:* போகக்கூடாது என்றதை நான் நினைக்கல்ல. பின்பலம் என்டது நான் பெரிசா பாக்கல்ல. நான் என்கிறது ஆ என்னோட ம் முடிஞ்சு போற விடயம் என்னுடைய அப்பாவோ அவருடைய அரசியலோ அதை வந்து பயன்படுத்த நான் விரும்பல்ல. எங்க ஊர்ல தனித்துக்கள் இருக்கிறாங்க. அவங்களை சமூகம் நடத்துற விதத்தைப் பார்த்து எனக்கு கோபம் இருக்கு. சமூகத்தில இருக்கிற எல்லா பிரச்சினைகளையும் இறங்கிவந்து தட்டிக் கேக்கிறதுக்கு அதுக்கென்னு ஒரு துணிச்சல் வேனும். அந்தத் துணிச்சல் எல்லாருக்கும் இருக்கிறதேயில்லை. எத்தனையோ வருசங்களுக்கு முன்னால இருந்தே சில பெண்கள் முன்னுக்கு வந்து போராட்டம் நடத்தியிருக்கிறாங்க. அப்படிப் பட்ட துணிச்சல், ஒரு பெண் எங்கிறதினால என்னுடைய சுபாவத்தினால எனக்கு இல்லாமல் இருக்கலாம்.

சும்மா உட்கார்ந்திருந்தா எதுவும் கிடைச்சிடாது. போராடித்தான் பெறவேனும். கெஞ்சிக் கேட்டு நிச்சயமா சுதந்திரம் வரப்போறதில்லை. அப்படிப் போராடுறதுக்கான பலத்தை நாம் வளர்த்துக்கனும். இன்னொருத்தர் குடுத்தும் சுதந்திரம் வரப்போறதில்லை.

*சமுகக் கட்டுப்பாடுகள், மதக் கட்டுப்பாடுகளை புடிச்சிட்டே இருக்கனும். அதை உடைச்சிட்டா ஏதாவது ஆயிடும் என்கிற அந்தப் பயங்கள் இல்லால் இருக்கிறதுக்கு அப்பா சார்ந்த திராவிட இயக்கம் எனக்கு உதவியிருக்கு. அந்த பலத்தை எனக்கு கொடுத்திருக்கு. ஆனா அவங்க வைச்சிருக்கிற கொள்கைகள், அவர்களோட கட்டுப்பாடுகள் எல்லாவற்றையும் நான் ஏற்றுக்கொள்ளுறதில்லை அந்த இயக்கத்தின் சில விசயங்கள் சரியா இருக்கு. சில விசயங்கள் தப்பா இருக்கு. நிச்சயமா எனக்கு அதைப் பற்றி நிறைய விமர்சனங்கள் இருக்கு*

இயல்பா ஒரு பெரிய நெருக்கடி உருவாகின்றபோது ரொம்ப சுலபமா சமூகம் மாறியிடுகுது. அந்தக் கட்டத்தில பெண் உரிமைக்கும், பெண்விடுதலைக்குமான போராட்டம் இயல்பாக வருது. அது இல்லாத போது வேறு வழியில்லை. அதுக்காக வந்து நாம செயற்கையா ஒரு நெருக்கடியை உண்டு பண்ணமுடியாதே. இப்போதுள்ள இந்திய தமிழ் நாட்டுச் சூழலில் எதிர்ப்புக் குரல் எழுப்புறு ஒன்னுதான் எங்களாலை முடிஞ்சது.

*கேள்வி: குடும்பம் என்ற அமைப்பை உடைக்கிறது ஆண் செய்யும் தவறுகளையும் கூட தாலும் செய்ய வேண்டும் என்று நினைக்கிறது*



கனிமொழி அரவிந்தன்

*தான் பெண் விடுதலை, என்கிற கருத்துப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?*

*பதில்:* குடும்பம் என்கிற அமைப்பை உடைக்கனும் என்கிறதில எனக்கு பெரிசா உடன்பாடில்லை. ஆனால் ஒரு பெண்தான் சாதிக்க நினைக்கிற விடையங்களுக்கு குடும்பம் என்கிற அமைப்பு தடையாக இருந்தா அவ அந்த அமைப்புக்குள்ள போகத் தேவையில்லை. அவளுக்கு வேணாமென்னா அவளை நிர்ப்பந்திக்கக்கூடாது.

அம்மா அப்பா பாத்து திருமணம் செய்யிறபோதுதான் மாமனார் மாமியார் பெண் வந்து அடக்க ஒடுக்கமாக இருக்கனும் சொல்லுறதையெல்லாம் கேக்கனும் என்கிற பிரச்சினையே வருது. ஒரு பெண் வந்து தனக்குப் பொருத்தமான ஒரு ஆணை தேர்ந்தெடுக்கிறபோது அவன் தன்னுடைய கருத்துக்களுக்கு மதிப்பளிக்கிற வரை தன்னை சமமா மதிக்கிற வரை தேர்ந்தெடுத்துக்கலாமில்லையா

*கேள்வி: அப்படித் தேர்ந்தெடுக்கிறபோது சட்டத்தின் பாதுகாப்புத் தேடி திருமணம் என்ற பந்தத்துக்குள் போகவேண்டுமா?*

அப்படியென்னில்லை அது வந்து ஒவ்வொருவரும் தீர்மானிக்க வேண்டிய விசயம். திருமணம் இல்லாமல் சேர்ந்து வாழ்றதன்மூலம் பெண்ணில் உரிமை கிடைச்சுடும் என்கிறதுதான் தீர்வு என்னு நான் நினைக்கல்லை. ஆண்களும் மாறனும், பெண்களும் மாறனும். நிச்சயமாக சேர்ந்து வாழுற எத்தனை பேர் பெண்களை சமமா நடத்தியிருக்கிறாங்க. வாழக் கூட வேணாம். காதலிக்கிற நேரத்தில கூட பெண்களை ஏமாத்தின ஆண்கள் எத்தனை பேர் இருக்கிறாங்க. அதையெல்லாம் தாங்கிக்கிட்டு வாழுற எத்தனையோ பெண்கள் இருக்கிறாங்க. அதனால் திருமணமோ அல்லது அது இல்லாம சேர்ந்து வாழுறதாலயே பெண்கள் பிரச்சினை தீர்ந்திடும் என்னு நான் நினைக்கல்ல.

*கேள்வி: குடும்ப வழியாக உங்களுக்கு கருத்துக்களின் தாக்கம் ஏற்பட்டதா?*

*பதில்:* நாம வளர்ர சூழ்நிலையைப் பொறுத்து சில கருத்துக்களை நாம ஒத்துக்கிறதில்லையா. மதம் என்கிறது எனக்குத் தெரிஞ்சு நான் விட்டவிசயம். நிச்சயமா நான் வளர்ரபோது எனக்கு மதத்தில நம்பிக்கை இருந்தது. நான் ஒரு இந்துவாதான் வளர்ந்தேன். நாம வளர்ர சூழலைப் பொறுத்து நிறைய விடையங்கள் நம்மை வந்து சேரும். ஒரு கட்டத்தில நாம நம் மனை எடைபோட்டுப் பார்க்கனும், அவை நமக்கு அவசியமா இல்லையா என்பதை எடைபோட்டுப் பார்க்கனும், அதையெல்லாம் வைச்சுக்கிறதா.. இல்லை தூக்கி எறியிறதா என்பதை எல்லாரும் செய்யிறதும், என் அப்பா எனக்கு சொல்லிக் கொடுத்ததால சில விசயங்களை வைச்சிருக்கிறதா எனக்கு தெரிஞ்ச வரை இல்லை. சிலது இருக்கலாம். சமுகக் கட்டுப்பாடுகள், மதக் கட்டுப்பாடுகளை புடிச்சிட்டே இருக்கனும். அதை உடைச்சிட்டா ஏதாவது ஆயிடும் என்கிற அந்தப் பயங்கள் இல்லால் இருக்கிறதுக்கு அப்பா சார்ந்த திராவிட இயக்கம் எனக்கு உதவியிருக்கு. அந்த பலத்தை எனக்கு கொடுத்திருக்கு. ஆனா அவங்க வைச்சிருக்கிற கொள்கைகள், அவர்களோட கட்டுப்பாடுகள் எல்லாவற்றையும் நான் ஏற்றுக்கொள்ளுறதில்லை அந்த இயக்கத்தின் சில விசயங்கள் சரியா இருக்கு. சில விசயங்கள் தப்பா இருக்கு. நிச்சயமா எனக்கு அதைப் பற்றி நிறைய விமர்சனங்கள் இருக்கு நிறைய முரண்பாடுகளும் இருக்கு.

*கேள்வி: ஈழப் போராட்டத்தில் பெண்கள் பங்கு உங்களை ஏதாவது பாதித்துள்ளதா?*

*பதில்:* நிச்சயமாக நாம் கேள்விப்படுகிறது சந்தோஷமாத்தான் இருக்கு. பெண்ணுக்குள்ள போராட்டகுணம் வெளியில் வந்தது அது எந்த விசயத்தில வெளியில் வந்தாலும் நல்ல விசயம்தானே.

*- பேட்டி ஈழமுரசு*

# பலதும் பத்தும்

## அவுஸ்திரேலிய கடலில் இராட்சதக் 'கணவாய்'

அண்மையில் அவுஸ்திரேலியாவின் ஆழ் கடலில் தாஸ்மேனியப் பிராந்தியத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்தவர்கள் தமது மீன் வலைக்குள் அதிசயமான ஒரு பொருளைக் கண்டார்கள்



தங்களது வலைக்குள் மீன்களுடன் மிகப் பெரிய ஒருவகை கணவாயும் காணப்பட்டது. கணவாய்கள் இப்பகுதியில் காணப்படுவது சகஜம்தான். ஆனால் இவ்வளவு பெரிய கணவாய் இதுவரை இப் பிராந்தியத்தில் காணப்படவில்லை. ஆழ்கடலின் அடியில் அதாவது ஒரு கிலோ மீற்றருக்கும் அதிகமான ஆழத்தில் கடலின் கீழ்ப் பாகத்தில் வசிக்கும் இவைகள், ஏன் மேலே வந்தன என அவுஸ்திரேலிய ஆய்வாளர்கள் ஆச்சரியப்பட்டுள்ளனர். சுமார் 15 மீற்றர் நீளம் கொண்ட இவ் இராட்சத கணவாய் வகைகள் கடந்த நூறு வருடங்களில் இன்றுவரை, ஐம்பதுக்கும் குறைவானவையே கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இவ் இராட்சத கணவாய்களுக்கு இருக்கும் ஒரேயொரு எதிரி பெரும் திமிங்கிலங்கள் மாத்திரமே. இப் பகுதியில் இறந்து கரையொதுங்கும் பல திமிங்கிலங்களின் உடலகளில் காணப்படும் காயங்கள், இந்த கணவாய்களின் தாக்குதலகளினால் ஏற்பட்டுள்ளன என தற்போது கணிக்கப்பட்டுள்ளது.

## தாய்லாந்தில் ஒரு இராட்சத 'ஆம்லெட்'


எமது உணவுடன் இரண்டறக் கலந்துள்ள உணவுகளில் 'ஆம்லெட்' உம் ஒன்றென்பது மறக்கமுடியாத உண்மை. சாதாரணமாக விடுகளில் ஒன்று அல்லது இரண்டு முட்டைகளுடனும் உணவு விடுதிகளில் ஐந்து, பத்து முட்டைகளுடனேயும் ஆம்லெட் தயாரிப்பது வழக்கம். கடந்தவாரம் தாய்லாந்தில் சுமார் 30 ஆயிரம் முட்டைகளைக் கொண்டு ஒரு ஆம்லெட் தயாரிக்கப்பட்டு உலக சாதனை நிலை நாட்டப்பட்டது.



தாய்லாந்தில் முட்டைப்பாவனை சிலகாலமாகவே வெகுவாக குறைவடைந்து வந்துள்ளது. இதனை அதிகரிக்கும் நோக்கிலும் முட்டைகளின் போசாக்கு பற்றி எடுத்துக்கூறவும் தாய்லாந்தின் சில சுகாதார நல அமைப்புகக்கள் முயன்று அதற்காக செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியை நாடின. பின்னர் கடந்த சனியன்று பாங்கொகின் கிழக்காக 'சாச்செங்சாவோ' மாநிலத்தில் ஒரு விழா ஏற்பாடு செய்யப்பட்டது. தாய்லாந்தின் 'மிகச் சிறந்த தாய்மார்கள்', சுமார் 100 பேர்கள் கூடி உலகின் மிகப் பெரிய முட்டை ஆம்லெட்டை தயாரிப்பதில் இறங்கினார்கள். இவர்களுக்கு உதவியாக 500 பேர்கள் முட்டைகளை உடைத்துக் கொண்டிருந்தனர். அதற்காக அவர்கள் உபயோகித்த 1500 கிலோக்கள் கொண்ட முட்டைக் கலவையைத் தயாரிக்க 29,999 முட்டைகள் பயன்படுத்தப்பட்டன. இதற்கு 100 லீற்றர்கள் தாவர எண்ணெய் பாவிக்கப்பட்டுள்ளது.

## மிருகங்களுக்கு சோடிகளைத் தேடித்தர 'முகவர் நிலையம்'

'உங்கள் வளர்ப்புப் பிராணிகள் தனிமையை உணர்கின்றனவா? அவைகளுக்கு சோடிகளைத் தேடுகிறீர்களா எங்களை



நாடுங்கள் நாங்கள் அதற்காகவே காத்திருக்கின்றோம்'

இவ்வாறான விளம்பரங்கள் அண்மையில் ஸ்பெயின் பத்திரிகையில் வெளியாகியபோது வாசகர்கள் ஆச்சரியமடைந்தார்கள். 'Happy Animals' என்ற பெயருடன் வட ஸ்பெயினில் 'ஜிரோனா' நகரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த முகவர் நிறுவனமானது, வளர்ப்புப் பிராணிகளுக்கு இன விருத்திற்கான சரியான துணைகளை மாத்திரமல்ல; அவைகளின் தனிமையைப் போக்குவதற்கும் துணைகளைத் தேடிக்கொடுக்கின்றது. மிருகங்களுக்கு துணைகளைத் தேடுவோர்கள் தங்களது பிராணிகளுக்கு எப்படியான துணை தேவை என்பதையும், சிறு புகைப்படம் ஒன்றையும் நிறுவனத்திடம் ஒப்படைத்தால் போதும். உலகின் எப்பகுதியில் இருந்தும் துணைகள் தருவிக்கப்பட்டு உரியவரிடம் ஒப்படைக்கப்படும் எனக் கூறும் அதன் நிர்வாகி, தமது நிறுவனம் தற்போது நாய், பூனை, மற்றும் பறவைகளுக்கே துணைகளைத் தேடிக்கொடுக்கின்றது. ஆனால் எதிர்வரும் காலத்தில் பாம்பு மற்றும் வேறு ஊர்வனவற்றிற்கும் சோடிகளை தேடிக்கொடுக்க உத்தேசித்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

## கிளி வர்த்தகரை நீதிமன்றத்திற்கு அழைத்த பெண்

தனது அருமைக்கிளி இறந்து போனதற்காக அதனை தனக்கு விற்ற கடைக்காரரை நீதி மன்றத்திற்கு ஒரு பெண் அழைத்த சம்பவம் அண்மையில் சுவிடனில் நடந்தது.



இந்த வேடிக்கையான சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது, மேற் கூறப்பட்ட பெண் கடந்த வருடம் 4,900 குரோனர்கள் விலையில் அழகான கிளியொன்றை வாங்கியுள்ளார்.

சில நாட்களின் பின் தனது கிளியின் நடவடிக்கைகள் மாறிக்கொண்டு வருவதை அவதானித்து அதனை ஒரு மருத்துவரிடம் கொண்டு செல்ல அவர் தயாரானபோது, அது தனது 'சுயநினைவை இழந்து' கீழே விழுந்து சில மணி நேரத்திற்குள் இறந்துபோய்விட்டது.

இந்த தனது கிளியை புதைத்து விட்டு அதனை விற்ற கடைக்காரரிடம் சென்று அவர் முறையிட்டுள்ளார். ஆனால கடைக்காரரோ அதனை ஏற்க மறுத்து விட்டார். காரணம் இறந்த கிளியின் உடலையாவது கொண்டு செல்லவில்லையே. கடைக்காரரின் கூற்று, நித்திரையில் ஆழ்ந்து போயிருந்த கிளியை அப்பெண் தவறுதலாக புதைத்துவிட்டார் என்பதுதான். தற்போது தென் சுவீடனின் 'மால்மோ'வில் இக் கிளி வழக்கு நடந்துகொண்டிருக்கிறது.


கிருஷ்ணா அச்சகம்

விலைகள் குறைவு! குறித்த தவணை!! தரமான வேலை!!!

London Models திருமணஅழைப்பிதழ்கள்!

உங்கள் தேர்வுக்கு 200ற்கும் மேற்பட்ட மாதிரிகள் எம்மிடம் உண்டு!

சகலவிதமான அச்சுப்பதிப்பு வேலைகளுக்கும், மொழிபெயர்ப்புத் தேவைகளுக்கும்...

Imprimerie KRISHNA

73, Rue Doudeauville, 75018 Paris.

M°: Marcadet Poissonniers / Château Rouge

மொழிபெயர்க்கப்பட்ட உங்கள் ஆவணங்கள் மீளப்பெறும் வகையில், ஐந்து வருடங்கள் வரை எங்கள் கொம்பியூட்டர்களில் பாதுகாத்து வைக்கப்படுகின்றன...

உங்கள் வண்ணக்கலர் வேலைகளுக்காக எங்கள் நவீன அச்சு இயந்திரங்கள்...



வெளிநாடுகளிலிருந்து அச்சுப்பதிப்பு வேலைகளை எம்மிடம் செய்துகொள்ளவிரும்புவர்கள் தபாற்பொதி மூலமும் பெற்றுக்கொள்ளலாம்!

Tél : 01 42 51 29 92

Fax. : 01. 42. 51. 35. 25

# உலகக்கோப்பை உதைபந்தாட்டம் - 1998

## இத்தாலி

உலகின் முன்னோடி வீரர்கள் பலர் இருந்தும் பல தடங்கல்களுக்குப் பின்னரே 14 வது முறையாக உலகக்கிண்ண இறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

கடந்த 29.10.97 அன்று நடைபெற்ற ரஷ்யாவுக்கு எதிரான முதலாவது ஆட்டத்தில் வெற்றி தோல்வி அற்ற (1-1) பெறுபேறு பெற்ற இவர்கள், 15.11.97 அன்று நடைபெற்ற இரண்டாவது ஆட்டத்தில் 1-0 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றதன் மூலம் பிரான்சில் நடைபெற இருக்கும் 18 வது உலகக்கிண்ண இறுதிச் சுற்றிற்கு தெரிவாகியுள்ளனர். சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் வரிசைப்படுத்தலில் 16 வது இடத்தை வகிக்கும் இவர்கள் ஏற்கெனவே மூன்று முறை உலகக்கிண்ணத்தை வென்றெடுத்தவர்களாவர்.

1934, 1938, 1950, 1954, 1962, 1966, 1970, 1974, 1978, 1982, 1986, 1990, 1994-ம் ஆண்டுகளில் இறுதி ஆட்டத்திற்கு தெரிவாகிய இவர்கள் 1934ம், 1938ம், 1982ம் ஆண்டுகளில் உலகக் கிண்ணத்தை வெற்றிகொண்டனர். 1934ம் ஆண்டு செககோசெலோவாக்கியாவை 2 - 1 என்ற நிலையிலும், 1938ம் ஆண்டு கங்கேரியை 4 - 2 என்ற நிலையிலும், 1982ம் ஆண்டு மேற்கு ஜேர்மனியை 3-1 என்ற நிலையில் வெற்றிகொண்டு உலகக் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டனர்.

1970, 1994-ம் ஆண்டுகளில் இறுதி ஆட்டங்களில் பிறேசிலிடம் 4 - 1, 3 - 2 என்ற அடிப்படையில் தோல்விகண்டனர். 1994-ம் ஆண்டு ஐக்கிய அமெரிக்காவில் நடைபெற்ற 17 வது உலகக் கிண்ண இறுதி ஆட்டத்தின் முதல் 90 நிமிடங்களில் எந்த அணியும் கோல் எதனையும் பெறாத நிலையில் மேலதிகமாக 30 நிமிடங்கள் கொடுக்கப்பட்டது. அதிலும் எந்த அணியும் கோல்களைப் போடாத நிலையில் தண்டனை உதை (PENALTY) மூலம் வெற்றி தீர்மானிக்கப்பட்டது இதுவே உலகக்கிண்ண உதைபந்தாட்ட வரலாற்றில் தண்டனை உதை மூலம் வெற்றி தீர்மானிக்கப்பட்டது முதலாவது முறையாகும்.

1990-ம் ஆண்டு மூன்றாவது இடத்திற்கான போட்டியில் இங்கிலாந்திற்கு எதிரான ஆட்டத்தில் 2-1 என்ற அடிப்படையில் இவர்கள் வெற்றி பெற்றனர். 1978-ம் ஆண்டில் மூன்றாம் இடத்திற்கான போட்டியில் பிறேசிலிடம் 1 - 2 என்ற அடிப்படையில் தோல்வியடைந்தனர். 1986-ம் ஆண்டு ஆரைக்கால் (1/8) இறுதி ஆட்டத்தில் பிரான்சிடம் 0 - 2 என்ற அடிப்படையில் தோல்வியடைந்தனர். 1950, 1954, 1962, 1966, 1974 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற இறுதிச் சுற்றில் முதல் சுற்றிலேயே தோல்வியடைந்தனர்.

ஐரோப்பியக் கிண்ணப் போட்டிகளில் 1964, 1968, 1972, 1980, 1988, 1996 ஆகிய ஆண்டுகளில் பங்குபற்றிய இவர்கள் 1968-ம் ஆண்டு யூகோசிலாவியாவிற்கு எதிராக இறுதிப் போட்டியில் 3-1 என்ற கோல் அடிப்படையில் வெற்றிபெற்று ஐரோப்பியக் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டனர். 1996ம் ஆண்டு நடைபெற்ற போட்டியில் செக் குடியரசு, ஜேர்மனி போன்றவற்றிடம் தோல்வியடைந்து முதல் சுற்றிலேயே வெளியேற்றப்பட்டனர். 1964ம் ஆண்டு அரைக்கால் இறுதி ஆட்டத்தில் (1/8) சோவியத் யூனியனிடம் 3-1 என்ற கோல் அடிப்படையிலும், 1972ம் ஆண்டு கால் இறுதிப் போட்டியில் பெல்ஜியத்திடம் 2-1, 1980-ம் ஆண்டு மூன்றாம் இடத்திற்கான போட்டியில் செக்கோசிலோவாக்கியாவிடம் 1-1 / 9-8 ( போட்டி நேரத்தில் இரு அணியினரும் ஒவ்வொரு கோலகளையே பெற்றிருந்தனர் அதனைத் தொடர்ந்து இடம் பெற்ற தண்டனை உதைகளில் செக்கோசிலோவாக்கியா 9-8 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்றது)

1988-ம் ஆண்டு அரை இறுதி ஆட்டத்தில் சோவியத் யூனியனிடம் 2-0 என்ற கோல் அடிப்படையிலும் தோல்வி அடைந்தனர்



இத்தாலிய அணியில் அண்ணன், தம்பி, தந்தை, மைந்தன் என்ற உறவு முறையில் தமது நாட்டிற்காக விளையாடியவர்கள் பலர் உண்டு அவர்களில் சிலரை முழக்கம் 146ல் (ஈழமுரசு 30 ஒக்டோபர் - 5 நவம்பர்) அறிந்திருப்பீர்கள். ஆனால், தந்தை பயிற்சியாளராகவும், மைந்தன் அணித் தலைவராகவும், இருக்கின்ற சரித்திரம் பெற்ற அணியினரும் இவர்களே. தந்தையான சேசார் மல்டினி பயிற்சியாளராக மைதானத்திற்கு வெளியே நின்று தமது அணியை நெறிப்படுத்த, மைந்தனான பவுலோ மல்டினி மைதானத்தில் சக வீரர்களை வழிப்படுத்தும் அரிய நிகழ்வினை இவ் அணியில் மாத்திரமே காணக் கூடியதாக இருக்கின்றது. 5, 50 000 இத்தாலியர்கள் வாழும் பிரான்சில் நடைபெற உள்ள உலகக்கிண்ண இறுதிச் சுற்றிற்கு 50 ஆயிரம் முதல் ஒரு இலட்சம் வரையான ஆதரவாளர்கள் தமது அணியினை உற்சாகப் படுத்த வருவார்கள் என எதிர் பார்க்கப்படுகின்றது.

- ஜே. ஜே.

# கிரிக்கட்

## சிம்பாவே

இறுதியாக டெஸ்ட் அந்தஸ்து பெற்ற நாடு சிம்பாவேயாகும். இதுவரை 24 டெஸ்ட் போட்டிகளிலும் 80 ஒருநாள் போட்டிகளிலும் கலந்துகொண்ட இந்நாடு ஒரே ஒரு டெஸ்ட் போட்டியை, பாகிஸ்தானுக்கு எதிராக சிம்பாவேயில் வைத்து இனிங்ஸால் வென்றது. அத்தோடு 14 ஒருநாள் போட்டிகளிலும் வென்றுள்ளது. மற்றைய நாடுகளைப் போல் பழைய வீரர்களின் கதை இதற்குத் தேவையற்றது. ஏனெனில் கிறன்-அன்டி பிளவர் (Grant - Andy Flower) சகோதரர்கள் கம்பெல் (A. Campbell) ஆகிய மூவர் மட்டுமே 24 டெஸ்ட் போட்டிகளிலும் பங்குபற்றியவர்கள் ஆவர். இம்மூவருடன் கூடவே ஹக்டனும் (D. Houghton) ஆயிரம் ஓட்டங்களை டெஸ்ட் போட்டிகளில் எட்டியவர்களாவர்.



இந்நாட்டின் சார்பாக ஒரு இனிங்சில் அதிகூடிய ஓட்டங்களைப் பெற்ற ஹக்டன் (266 ஓட்டங்கள்) இதுவரை 1562 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். பிளவர், டெஸ்ட் போட்டியொன்றின் இரு இனிங்ஸிலும் நூறு ஓட்டங்களைப் பெற்ற ஒரே ஒரு சிம்பாவே அணி வீரராவார்.

பந்துவீச்சைப் பொறுத்தவரை தற்போது இவ்வணியை குறைத்து மதிப்பிட முடியாது. உலகின் தலைசிறந்த பந்துவீச்சாளருள் ஒருவரான ஸ்ரேக்கும் (H. Streak), முன்னணியிலிருக்கும் சுழல் பந்து வீச்சாளர்போல் ஸ்ரிங்கும் (Paul Dlrang) அணியின் தூண்களாகும்.

தற்போதைய அணியில் அன்டி, போல், ஜோன் ஆகிய சகோதரர்களும் அன்ட்ரு என்னும் ஒன்றுவிட்ட சகோதரருமாக, நான்கு சகோதரர்களில் விளையாடி வருகிறார்கள்.

பந்துவீச்சில் திறமையான இவ் அணி துடுப்பெடுத்தாடுவதிலும் திறமையான வீரர்களைக் கொண்டிருக்குமாயின் வெற்றிகள் குவியும்.

# அவுஸ்திரேலிய அணியின் தொடர் வெற்றி

அவுஸ்திரேலியா அணிக்கும் நியூசிலாந்து அணிக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி பேர்த்தில் (Perth) 20.11.97 அன்று ஆரம்பமாகி 23.11.97 அன்று முடிவடைந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி, முன்னணி துடுப்பெடுத்தாட்டக்காரர்களை இழந்து 85 ஓட்டங்களுக்கு 5 விக்கட்டுக்களை இழந்த நிலையில், சகலதுறை ஆட்டக்காரர்களாக மக்மிலனும் (Mc. Millan) கெயிர்ன்சும் (CAIRNS) முறையே 54, 52 ஓட்டங்களைப் பெற்று சிறப்பாக இணைந்து ஆடியும் முதல் இனிங்சில் 217 ஓட்டங்களையே பெறமுடிந்தது.

தொடர்ந்து ஆடிய அவுஸ்திரேலிய அணி, தனது முதல் இனிங்சில் 461 ஓட்டங்களைப் பெற்றது. அணியின் இரட்டையர்களான எம். வோக் 86 ஓட்டங்களையும், எஸ். வோக் 96 ஓட்டங்களையும், விக்கட் காப்பாளர் ஹீலி 85 ஓட்டங்களையும், பந்து வீச்சாளர் ரிஃபெல் 54 ஓட்டங்களையும் பெற்றனர்.

இனிங்ஸ் தோல்வியில் இருந்து தம்மைக் காப்பாற்றிக்கொள்ள 244 ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் தமது இரண்டாவது இனிங்சை ஆட ஆரம்பித்த நியூசிலாந்து, சகல விக்கட்டுக்கள் இழப்பிற்கும் 174 ஓட்டங்களையே பெற்று இனிங்ஸ் தோல்வியைத் தழுவியது. அவுஸ்திரேலிய அணியின் வேகப் பந்துவீச்சாளர் சைமன் கோக் (Simon Cook) தனது முதல் போட்டியிலேயே, ஒரு இனிங்சில் 5 விக்கட்டுக்களைக் கைப்பற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தான் அணி வெற்றி

பாகிஸ்தான் மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலேயான முதலாவது டெஸ்ட் போட்டி பெஷாவாரில் (Peshawar) 17.11.97 ஆரம்பமாகி, 20.11.97 முடிவுற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அனைத்து விக்கட்டுக்களையும் இழந்து 151 ஓட்டங்களைப் பெற்றது. பாகிஸ்தான் அணியின் சுழற்பந்து வீச்சாளர் முஷ்டாக் அகமட் (Mustak Ahmed) 35 ஓட்டங்களை மட்டுமே கொடுத்து 5 விக்கட்டுக்களைக் கைப்பற்றியமையே, மேற்கிந்திய தீவுகள் அணி 151 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழக்கக் காரணமாய் இருந்தது.

தொடர்ந்து ஆடிய பாகிஸ்தான் அணி சகல விக்கட்டுக்கள் இழப்பிற்கு 381 ஓட்டங்களைப் பெற்றது. இனிங்ஸ் தோல்வியிலிருந்து தப்புவதற்கு 239 ஓட்டங்களை எடுக்க வேண்டியிருந்த நிலையில், தமது இரண்டாவது இனிங்சை ஆட ஆரம்பித்த மேற்கிந்திய தீவுகள் அணி, அனைத்து விக்கட்டுக்கள் இழப்பிற்கு 211 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்ததால் இனிங்ஸால் தோல்வியைத் தழுவியது. இரண்டாவது இனிங்சிலும், பாகிஸ்தான் அணியின் முஷ்டாக் அகமட் 71 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கட்டுக்களைக் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியா - சிறீலங்கா முதல் டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது

இந்தியாவுக்கும் சிறீலங்காவுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி, இந்தியாவின் மோகாலியில் (Mohali) கடந்த 19.11.97 ஆரம்பமாகி 23.11.97 அன்று வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சிறீலங்கா அணி அத்தப்பத்து (Atapattu) பெற்ற 108 ஓட்டங்களுடன் 369 ஓட்டங்களைப் பெற்றது. தொடர்ந்து ஆடிய இந்திய 9 விக்கட்டுக்கள் இழப்பிற்கு 515 ஓட்டங்களை எடுத்த நிலையில் சிறீலங்கா அணியை ஆடப் பணித்தது. இந்திய அணியின் சார்பில் சிக்கர் சித்து 131 ஓட்டங்களையும், குங்கலியீ 109 ஓட்டங்களையும், அசாருதீன் 53 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

சிறீலங்கா அணி தனது இரண்டாவது இனிங்ஸில் ஆட்டவேளை முடியும் வரை வரை ஆடி 6 விக்கட்டுக்கள் இழப்பிற்கு 251 ஓட்டங்களைப் பெற்றது. அரவிந்த டி சில்வா நிதானமாக ஆடி 110 ஓட்டங்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

# ஹிங்கிஸ் மயிரிழையில் வெற்றி



நீண்டகாலமாக டெனிஸ் உலகின் பெண்கள் பிரிவில் முடிசூடா நாயகியாக வலம்வந்த ஸ்ரெபி கிராப்ஃபை (S.Graf) ஒதுக்கிவிட்டு அப் பெருமையை தனதாக்கிக்கொண்ட சுவிஸ் நாட்டைச் சேர்ந்த 17 வயதுச் சிறுமி மாட்டினா ஹிங்கிஸ் (Martina Hingis) பல வெற்றிகளை பெற்றபோதிலும் தனது சொந்த நாட்டில், அதாவது சூரிச்சில் நடைபெற்று முடிந்த 'ஐரோப்பிய ஓப்பன் ரெனிஸ்' ஆட்டத்தில் பெண்கள் பிரிவில் அமெரிக்க வீராங்கனை டவன்போட்டிடம் (Davenport) தோல்வியைத் தழுவியிருந்தார். ஆனால், அண்மையில் நடந்த போட்டியொன்றில் அதே வீராங்கனையுடன் போட்டிடம் தோல்வியைத் தழுவிக்கொள்ளும் நிலையிலிருந்து ரைபிறேக் (Tie Break) நிலையில் வைத்து மயிரிழையில் 7:5, 6:7, 7:6 என்று வெற்றிபெற்றுள்ளார்.




## தகவல் தொழில்நுட்பம் எதிர்காலத்திற்கான பாதை

அமெரிக்காவில் கடந்த 7 வருடங்களில் அமெரிக்காவின் தகவல் தொழில்நுட்பத்தின் ஊற்றிடங்களான கணினி மற்றும் தொலைத்தொடர்புத்துறை 57% விரிவாக்கத்தைக் கண்டுள்ளது. இன்று 866 பில்லியன் டொலர்கள் துறையாக அமெரிக்காவில் இது வளர்ந்துவிட்டது. அமெரிக்காவின் மோட்டார் உற்பத்தி, கட்டடத்துறை மற்றும் உற்பத்தி துறைகளிலும் பார்க்க பன்மடங்கு முன்நிலையில் இது நிற்கின்றது.

இதேவேளை அமெரிக்காவில் 6.2% தேசிய உற்பத்தியைத் தருகின்றது என கணிப்பிடப்படும் இத்துறையில் 4.3 மில்லியன் தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். ஆனால் இத் தொழிலாளர்களின் ஊதியம் பிற துறைகளிலும் பார்க்க 73% அதிகமானதாகும்.

❦ ❦ ❦

## அரவிந் மில்: இந்தியாவின் உலக அடையாளம்

லீ, லெவிஸ் போன்ற 'பிரபல' டெனிம்களை விரும்புகிறீர்களா? அல்லது மார்க்ஸ் & ஸ்பென்சர் டெனிம்களை விரும்புகிறீர்களா? எதுவாகிலும் நீங்கள் அங்கே பெறுவது இந்தியாவின் டெனிம்களைத்தான். இந்தியாவின் டெனிம் உற்பத்தியாளர்களான அரவிந் மில் இன்று உலகின் மிகப் பிரதான டெனிம் உற்பத்தியாளர்களாக தம்மை நிலைநிறுத்திவிட்டனர். அமெரிக்காவிற்கு வெளியே உள்ள மிகப்பெரிய டெனிம் தயாரிப்பாளர்கள் அரவிந் மில் ஆகும்.

உலகின் பூராவும் 70 நாடுகளில் மக்களால் அணியப்படும் டெனிம்களை வழங்கும் அரவிந் மில், அகமதாபாத்திலிருந்து தான் உற்பத்தி செய்யும் டெனிம்களை தொடர்ச்சியாக உலக தரத்திற்கு 'தரமுயர்த்தி' வருகின்றது.

❦ ❦ ❦

## ஊகவணிகரின் பாடம்

ஒரு ஊக வியாபாரியினுடைய பாடம் (The Education of a Speculator) என்பது அமெரிக்காவின் பிரதான ஊக வியாபாரியான விக்டர் நிடர்கூப்பர் என்பவரது சுயசரிதை. உண்மையில் அவ் வியாபாரி தனது வர்த்தக பாடத்தை கடந்த 97 ஒக்டோபர் 27-ம் திகதி அமெரிக்க சந்தையில் படிக்கத் தொடங்கிய நேரத்தில அவரது சுயசரிதை விற்பனையாகத் தொடங்கிற்று. 130 மில்லியன் டொலர்கள் வரை பலதரப்பட்ட முதலீட்டாளர்களின் முதலீடுகளை நிர்வகித்தவர் விக்டர். உலக மூலதன நிலவரங்களை களத்தில் எடுத்து புத்திசாதுரியமான பாதுகாப்பான முதலீடுகளை செய்வதற்காக விக்டர் போன்ற நிர்வாகிகளிடம் சிறு முதலீட்டாளர்கள் தம் நிதிகளைக் கையளிப்பதுண்டு. விக்டர் தன் வாடிக்கையாளர்களைக் காப்பாற்றியே வந்தார். தன் ஊகம், துணிச்சல் என்பன துணைகொண்டு இவர் செய்து வந்த வர்த்தகம், ஒக்டோபர் 27 அன்று தரைமட்டமானது. பிழையானதொரு கணிப்பை மேற்கொண்டு தன் முதலீடுகளை மேற்கொண்ட விக்டர், உலகம் பூராவும் வீசியடித்த ஹொங்கொங் மூலதன புயற் காற்றினால் தூக்கி வீசப்பட்டார். அவரது முழு முதலீடுகளும் சக ஊக வணிகர்களுக்காக விற்கப்பட்டு இன்று விக்டர் மீள ஒன்றுமே இல்லாத இடத்திற்கு தூக்கி எறியப்பட்டுவிட்டார். முதலாளித்துவப் பொருளாதார அமைப்பின் உச்ச வடிவமான மூலதன சந்தை, 'ஈவிரக்கமற்றது' என்பதற்கு விக்டர் உதாரணம் ஆகின்றார்.

❦ ❦ ❦

# எதிர்காலத்திற்கான அதிகார வர்க்கம்

பொருளாதார அதிகாரம் இடமாற்றம் பெற்றுள்ளது. கைத்தொழில் (Industrial age) யுகத்து முதலாளிகளான தொழில் ஆலை உரிமையாளர்களும், எண்ணெய் கிணறுகளின் உரிமையாளர்களும் தற்போது புதிதாக உருவாகி வரும் ஒரு வர்க்கத்தினால் அதிகாரத்திலிருந்து இறக்கப்பட்டு வருகின்றனர். Cyber Elite என கூறப்படும் இப் புதிய 'பணக்காரர்களின்' சொத்து 'தகவல்கள்' ஆகும். ஆம், அவர்கள் இன்றைய தகவல் தொழில்நுட்ப யுகத்திற்கு அதிபர்கள். அமெரிக்காவின் பில் கேட்ஸ் முதல் இந்தியாவின் ரட்ணம் டாட்டா வரை உலகின் செல்வம் திரட்டும் போட்டியின் முன்னணித் தலைவர்களாக இன்று திகழ்கின்றனர். இந்த 'தகவல்' வியாபாரிகள் சங்கீதத் துறையிலிருந்து பல்தேசிய வர்த்தகத்துறை வரை பரவியுள்ளனர், தம் துறைகளின் முடிசூடா மன்னர்களாக அவர்களை தம்மை நிலை நிறுத்திக்கொள்ள பாவித்தது, தகவல்களையே.



நேற்றைய அதிகார வர்க்கத்தினரான தொழில் ஆலை உரிமையாளர்கள் தகவல்களைத் துணைகொண்டு உலகப் பொருளாதார இயக்கப் போக்கை தீர்மானிக்கும் பில் கேட்ஸ் தலைமுறைக்கு ஈடு கொடுக்க முடியாது பின்தள்ளப்படுகின்றனர். அவர்களால் இலத்திரனியல் சமூகம், அதனது கலாச்சாரம் என்பவற்றுடன் போட்டிபோட முடியாதுவிடின் அவர்கள் வெகுவிரைவில் காணாமற் போய்விடுவார்கள். முன்பு நில உரிமையாளர்கள் அதிகாரத்தை வைத்திருந்தனர். இரு நூற்றாண்டின் முன் கைத்தொழில் புரட்சி, கைத்தொழில் அதிபர்களை அதிகாரத்திற்கு ஏற்றியது. இன்று தகவல் தொழில் நுட்ப சமுகத்தில் புதிய வர்க்கம் உருவாகி உள்ளது. இங்கு முதலாளித்துவம் தொடர்பாக நாம் கொண்டிருந்த நிரந்தரமான கருத்துக்கள் செல்லுபடியற்றன. நடைமுறையில் உள்ள நாடுகள் -சட்டங்கள்-வரிகள்- விதிமுறைகள் பயனற்றவை, தகவல் யுகம் சுனநேரத்தில் முறித்துவிடும். இவ் நூற்றாண்டின் (ஆயிரம் ஆண்டின் இறுதியும் கூட) இறுதியில் வர்த்தகத்திற்கான பிரதான பாதை இன்ரர்நெட் ஊடான வர்த்தகமே. ஒரு ரில்லியன் டொலர் பெறுமதியான வர்த்தகம் இலத்திரனியல் சுட்டங்கள் ஊடாக இடம்பெறும் எனக் கணிக்கப்படுகின்றது.

நடைமுறையில் உள்ள அச்சிடப்பட்ட பணம், முழுமையான இலத்திரனியல் அட்டைகளால் இடம் பெயர்க்கப்பட்டு இலத்திரனியல் வங்கிப் பரிமாற்றங்களே நிரந்தரமாகிவிடும் என எதிர்வு கூறப்படுகின்றது.

இந்தியா அசாமின் தேயிலை பதனிடும் தொழிற்சாலையை பாரிசில் ஏதோ ஒரு மூலையில் உள்ள 'Mono Prix' இன் காசாளர் இயந்திரத்தின் பதிவுகளை, மில்லியன்கள் கொடுத்து வாங்க வேண்டிய சூழ்நிலை உருவாகிவிட்டது. ஏனெனில் எந்த வகை தேயிலையை எந்த ரக 'வர்க்கம்' எப்படி வாங்குகின்றது என்ற தகவலே இன்றைய உற்பத்திக்கான பிரதான மூலதனம். தேயிலைத் தோட்டம் அதற்கான இயந்திரங்கள் என்பன இன்று பெறுமதியற்றதாக மாறிவிட்டன. இவ்வாறான ஒரு நவீன யுகத்தில் நாம் 'காலடி' எடுத்து வைக்கின்றோம்.

(தொடரும்)

## மக்டொனால்ட் (Mc Donalds): மொத்த நிலையங்கள் 21,022

விரைவு உணவகங்களின் தலைமையக 'மக்' தன்னை உலக அரங்கில் திடமாக நிலை நிறுத்திவிட்டது. அமெரிக்க நிறுவனமான 'மக்' இன்று ஜப்பான் முதல் சீனா, ரஷ்யா உள்ளிட பெரும்பாலான அனைத்து உலக நாடுகளிலும் தன் உணவுகளை விற்பதுடன் முதலாளித்துவத்தின் பிரமிப்பையும் சேர்த்து விற்கின்றது.

பல்வேறு தரப்பட்ட உணவு கலாச்சாரங்களை கொண்ட மக்கள் மத்தியில் அமெரிக்காவின் விரைவு உணவு கலாச்சாரத்தை பரப்பி வரும் 'மக்' கடந்த காலாண்டில் 755 மில்லியன் டொலர்களை வருவாயாகப் பெற்றது. இவ்வருடம் 10 புதிய நாடுகளில் மக் கால் பதித்துள்ளது.

❦ ❦ ❦

### இந்தியா: கேள்விக்குரியதாகியுள்ள குஜ்ரால் அரசினால் அச்சுறுத்தப்பட்ட சந்தை

ஜெயின் கமிசன் அறிக்கை, இந்திய மத்திய அரசை கேள்விக்குரியதாக்கியுள்ளது. இவ் தளம்பலான அரசியல் சூழ்நிலை பல சர்வதேச முதலீட்டாளர்களையும் உள்நாட்டு உற்பத்தியாளர்களையும் அச்சத்திற்கு உள்ளாக்கியுள்ளது.

ராஜீவ் கொலை தொடர்பான ஜெயின் கமிசன் அறிக்கையால் பாராளுமன்றத்தில் வைக்கப்படும் என்ற தகவல், பம்பாய் பங்கு சந்தையின் சுட்டெண்ணை பாதித்துள்ளதுடன், இந்தியாவின் உறுதியற்ற மத்திய அரசு இவ் அபாயத்தைத் தொடர்ந்து நீடித்தும் வருகின்றது.

❦ ❦ ❦

### நாணயமாற்று விகிதம்

| | $ | £ | DM | F Fr | S. Fr |
|---|---|---|---|---|---|
| பிராங்பேட் | 1.73 | 2.94 | – | 0.30 | .123 |
| சூரிச் | 1.41 | 2.40 | 0.81 | 0.24 | – |
| பாரிஸ் | 5.81 | 9.87 | 3.35 | – | 4.12 |
| லண்டன் | 0.59 | – | 0.34 | 0.10 | 0.42 |
| நியூயோர்க் | – | 1.69 | 0.57 | 0.17 | 0.71 |
| பம்பாய் | 37.70 | 63.75 | 21.70 | 6.48 | 26.70 |
| கொழும்பு | 60.07 | 101.59 | 34.58 | 10.33 | 42.55 |

# அரை ஆண்டு நினைவஞ்சலி

*மணியே மணியின் ஒலியே*
*சரவணமுத்து மணிவண்ணா*
*தமிழ் ஈழம் தனில்*
*துன்னாலை கரவெட்டியில்*
*தம்பியே நீ பிறந்து*
*வானகமும் வையகமும் வாழ்த்திட*
*வாழையடி, வாழையாய்*
*வாழ்ந்தனையே...!*
*அரக்கர்களின் ஆக்கிரமிப்பால்*
*பிறந்த தமிழ் மண்ணை*
*பிரிய மனமின்றி பிரிந்து வந்தாய்*
*எந்த மண்ணில் வாழ்ந்தாலும்*
*பிறந்த மண்ணை மறந்திடாத*
*மணியே..!*
*தலைவன் செய்யும் வேள்விக்கு*
*கையளவு நெய் சேர்த்து*
*யாகத்தீ வளர்த்து வந்தாய்*
*புன்னகை பூத்த முகத்தோனே*
*உன் முகம் தனை காணாமல்*
*நாம் இங்கே வாடுகின்றோம்..!*
*பொதுநலம் தேடும் மணியே*
*உன் இறப்பில் ஏனோ*
*சுயநலம் தழுவிச் சென்ற மாயமென்ன*
*விடையின்றி தவிக்கின்றோம்*

*உன் ஆத்மா சாந்தி பெற*
*பிரார்த்தனை செய்யும்..*
*சுவிஸ், சபோசன் வாழ்*
*தமிழ் உள்ளங்கள்*



மலர்வு: 02.08.1971

உதிர்வு: 26.05.1997

## திரு.சரவணமுத்து மணிவண்ணன்

எங்கள் ஆருயிர் நண்பன் மணிவண்ணனின் 6-ம் மாத அந்தியெட்டிகிரிகை 30.11.97 அன்று Kultur zenrum-ல் நடைபெற உள்ளது. நண்பர்கள் அனைவரையும் மணிவண்ணனின் அந்தியெட்டி கிரிகை நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

*- நண்பர்கள்*

***Kultur zenrum, Kammgarn***
***Baumgarten Str - 23, 8200 Schaffhausen.***
***T.P.- 052 - 6249661***

# யாழ் வைத்தியசாலையில் கடுமையான பாதுகாப்பு

யாழ். போதனா வைத்தியசாலையில் என்றுமில்லாதவாறு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. நோயாளரைப் பார்வையிடுவோர், அனுமதி அட்டைகள் (பாஸ்) வைத்திருந்தால் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றனர். உள்ளே கொண்டு செல்லப்படும் உணவுப்பொதிகளும் கடுமையான சோதனையிடப்படுகின்றன.

வெளி நோயாளர் பிரிவு வாசலில் வைத்து பாதுகாப்பு ஊழியர்கள் மேற்படி சோதனைகளை மேற்கொள்கின்றனர். இப்பாதையூடாக நோயாளர், பார்வையாளர்கள் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

வைத்தியசாலை ஊழியர்கள் ஆஸ்பத்திரிவீதியில் அமைந்திருக்கும் வழியாகவே செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

அதே நேரம் யாழ். பிரதான வீதியில் திருக்குடும்ப கன்னியர் மடம் வரையுமே வாகனங்கள் செல்ல தற்போது அனுமதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை குடாநாட்டின் கரையோரப் பகுதியான குருநகர், பாஷையூர், கொழும்புத்துறை, ஈச்சமோட்டை, சின்னக்கடை பகுதிகளிலும் படையினரின் நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

குடாநாட்டில்

# தேசிய மாவீரருக்கு ஆராதனை புலிகளின் தாக்குதல்களும் தீவிரம்

(23.11.97)

தமிழீழத்தின் தேசியக் காவலர்களை உணர்வுபூர்வமாக நினைவுகொள்ளும தேசிய நாளான மாவீரர் தினத்தை ஒட்டிய மாவீரர் நாட்கள் யாழ் குடாநாட்டில் மக்களால் உணர்வுபூர்வமாக நினைவுகூரப்படுவதற்கான ஆயத்தங்கள் இடம்பெற்று வருகின்றன.

நாம் வெளிப்படையாக ஆரவாரமாக எமது தேசிய வீரர்களை நினைவு கூர்ந்தக்க சுதந்திரமான சூழ்நிலை இல்லாவிடினும் எமது நெஞ்சங்களில் அவர்கள் நினைவு கூரப்படுவதை யாராலும் தடுக்க முடியாது என யாழ் வயோதிபர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மாவீரர் நாட்களை ஒட்டி ஆக்கிரமிப்பு படையினருக்கு எதிரான தமது தாக்குதல்களை விடுதலைப் புலிகள் தீவிரப்படுத்தியுள்ளனர். கடந்த 18-ம் திகதி தென்மராட்சி கனகம்புளியடியில் இராணுவத்தினருக்கெதிரான விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலொன்றில் பல படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

இரவு 8 மணியளவில் நடைபெற்ற இத் தாக்குதலுக்கு படையோர்ந்து அணியொன்றே இலக்காகியுள்ளது. இத் தாக்குதலில் பலியான படையினரின் உத்தியோக பூர்வ எண்ணிக்கையை வெளியிட சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சு மறுத்துவிட்டது ஆனால் யாழ். இராணுவ வட்டாரங்கள் இத் தாக்குதலில் எட்டு படையினர் இறந்தோ அல்லது படுகாயப் படுத்தப்பட்டுள்ளதாக மட்டும் தெரிவித்துள்ளனர். இதேவேளை கடந்த 17-ம் திகதி செருடாவில் பகுதியில் நடைபெற்ற தாக்குதலொன்றில் 9 படையினர் பலியானதை இரு நாட்களின் பின்னர் படையினர் ஒத்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# வலி. கிழக்கில் இராணுவம் 8 மணிநேர தேடுதல் வேட்டை சுதுமலையில் ஒருவர் பலி

யாழ். குடாவின் வலி. கிழக்குப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினர் கடந்த புதனன்றும், ஞாயிறன்றும் பாரிய சுற்றிவளைப்புத் தேடுதலை நடாத்தியுள்ளனர். இச் சுற்றிவளைப்பின்போது ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டதுடன், பலர் மேலும் கைதுசெய்யப்பட்டதாகவும் தெரியவருகிறது.

கடந்த புதனன்று அதிகாலை 5 மணியளவில் ஆனைக்கோட்டை, உடுவில், சுதுமலை, தாவடி, மானிப்பாய், மருதனாமடம் ஆகிய பகுதிகளை ஏக காலத்தில் சுற்றி வளைத்த நூற்றுக்கணக்கான படையினர், ஒலிபெருக்கிகள் மூலம் மக்களுக்கு தேடுதல் பற்றிய எச்சரிக்கையை விடுத்த பின்னர் தேடுதல் வேட்டையில் இறங்கினர். சில இடங்களில் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதத்தேடுதல் பிற்பகல் 2 மணிவரை நீடித்துள்ளது. வீடு வீடாகப் புகுந்த படையினர் அங்கு கடுமையான சோதனைகளை மேற்கொண்டனர். அத்துடன் இளவயதினரை தடுத்து வைத்து விசாரணைகள் செய்ததுடன் பலரைத் தம்முடன் கொண்டு சென்றுள்ளனர்.

இதோ போல கடந்த ஞாயிறன்று (23.11.97) வட்டுக்கோட்டை, தொல்புரம், சித்தங்கேணி, சங்கரத்தை ஆகிய இடங்களை சுற்றி வளைத்த படையினர் கடும் தேடுதலை மேற்கொண்டனர். இதே தினம் சுதுமலைப் பகுதியில் ஒரு வாலிபர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் இவரது சடலம் தற்போது யாழ். வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மாவீரர் தினத்தை முன்னிட்டு விடுதலைப் புலிகள் குடா நாட்டில் பாரிய தாக்குதலை நடாத்தக்கூடும் என்ற அச்சம் காரணமாகவே இத்தேடுதல் நடாத்தப்பட்டதாகத் தெரிய வருகிறது.

படையினரின் சுற்றி வளைப்புத் தேடுதலின் காரணமாக வலி. கிழக்கு பெரும் சூனியப் பிரதேசமாகக் காட்சியளித்துள்ளது.

# மகளை கொழும்பிற்கு அனுப்பியதால் தாய் சுட்டுக்கொலை

தென்மராட்சி மிருசுவில் பகுதியில் கடந்த சனியன்று தனது மாடுகளை மேய்த்துக் கொண்டு வந்தபெண் ஒருவரை சிறீலங்கா இராணுவத்தினர் சுட்டுக்கொன்றுள்ளனர்.

இதுபற்றி மேலும் தெரிய வந்ததாவது, மேற்படிபெண்ணின் மகளை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த இராணுவ காடையர்கள் முயற்சி செய்தார்கள். அதனால் கலக்கமடைந்த அப் பெண் தனது மகளை கொழும்பிற்கு அனுப்பி வைத்திருந்தார். இச் செய்கையால் ஆத்திரமடைந்திருந்த இராணுவத்தின் வெறிச் செயலே இது எனக் இறுதித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழீழ ஆவணக்காப்பகம் tamileelamarchive

கம்போடிய தலைநகரில்

# 113 இலங்கையர் தடுத்து வைப்பு பெரும்பாலானோர் தமிழர்கள்

காலாவதியான விதிவிட அனுமதிகளை கொண்டிருந்த காரணத்தால் கம்போடியத் தலைநகர் பனாம்பென்னில் 113 இலங்கையர்கள் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில பெரும்பாலானோர் வட-கிழக்கு தமிழர்களாவார்கள்.

இவர்கள் அனைவரும் மேற்குலக நாடுகளுக்கு செல்ல இருந்தவர்களென்றும், செல்லுபடியற்ற விதிவிட அனுமதிகளை இவர்கள் கொண்டிருந்தால் கம்போடிய நாட்டின சட்டத்தின் மூலம் தண்டிக்கப்பட்டு மீண்டும இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவார்களென கம்போடிய பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் அனைவரும் பயணமுகவர்களுக்கு பெருந்தொகைப் பணத்தை செலுத்தியிருப்பதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# வவுனியா நகரில் கைக்குண்டு தாக்குதல்கள்

(22.11.97)

அடுத்தடுத்து இடம் பெற்ற கைக்குண்டுத் தாக்குதல்களால் வவுனியா நகர பாதுகாப்பு படையினர் இன்று பெரும் அல்லோலகல்லோலப்பட்டுள்ளனர்.

பிற்பகல் 3.30 மணியளவில் வவுனியா தொலைத் தொடர்பு நிலையத்திற்கு அண்மையாக முதலாவது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு சரியாக 15 நிமிடங்களின் பின்னர் வவுனியா - மன்னார் வீதியில் இரண்டாவது கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத் தாக்குதல்களினால் தமக்கு எதுவித சேதமுமில்லை என படைத் தரப்பு அறிவித்த போதிலும், ஒரு சில படையினர் படுகாயமடைந்துள்ளனரென வவுனியாச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை வவுனியா கடைவீதியில் (பஜார் வீதி) மேலுமொரு கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அக் கைக்குண்டு வெடிக்கவில்லை எனவும், வெடிக்காத குண்டை படையினரின் குண்டு செயலிழக்க வைக்கும் பிரிவினர் பின்னர் செயலிழக்க வைத்தனர் எனவும் தெரியவருகிறது.

# மலேரியாவின் பிடியில் கிளிநொச்சி

மலேரியா நோயின் பிடியில் கிளிநொச்சி மாவட்டம் சிக்கியுள்ளது. சிறீலங்கா அரசின் மருத்துவத்தடை காரணமாகவும், மலேரியா நோய்க்கு எதிரான நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் இப் பகுதிகளில் எடுக்கப்படாமையினாலுமே இந்நோயின் தீவிரம் இங்கு தொடர்ச்சியாக அதிகரித்து வருகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் கடந்த மாதம் 2433 மலேரியா நோய் அறிகுறி கொண்டவர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். இந் நோயாளர்களுக்குரிய மருந்து வகைகள் போதியளவு கையிருப்பில் இல்லாமையால் நிலைமை மோசமாகி வருகிறது. நோய் அறிகுறி கண்டு பிடிக்கப்பட்டவர்களில் 298 பேர் கொடிய மூளை மலேரியாவின் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளார்கள்.

# கட்டைப்பிராயில் சிற்றூர்திகள் மோதியதில் பல்கலைக்கழக மாணவர்கள் ஐவர் காயம்

யாழ். பருத்துறை வீதியூடாக பயணம் செய்துகொண்டிருந்த சிற்றூர்திகள் (மினிபஸ்) இரண்டு ஒன்றுடனொன்று மோதியதன் காரணமாக யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஐந்துபேர் காயமடைந்துள்ளனர்.

சிற்றூர்திகள் ஒன்றை ஒன்று முந்திச் செல்ல முயன்ற வேளையிலேயே இவ் விபத்து ஏற்பட்டுள்ளது. யாழ் நகரிலிருந்து பருத்தித்துறை, அச்சுவேலி ஆகிய இடங்களுக்கு பிரயாணம் மேற்கொண்ட சிற்றூர்திகளே விபத்துக்குள்ளானவையாகும்.

பாரீஸ் 18 இல்

**கடை வாடகை / குத்தகை**

50M² பரப்பளவு கொண்ட கடை வாடகைக்கு உள்ளது.
13M² பரப்பளவு முகப்பு கண்ணாடி உடையது.
**வாடகை** - 5950ᶠˢ (H.T) / **குத்தகை** - 220.000ᶠˢ
(குறைக்கும் வசதியும் உள்ளது)
**55, Bld. Barbes,75018 Paris.**
**தொடர்புகட்கு: 01 42 23 02 27**

# மின்னல் தாக்கி இளம் பெண் பலி

கடந்த சில நாட்களாக வன்னிப் பகுதியில் பெய்துவரும் இடியுடன் கூடிய மழை, அப் பகுதியில் பெரும் அழிவுகளை ஏற்படுத்தியுள்ளது. வவுனிக்குளம் பகுதியில் மின்னல தாக்கியதால் இராசரத்தினம் சத்தியலதா என்ற இளம்பெண் பலியாகியுள்ளார். இவர் வேலணையிலிருந்து இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்து தனது குடும்பத்துடன் இப் பகுதியில் வசித்து வந்தவராவார். இதே தினம் துணுக்காய்ப் பகுதியில் இடம்பெற்ற மின்னல் தாக்குதலுக்கு இடம் பெயர்ந்த மக்களது பல குடியிருப்புகளும், உடமைகளும் பெரும் நாசமடைந்துள்ளன. தற்போது இவர்கள் அனைவரும் நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

# WOODLANDS







வூட்லண்ட்ஸ் தொலைபேசி அட்டையில் அதேவிலை 100 பிராங் உடன் மீண்டும் நிமிடங்கள் அதிகரிக்கப்பட்டுவிட்டன.

| | N°. Local | N°. Vert |
|---|---|---|
| இந்தியா | 22நிமி. | 15நிமி. |
| இலங்கை | 22நிமி. | 15நிமி. |
| ஐரோப்பா | 68நிமி. | 32நிமி. |
| அமெரிக்கா | 65நிமி. | 37நிமி. |
| கனடா | 65நிமி. | 37நிமி. |
| தாய்லாந்து | 18நிமி. | 18நிமி. |
| கம்போடியா | 17நிமி. | 14நிமி. |

70, Rue Louis Blanc, 75010 Paris - Tel: 01 40 35 01 04 / 01 40 35 00 27

## இசைப்புயல் A.R.ரஹ்மான் இன்னிசையில்...
## வாங்கிவிட்டீர்களா?

# ரட்சகன்



எங்கும் கிடைக்கிறது 'கலர் கனவுகள்'

**வெகுவிரைவில்**

இசைமாமணி இளையராஜா இன்னிசையில்

'சின்னராமசாமி பெரியராமசாமி',

'தினந்தோறும்'

'காதலுக்கு மரியாதை'

கதை-வசனம்-டைரக்ஷன்: பாசில்

K.J. ஜேசுதாஸ், S.Pபாலா, ஹரிஹரன், உன்னிகிருஸ்ணன், காதலன் உதித்நாராயணன், சுவர்ணலதா, சுஜாதா, ஹரினி மற்றும் பல பாடகர்கள் பாடியுள்ள 8 இனிய பாடல்கள்

A.R.Rahman இசையில் ஒரே CD இல்!

Bhasky முத்திரை பதிக்கப்பட்ட Ayngaran CDs, Cassettes.

BHASKY

*Marketed & Distributed by*

**Ayngaran Limited**
172, Woodmansterne Road,
London SW16 5TZ,
United Kingdom.
Tel: 0181 7645200
Fax: 0181 764 5255
*E-mail: bhasky@aol.com*

போலி CD க்களை வாங்கி ஏமாறாதீர்கள். Bhasky முத்திரைகளை கவனித்து வாங்குங்கள்

# திருக்கோவிலில் அதிரடிப்படை மீது தாக்குதல்; அதிகாரி பலி

மட்டக்களப்பு திருக்கோவில் பகுதியில் சிறீலங்கா அதிரடிப் படையணி ஒன்றின் மீது விடுதலை புலிகள் மேற்கொண்ட தாக்குதலொன்றில் மூன்று அதிரடிப்படையினர் கொல்லப்பட்டுள்ளனர். கொல்லப்பட்டவர்களுள் அதிரடிப்படை அதிகாரி (இன்ஸ்பெக்டர்) ஒருவரும் அடங்குகிறார்.

கடந்த வியாழனன்று இரவு 8.00 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலுக்கு விடுதலைப் புலி அணியினர் மீது தாக்குதலை நடாத்தவென பதுங்கியிருந்த அதிரடிப்படை அணியினரே இலக்கானவர்களாவர்.

கொல்லப்பட்டவர்கள் போக மேலும், இரு அதிரடிப்படையினர் படுகாயப்படுத்தப்பட்டுள்ளனர். சுமார் அரை மணி நேரமாக இடம் பெற்ற இத்தாக்குதலில் கொல்லப்பட்ட படையினரிடமிருந்த ஆயுதங்களையும் புலிகள் கைப்பற்றியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# புலிகளின் குரலுக்கு 7-வது அகவை நிறைவு

புலிகளின் குரல் வானொலி கடந்தவாரம் தனது ஏழாவது அகவையை நிறைவு செய்துள்ளது. இந்த அகவை நிறைவு விழா கடந்த வியாழனன்று (20.11.97) முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியில் வெகு சிறப்பாக நடைபெற்றது. புலிகளின் தரப்பில் செயலாளர் தமிழன்பன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் புலிகளின் குரல் வானொலியின் ஏழாம் ஆண்டையொட்டி நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோர்களுக்கான பரிசில்களை தமிழ்ழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், துணைப்பொறுப்பாளர் விதுரன், மட்டு. அம்பாறை அரசியல் பொறுப்பாளர் துரை, புகைப்படப் பிரிவுப் பொறுப்பாளர் திலவன், நிதர்சனம் பொறுப்பாளர் நிரேஷ் மற்றும் லோசனா, புலிகளின் குரல் பொறுப்பளர் தமிழன்பன் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர்.

சிறப்புரையை கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரையும், மதிப்பீட்டு உரையை வே.பாலகுமாரும் நிகழ்த்தினார்கள். இவற்றினைத் தொடர்ந்து கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. இந்நிகழ்வுகளில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### திருமலையில்....

பயிதன்ற அக்கறையுடன் அமெரிக்கா செயற்பட்டு வருவதாகவும் அவதானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை தமிழீழத்தில் தேசிய வளங்களை சிறிலங்கா அரசு கொள்ளையிட்டு வருவதை அனுமதிக்க முடியாது என விடுதலைப் புலிகளால் அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### தீர்வுப்பொதிக்கு....

பதில்லை என அறிவித்ததுடன் வடக்கு — கிழக்கில் நடைபெறும் ஆயுதப் போராட்டம் முதலில் நசுக்கப்பட்ட பின்னரே அரசியல் தீர்வு பற்றி சிந்திக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளது.

# இறந்த - காயமடைந்த படையினரை யாழ். வைத்திய சாலைக்கு கொண்டுசெல்ல வேண்டாம்

## குடாநாட்டு இராணுவ தலைமைக்கு உத்தரவு

தற்போது யாழ்.குடாநாட்டில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் திடீர் அதிரடித் தாக்குதல்களினால் அதிகளவு இராணுவத்தினர் பலியாவதை கண்டு அதிர்ச்சியடைந்துள்ள கொழும்பு இராணுவ தலைமைப்பீடம், தாக்குதலில் பலியான அல்லது காயமடைந்த படையினரின் எண்ணிக்கையை மறைப்பதற்காக புதிய உத்தரவொன்றினை யாழ். குடாநாட்டு இராணுவத் தலைமைக்கு பிறப்பித்துள்ளது.

பலியான அல்லது காயமடைந்த இராணுவத்தினரை எக்காரணம் கொண்டும் பொது வைத்தியசாலைகளுக்கு மறு அறிவித்தல் வரும்வரை கொண்டு செல்வதைத் தவிர்க்குமாறு அவ் உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் தாக்குதல்கள் பற்றிய செய்திகளை மேலிடத்தின் அனுமதியின்றி பத்திரிகைகளுக்கு வெளியிட வேண்டாமெனவும் அவ்வுத்தரவில் கோரப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பு - வவுனியாவில் 4 இராணுவ உளவாளிகள் சுட்டுக் கொலை

வவுனியாவிலும், மட்டக்களப்பிலும் இராணுவ புலனாய்வுத்துறையின் உளவாளிகள் நால்வர், கடந்தவாரப் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இருவர் வவுனியாவிலும் இருவர் மட்டககளப்பிலும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இறுதியாக மட்டக்களப்பில் 21.11.97-ம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டவர் புலனாய்வுத் துறையினருககு மிகவும் உபயோகமான தகவல்களை வழங்கி வந்தவர் என்பதை மட்டு. நகர இராணுவம் தெரிவித்துள்ளது.

மட்டு. நகர இராணுவ முகாமிற்கு தகவல்களை வழங்கிய பின்னர் இருதய புரத்திலுள்ள தனது வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்த போதே இவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

## யாழ் நகரில் மாவீரர் சுவரொட்டிகள்

யாழ். நகரின் கேந்திர இடங்களில் மாவீரர் தினத்தையொட்டிய சுவரொட்டிகள் கடந்த வாரம் ஒட்டப்பட்டுள்ளன.

சிறிலங்கா படையின் 51-2 படையணியின் கட்டுப்பாட்டிலுள்ள பாதுகாப்பு வலயத்துள்ளேயே கைகளால் எழுதப்பட்ட ஏழு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இச் சுவரொட்டிகளை படையினர் வந்து பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### இறக்கண்டியில்....

விடுதலைப் புலிகளின் அரசியற் பொறுப்பாளர் திருகாந்தன் அவர்களால் ஒப்படைக்கப்பட்டனர்.

விடுதலையான 20 பேரும் தமமை விடுவித்த புலிகளுககு நன்றியைத் தெரிவித்ததுடன் தம்மை இவ்வளவு நாளாக சிறப்பாக பராமரித்தமையையும் நன்றியுடன் நினைவு கூர்ந்தனர். அதேவேளை இவர்கள் விடுதலையான செய்தியை கேட்ட இவர்களது குடும்பத்தவர்களும் புலிகளுக்கு தமது நன்றியைத் தெரிவித்தனர்.

இதற்கு முன்னரும் இரண்டு தொகுதிகளாக இறககண்டி சம்பவத்தில் கைது செய்யப்பட்டவாகள விடுவிக்கப்படடமை குறிப்பிடத்தக்கது.


## குருநகர் சென் ஜேம்ஸ்

### பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம்

**காலம்:** 30.11.97 ஞாயிறு
**நேரம்:** மதியம் 12 மணிக்கு
**இடம்:** St. Martha Eglise Aubervilliers

*பழைய மாணவர் மாணவிகள், அங்கத்தினர், குருநகர் வாசிகள், ஆதரவாளர்களைக் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

திருமாகம்


## 9ம் ஆண்டு நினைவஞ்சலி

### கப்டன் இன்சூர்
### கணநாதன் குணநாதன்

மண்ணில்: 02.03.1965 மண்ணிற்காய்: 26.11.1988



*மண்ணில் கொடுமை கண்டெழுந்தாய்*
*மனித வதையைப் பார்த்தெழுந்தாய்*
*கண்ணீர் சிந்தும் வீதியைக் கண்டெழுந்தாய்*
*கருணையில்லா அரசை கண்டு சினந்தெழுந்தாய்*

*விடியுக்காய் நீ எழுந்து*
*வீர வேங்கையானாய்*
*வீறு கொண்டெழுந்து*
*வெற்றி காவியம் பல படைத்தாய்*
*தீபகத்தின் பொறுப்பேற்று*
*தீபகத்தின் காவலனானாய்*

*எம்மண்ணின் விடுதலை விரும்பாத*
*அன்னிய இராணுவம்*
*எம்மண்ணை ஆக்கிரமித்த போது*
*அசையாத உறுதி கொண்ட*
*தலைவன் ஆணை ஏற்று*
*களத்தில் இறங்கினாய்.*

*களத்தில் உன்னிடம் வாங்கிக் கட்டினர்,*
*உன் பெயர் கேட்டால்*
*உடல் நடுங்கும் அவர்கட்டு*
*காட்டிக் கொடுத்தனர் கயவர் உன்னை*

*காலுக்கு விலங்கிட வந்தனர் இந்தியர்*
*கரந்தடி படையாய் இறங்கினாய் களத்தில்*
*அன்னிய படையை கொன்று குவித்தாய்*
*அன்னியன் கைகளில் அகப்படாமல்*
*கொள்கை வீரன் நீ குடித்தாய் நஞ்சை*

*மண்ணுக்காய் நீ மாவீரனானாய்*
*தீந்தமிழ் தந்த செல்வமே*
*உன்னை எப்படி மறப்போம்*

*மாவீரனே உன் பாதத்தில்*
*எம்பாதம் பதிப்போம்*
*நீ சென்ற பாதையை எமதாக்கிக் கொள்வோம்*
*மாவீரனே உனக்கும் விடிவுக்காய்*
*வித்தாகிப் போன மாவீரர்கட்கும்*
*எமது நினைவஞ்சலிகள்*



இங்கனம்
சகோதரர்கள், மைத்துனர்கள்


ரஜிந்தாசின் புதிய உதயம்

மக்கள் மனங்களில் ஆடைத் தினுசுகளின் சுரங்கமான ரஜிந்தாஸ் நிறுவனத்தின் ஓராண்டு வெற்றிப் பயணத்தில்....

**கோலாகலமான திறப்புவிழா** 01.12.97 திங்கட்கிழமை

# ரஜிந்தாஸ் அழுத்தகம்



**Rajinthas AZhuththakam** - 21, Rue Perdonnet, 75010 Paris. M°: La Chapelle *ou* Gare du Nord
**Tél: 01 44 65 00 56 - Tél / Fax: 01 40 36 53 20 (Rajinthas Textils)**

சகல அச்சுத் தேவைகள், றபர் ஸ்ராம்புகள், பைண்டிங் வேலைகள், இன்னும்... இன்னும்

ஈழமுரசு
Eelamurasu Weekly
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

AYNGARAN ENTERPRISES & VIDEO
பசுமையான மரக்கறி வகைகள் மளிகைப் பொருட்கள்
ஐரோப்பிய ரீதியில் தெளிவான, தரமான, ஒரிஜினல்
வீடியோக்களை குறைந்த விலையில் வழங்குபவர்கள்
AYNGARAN VIDEO
80, BURLINGTON ROAD, NEW MALDAN
SURREY, KT3 4NU, ENGLAND
Tel: 0181 - 9421561
Fax: 0181 - 2968778


# எதையும் சந்திக்க தயார்

## -முதல்வர் கருணாநிதி

## ஜெயின் அறிக்கைக்கு எதிராக தி.மு.க. போர்க்கொடி



முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டதற்கு தமிழக மக்களும் உடந்தையாக இருந்தார்கள் என்ற ரீதியிலான குற்றச்சாட்டை ஜெயின் ஆணைக்குழு தனது இடைக்கால அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கையில் முன்னாள் இந்தியப் பிரதமர்களான வி.பி.சிங், சந்திரசேகர், திராவிட முன்னேற்றக்கழகம் ஆகியவற்றின் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

தமிழக மக்களின் நெருக்கமான தொடர்பு இல்லாமல் ராஜீவின் கொலை நடந்திருக்க முடியாது இதற்கு அரச அதிகாரிகளும், சட்டத்துறையும் தமது ஆதரவை அளித்துள்ளன. இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும்- இந்தியப் படையினருக்குமிடையில் மோதல் நடந்து கொண்டிருந்தபோதும் தமிழகத்தில் புலிகள் வளர்ந்து வந்தனர். கருணாநிதியின் தலைமையிலான திமுக ஆட்சி தமிழகத்தில் கலைக்கப்பட்ட பின்னர் சந்திரசேகரின் மத்திய அரசு கூட விடுதலைப் புலிகளுக்கு எதிராக முறையான நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

இவ்வாறான பல குற்றச்சாட்டுகள் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை ஜெயின் ஆணைக்குழுவின் இந்த இடைக்கால அறிக்கை பற்றி திமுக தலைவர் மு.கருணாநிதி ஆவேசமான கருத்துக்களை தெரிவித்ததுடன்,

ஜெயின் ஆணைக்குழுவின் அறிக்கை தமிழக மக்கள் மீது குற்றஞ்சாட்டியதை கடுமையாகக் கண்டனம் தெரிவித்தார். மத்திய அமைச்சரவையிலிருந்து தி.மு.க அமைச்சர்கள் இந்த அறிக்கை காரணமாக பதவி விலக மாட்டார்கள். எவ்வேளையிலும் மக்களை சந்திக்க நாம் தயார் எனவும் கருணாநிதி தெரிவித்தார் இதுபோன்ற கண்டனங்களை பல தி.மு.க பிரமுகர்களும் வெளியிட்டுள்ளனர்.

## திருமலையில் 750 ஏக்கர் நிலப்பரப்பு அமெரிக்காவிற்கு விற்க முடிவு

### பொசுபேற்று கனிமத்தை அகழவும் உரிமை

அமெரிக்க நிறுவனமான பிரீபோட் மக்மோசன் இற்கும் (Freeport Mc Mosan) சிறீலங்கா அரசிற்குமிடையில் வர்த்தக ஒப்பந்தம் ஒன்று தொடர்பான பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன. இந்த வர்த்தக ஒப்பந்தத்தின்படி திருமலை மாவட்ட கடற்கரையை அண்டிய 750 ஏக்கர் நிலப்பரப்பும், அங்கு பொசுபேற்று கனிம உப்பு அகழ்வதற்கான உரிமையும் மேற்படி வர்த்தக நிறுவனத்திற்கு சிறீலங்கா அரசால் விற்பனை செய்யப்படவுள்ளது எப்பாவெலப் பகுதியில் அகழப்படும் பொசுபேற்றுக் கனிமத்தை ஏற்றுமதி செய்வதற்காக இப்பகுதியில் புதிய துறைமுகம் ஒன்றும், சுற்றுலா மையம் ஒன்றும் அமெரிக்க நிறுவனத்தால் நிர்மாணிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. சிறீலங்கா-அமெரிக்காவிற்கிடையில் இது தொடர்பாக நடைபெறும் பேச்சுக்களை இந்திய அரசு மிகக் கூர்மையாக அவதானித்து கொண்டிருப்பதாக அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். அமெரிக்க நிறுவனம் திருமலையில் கால்ஊன்றுவது இந்தியாவின் பாதுகாப்பிற்கு முரணான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதால், சிறீலங்காவிடம் இதுபற்றி இந்தியாவால் எடுத்துரைக்கப்படும் எனவும் அவதானிகள் எதிர்வு கூறியுள்ளனர்.

பல வருடங்களுக்கு முன்னர் பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள அமெரிக்க இராணுவத் தளங்கள் மூடப்பட்டதன் பின்னர், திருமலை தளம் அமெரிக்காவின் 'கண்களுக்கு' சாதகமாக இருப்பதால் இந்த வர்த்தக நிறுவனத்தினூடாக ஒப்பந்தத்தை முடிப்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## பாரிஸ் அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலயத்தில் மாவீரர் நாள் விசேட பூசை

தமிழீழ விடுதலைக்காக தமது இன்னுயிரை அர்ப்பணித்த மாவீரர்களின் நினைவாக பாரிஸ் அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலயத்தில் எதிர்வரும் வியாழக்கிழமை (27.11.97) பகல் அன்னதானமும், மாலை விசேட அபிஷேக வழிபாடும் இடம்பெற உள்ளது. இவ் விசேட வழிபாட்டில் அனைத்து தமிழ் மக்களையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: மாவீரர் நாளை முன்விட்டு நடைபெறும் விசேட பூசைகள், அன்னதான செயற்பாடுகளில் பங்குகொள்ள விரும்பும் மாவீரர் குடும்ப உறுப்பினர்கள் ஆலய நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலயம்
26, Rue du Département 75018 Paris. (தொலை: 01.40.38.30.75)

## தீர்வுப் பொதிக்கு ஆதரவுதர பௌத்த மகாசங்கம் மறுப்பு

ஐக்கிய முன்னணி அரசினால் முன்வைக்கப்பட்டுள்ள 'தீர்வுப் பொதிக்கு' ஆதரவளிப்பதில்லையென சிறீலங்காவின் மல்வத்தை பௌத்த மகாசங்கம் கடந்த சனியன்று திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

கடந்தவாரம் சிறீலங்காவின் நீதி அரசியலமைப்பு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அரசின் உத்தேச தீர்வுத்திட்ட பொதியின் கொள்கைகளை மகாசங்கத்திடம் பரிசீலனைக்காக கையளித்திருந்தார். அதனை பரிசீலனை செய்த மகாசங்கத்தின் 20 பிக்குகள் அடங்கிய உயர் குழு உத்தேச தீர்வுதிட்டத்தை ஆதரிப்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## இறக்கண்டியில் புலிகளால் கைதானோர் தேசியத் தலைவரின் பணிப்பில் விடுதலை

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கடல் விபத்தொன்றில் சிக்கி இறக்கண்டிக் கரையோரமாக சேர்ந்த விடுதலைப் புலி போராளிகள் சிலரை தாக்கி இராணுவத்திடம் ஒப்படைத்த சம்பவத்தின் பின்னர், இறக்கண்டிப் பகுதியில் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்ட முஸ்லிம், சிங்கள மக்களின் இறுதித் தொகுதியினர் கடந்த 23ம் திகதி தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே.பிரபாகரனின் பணிப்பின் பேரில் மணிதாபிமான அடிப்படையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

17 முஸ்லிம்களும், 3 சிங்களவர்களுமான 20 பேரே இவ்விதம் விடுதலை பெற்றவர்களாவர்.

மல்லாவியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் இந்த 20 பேரும் சர்வதேச செஞ்சிலுவை சங்க வன்னி மாவட்ட பிரதிநிதியிடம்,

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

ஈழமுரசு பிரித்தானியா
சந்தா விபரம்
தபாற் செலவுடன்:-
52 - வாரங்களுக்கு £60 (520Frs.)
26 - வாரங்களுக்கு £30 (260Frs.)
தொடர்புகளுக்கு:
ஜெயந்தன் - 09 56 90 81 45 / குணம் - Tel: 09 56 27 77 18
E.Mail - eelamurasu@aol.com
'ஈழமுரசு உங்கள் பத்திரிகை; நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்

# மாவீரர் தினத்தையொட்டி கிலிகொண்டுள்ள படையினர்

## ★ கொழும்பில் சிவப்பு எச்சரிக்கை ★ யாழ்குடாவில் உசார்நிலை ★ வன்னியில் மழைக்குள் சிக்கியுள்ள படையினர்

வன்னியிலிருந்து காண்டீபன்

தமிழீழ விடுதலைப் புலிகள், மாவீரர் வாரத்தையொட்டியும், இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த தினத்தை முன்னிட்டும் நாட்டின் எந்தப் பாகத்திலாவது பாரிய தாக்குதலை நடாத்தக்கூடும் என இலங்கை அரசாங்கம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. கடந்த வெள்ளிக்கிழமை (21.11.1997) மாவீரர் வாரம் ஆரம்பித்துள்ளது. இந்தக் காலகட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் பாரிய தாக்குதல்களை தொடுப்பது வழமையான நிகழ்ச்சியாகும். எங்கும் எப்போதும் நினைத்த நேரத்தில் தாக்குதல் நடாத்த முடியும் என்பதை அண்மைக் கால நிகழ்வுகளின் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் நிரூபித்துள்ளார்கள்.

இலங்கையின் தலைநகரான கொழும்பில் தாக்குதல் நடாத்துவது என்பது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மிகச் சுலபமான காரியமாகும். இந்த மாவீரர் வாரத்தில் கொழும்புக்கு வெளியே பாரிய தாக்குதல்களை நடாத்தலாம் என அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. இதனால் நாடளவிய ரீதியில் அது உஷார் நிலையில் (ரெட் அலேட்) படையினரை வைக்கப்பட்டுள்ளார்கள். புலிகள் விசேடமாக யாழ்ப்பாணக் குடாநாட்டின் மீதோ, வன்னி பிராந்தியத்திலோ பாரிய தாக்குதல்களை நடாத்தக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணக் குடாநாட்டின் மீது தாக்குதல் நடாத்தககூடும் என்ற ஊகத்தினால் சிறிலங்காப் படையினர் வெள்ளிக்கிழமை முதல் பதட்டத்துடன் காணப்படுவதாக யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் செய்திகள் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் காரைநகர், பாசையூர் போன்ற கடற்பகுதிகள் ஊடாக யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குள் ஊடுருவித் தாக்குதல் நடாத்தலாம் என்று படையினர் சந்தேகிப்பதால் அப் பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகள் இரட்டிப்பாக்கப்பட்டுள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகள் இந்த மாவீரர் தினத்தில் நடாத்தப் போகும் தாக்குதல் எங்கே என்பது பெரும் மர்மமாகவே இருந்து வருகிறது. ஆனால் நாட்டில் எங்காவது மூலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் எதையாவது செய்வார்கள் என்று அரசாங்க தரப்பில் உறுதியாக நம்பப்படுகிறது.

எது எப்படியாயினும் கொழும்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. கொழும்பு சனனியில் குண்டு வெடிப்புக்குப் பின்னர் நாளாந்தம் நூற்றுக்கணக்கான தமிழர்கள் கொழும்பில் கைதுசெய்யப்பட்டு வருகிறார்கள். நகரில் நெடுஞ்சாலைகளில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு, அனைத்து வாகனங்களும் சோதனையிடப்பட்டு வருகின்றன. யுத்த காலம் போல் முப்படையினரும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மோப்ப நாய்கள், தலையாட்டிகள், சோதனை நிலையங்களில் நிறுத்தப்பட்டுள்ளார்கள். தமிழ் மக்கள் கொழும்பில் நடமாடுவது, குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாண தமிழ் மக்கள் நடமாடுவது குதிரைக்கொம்பாக இருக்கின்றது.

> வட பகுதியில் பருவ மழை பெய்து கொண்டிருக்கும் இவ்வேளையில் இந்த இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருப்பது தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குவார்கள் என்ற பயத்தின் பிரதிபலிப்பே என கொழும்பில் இராணுவ ஆய்வாளர்கள் பகிரங்கமாகவே அபிப்பிராயம் தெரிவிக்க ஆரம்பித்துள்ளனர்.

கொழும்பு நிலைமை இப்படி இருக்க, வவுனியா, கிளிநொச்சி பிரதான பாதையை திறப்பதற்கான மூன்றாம் கட்டமும் இறுதி கட்டமுமான 'ஜயசிக்குறுய்' இராணுவ நடவடிக்கை கடந்த சனிக்கிழமை (15.11.97) ஆரம்பமாகி இருக்கிறது. வட பகுதியில் பருவ மழை பெய்துகொண்டிருக்கும் இவ்வேளையில் இந்த இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருப்பது தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குவார்கள் என்ற பயத்தின் பிரதிபலிப்பே என கொழும்பில் இராணுவ ஆய்வாளர்கள் பகிரங்கமாகவே அபிப்பிராயம் தெரிவிக்க ஆரம்பித்துள்ளனர். அரசாங்கத்தின் இந்த முட்டாள்தனமான தன்னிச்சையான முடிவினால் ஏராளமான சிங்கள சிப்பாய்கள் பலியாகப் போகிறார்கள் எனவும் அவதானிகள் கருத்து தெரிவிக்கின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சிக் காலத்தில், வடக்கு, கிழக்கு மாகாணத்தில் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருந்த யுத்தம் இப்போது நாடு முழுவதிலும் பரவி விட்டதாக எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை குற்றஞ்சாட்டிக் கொண்டிருக்கும் இக்காலக் கட்டத்தில் சீனாவில் இருந்து 'பீசிக் மாஸ்டர்' என்ற பெயரைக் கொண்ட சீனக் கப்பல் மூன்று ஆயிரம் தொன் எடையுள்ள ஆயுதங்களை ஏற்றிக்கொண்டு கொழும்பு துறைமுகத்தை இன்னும் சில தினங்களில் வந்தடையும் என பாதுகாப்பு அமைச்சு எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறது.

சீனாவே இலங்கைக்கு ஆயுதங்கள் வழங்கும் நாடுகளில் முன்னணியில் திகழ்கிறது. மூன்று மாதங்களுக்கு முன்னர் 'மங்கியா' என்ற கப்பலில் பெருந்தொகையான ஆயுதங்கள் இலங்கைக்குக் கொண்டுவந்து இறக்குமதி செய்யப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கது.

இதற்கிடையில் அமெரிக்கா 'கிறீன் பரட்' கமாண்டோ பயிற்சியை பெறுவதற்காக முப்படைகளையும் சேர்ந்த ஐம்பத்திரண்டு (52) அதிகாரிகள் கடந்த செவ்வாய்க்கிழமை அமெரிக்கா பயணமாகியுள்ளார்கள். ★

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# மரண அறிவித்தல்

தொல்புரம், வடக்கும்பரையை பிறப்பிடமாகவும், திருகோணமலை நிலாவெளியை வசிப்பிடமாகக் கொண்டவருமான திரு. நாகலிங்கம் செல்வராஜா அவர்கள் 23.11.1997 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு. திருமதி. நாகலிங்கம் பொன்னம்மாவின் அன்பு மகனும், திருமதி சந்திரமணியின் அன்புக்கணவரும், திரு. திருமதி வேலாயுதம்பிள்ளையின் அன்பு மருமகனும், திருமதி. செல்வராணி (லண்டன்), சந்திரசேகரம் (குமார்- பிரான்ஸ்), சுதாகரன் (சுதா - பிரான்ஸ்), சுரேஸ்குமார் (வாகீசன் வி.எஸ்.கோ - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தந்தையும், திரு. சுந்தரானந்தம் (லண்டன்), திருமதி. கஜந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், வாகீசனின் (லண்டன்) அருமைப் பேரனும், நாகேஸ்வரி, நாகராசா, இராசகுரு, யோகநாதன், இரத்தினேஸ்வரி, சரஸ்வதி, கதிரவேலுப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், நாகேஸ்வரி, ஸ்ரீபிரகாசா, ஸ்ரீபாலகிருஷ்ணன், தில்லைநாயகி, புஸ்பராணி, கனகாம்பிகை, உதயகலா, சிவப்பிரகாசம், செல்லம்மா, சரோஜாதேவி, கனகமணி, கதிர்காமத்தம்பி, தங்கராசா, ரங்கநாயகி ஆகியோரின் மைத்துனரும், சண்முகானந்தன், புஸ்பநாதன், குகதாசன், பாலேந்திரன், சியாமளா, கற்பகவல்லி ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 25.11.97 அன்று மாலை 3.00 மணிக்கு (இலங்கை நேரம்) திருமலை இந்துமயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக்கொள்கின்றோம்.

திரு. நாகலிங்கம் செல்வராஜா (செல்வம்)
15, மத்திய வீதி, உவர்மலை,
திருகோணமலை.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்
9, Villa Gabriel,
93200 Saint Denis.
Tél: 01 48 09 33 48 -
06 07 40 59 18 (France)
0181 33 62 454 -
0181 28 80 208 (London)



தோற்றம்: 30.10.1944

மறைவு: 23.11.97

## திரு. நாகலிங்கம் செல்வராஜா (செல்வம்)

**சுரேஷ் றைஸ் மில்** (திருகோணமலை - நிலாவெளி)
உரிமையாளரும்,
**வி.எஸ்.கோ** (பாரிஸ்) உரிமையாளர்களின் தந்தையும்

# கண்ணகி கிராமம் சுற்றிவளைப்பு தொழிலாளர்கள் கைது

வாழைச்சேனை கண்ணகி கிராமத்தில் சிறீலங்காப் படையினரால் அண்மையில் நடாத்தப்பட்ட தேடுதல் வேட்டையொன்றில் பத்துப் பேர் கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் சமுர்த்தி திட்ட ஊக்குவிப்பாளரும் அடங்குகிறார்.

முழுக்கிராமத்தையும் சுற்றி வளைத்த படையினர், வீடு வீடாகச் சென்று சோதனைகளை நடாத்தினர். இக்கிராமத்தில் பெரும்பாலும் கூலித் தொழிலாளர்களே அதிகம் வசிப்பதால், அவர்களின் உடற்கட்டமைப்பினை காரணம் காட்டி படையினர் அவர்களை கடுமையாக துன்புறுத்தியதுடன் அன்னாரானவர்களை கைது செய்து தம்முடன் கொண்டும் சென்றுள்ளனர்.

இவர்கள் அனைவரும் தற்போது பேய்த்தாழை இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் உழைப்பினை நம்பி சீவித்த இவர்களின் குடும்பங்கள் தற்போது சக்தியற்ற நிலையில் உள்ளன.

## மாமனாரையும் மருமகனையும் பழிவாங்கிய பாம்புகள்

மட்டக்களப்பு விநாயகர் கிராமத்தைச் சேர்ந்த இருவர் பாம்பு தீண்டியதால் மரணமான சம்பவம் அண்மையில் நடைபெற்றுள்ளது. பலியானவர்கள் மாமனாரும மருமகனுமாவர்.

இந்த இருவரும் சந்தன ஆறு என்னுமிடத்திற்கு மாடுகளை மேய்க்கச் சென்ற போது இரு நாக பாம்புகள் ஒன்றையொன்று பிணைந்த நிலையில் கிடக்கக் கண்டு அவற்றினை நோக்கி கற்களால் வீசியுள்ளனர். ஆனாலும் பாமபுகள் ஒன்றையொன்று பிரியாததால் மீண்டும் கற்களால் அவற்றை அடித்து விட்டு சென்றுவிட்டனர்.

இச்சம்பவம் நடைபெற்ற இரண்டு நாட்களுக்கு பின்னர் அதேஇடத்திற்கு அண்மையில் உள்ள வயல்வாடியில் இரவுக் காவலுக்கு இருவரும் சென்றுள்ளனர். அங்கு இருவரும் இரவுக் காவலில் ஈடுபட்டபோது, பாம்புகள் வந்து அவ்விருவரையும் தீண்டியதால் இருவரும் மரணமடைந்துள்ளனர். இச்சம்பவம் அப்பகுதியில் தற்போது பரபரப்பாக பேசப்படுகிறது.

## கொட்டில்களில் கல்விகற்கும் மாணவர்கள்

ஈச்சிலம்பற்று, கோட்டக் கல்வி அலுவலகத்தின் கீழ் இயங்கிவரும் ஆறு பாடசாலைகளுக்கான நிரந்தரக் கட்டடங்கள் எதுவும் இல்லாததால், தற்காலிகமாக அமைக்கப்பட்ட கொட்டில்களில் மாணவர்கள் கல்வி கற்கும் அவல நிலை தொடர்ந்து வருகிறது.

கல்லடி நீலியம்மன் வித்தியாலயம், புன்னையடி நாமகள் வித்தியாலயம், இலங்கைத்துறை அளைமுகன் வித்தியாலயம், பூமரத்தடி சேனை சித்தி விநாயகர் வித்தியாலயம், சேனையூர் வீரபத்திரர் வித்தியாலயம், வட்டவான தான் தோன்றீஸ்வரர் வித்தியாலயம் ஆகிய மேற்படி ஆறு பாடசாலைகளும நிரந்தரக் கட்டடங்களோ மலசல கூட வசதிகளோ இன்றி இயங்கி வருகின்றன.

தற்போதுள்ள மழை காலச் சூழ்நிலையில் மாணவர்கள் எதிர் நோக்கும் இன்னல்களை கல்வி அமைச்சின் அதிகாரிகள் கவனத்திற்கு எடுக்காமல் அசமத்தனமாக செயற்படுவதற்கு, மாணவர்களின் பெற்றோர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

## கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத தபாற்பொதிகள்

முல்லைத்தீவுத் தபாலகத்திற்கு கொழும்பிலிருந்து அனுப்பிவைக்கப்பட்ட தபால் பொதிகள் அனைத்தும் மழையில் நனைந்த நிலையில் வந்து சேர்ந்துள்ளன. இப் பொதிகளுக்குள் இருந்த வெளிநாட்டு, உள் நாட்டுக் கடிதங்கள், காசோலைகள் அனைத்தும் முற்றாக நனைந்து அழிந்த நிலையில் வெறுந் தாள்களாகக் காணப்பட்டதால் மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன. மேற்படி தபால் பொதிகள் பாதிப்பு பற்றி முல்லை பிரதம தபால் அதிபர் கருத்து தெரிவிக்கையில், கடிதங்கள் அனைத்தும் நனைந்த நிலையிலே தமக்கு வந்து சேர்ந்தமையால் அவற்றை விளக்கின் மூலம் சூடாக்கிக் காயவைத்து அனுப்ப வேண்டிய நிலை ஏற்பட்டதாகத் தெரிவித்தார்.

இதே வேளை வங்கிகளுக்கு கிடைக்கப்பெற்ற தபால் பொதிகளில் இருந்த காசோலைகள் அனைத்தும் முற்றாக அழிந்த நிலையில் இருந்ததால் அனைத்தும் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன. கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத நிலையில் எவ்வளவோ இழுபறிப்பட்டு வந்து சேர்ந்த காசோலைகளும் மாற்ற முடியாத நிலையில் திருப்பி அனுப்பியமை மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது

## பழுதடைந்த உணவுப் பொருட்கள் விற்பனை

மட்டு நகரில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் பாவனைக்குதவாத அரிசி மற்றும் உணவுப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

கோட்டை முனைக் கிளை, கல்லடி, புதுமுகத்துவாரம் ஆகியவற்றிலேயே மேற்படி பாவனைக்கு உதவாத உழுத்த நிலையிலான உணவுப் பொருட்கள் கூடியளவில் விற்பனைசெய்யப்பட்டு வருகின்றன. இவ்வுணவுப் பொருட்களைவாங்க மறுப்பவர்களுக்கு பால்மா வகைகளை விற்பனை செய்யவும் இக்கிளைகளின் நிர்வாகம் 'மறுத்து' வருகிறது.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் இந்த அநியாய நடவடிக்கைகள் குறித்து யாரிடம் முறையிடுவதென பொது மக்கள் கவலை தெரிவித்து வருகின்றனர்.

## மட்டு. நகரில் புதிய காவலரண்கள்

மாவீரர் நாளினையொட்டி விடுதலைப் புலிகள் மட்டு நகரில் இராணுவ நிலைகள் மீது பாரிய தாக்குதல்களை மேற்கொள்ளலாம் என பீதியடைந்துள்ள படைத்தரப்பினர், நகரில் உள்ள முக்கிய இடங்களில் பாரிய காவலரண்களை அமைத்துள்ளனர்.

பார் வீதி, தொழிநுட்ப பயிற்சி நிலையம, கல்லடிப் பாலை இறங்கு துறை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள இக்காவலரண்களால் பொது மக்கள் பெரும் இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். வீதியால் போக்குவரத்து செய்யும் மக்களை இக்காவலரண்களில் பணிபுரியும் சிப்பாய்கள் பெரும் கெடுபிடிகளுக்கு உள்ளாக்கியும் வருகின்றனர்.

இதேவேளை காத்தான்குடி கடற்கரையோரமாக உலாவுவதற்கு இராணுவம் தடை பிறப்பித்துள்ளது. மாலை வேளையில் கடற்கரைக் ஓய்வுக்காக செல்லும் மக்களை தாக்கி விரட்டும் இராணுவம், அவர்களை இப் பகுதிப் பக்கம் நடமாடக்கூடாதென எச்சரிக்கையும் விடுத்துள்ளது.

## யாழ்.மக்களுக்கான வாளிகள் கொழும்பில் தவம்

யாழ்ப்பாணத்தில் மீளக் குடியமர் தோருக்கு வழங்கப்படவென கொள்வனவு செய்யப்பட்ட 10,000 வாளிகள் கொழும்பில் கடந்த 3 வருடங்களாகத் தேங்கிக்கிடக்கின்றன. இவை FRED திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட போதும் அவற்றை விநியோகிப்பதற்காக இன்னும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. மூன்று வருடங்களுக்கு முன்னர் நான்கு அரச சார்பற்ற நிறுவனங்களினால் சுமார் 21 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியில் இவ்வாளிகள் கொள்வனவு செய்யப்பட்டன.

மேற்படி நிறுவனங்களின் பிரதிநிதிகள் கொள்வனவு செய்த வாளிகளை கப்பல் மூலம் யாழ்ப்பாணம் அனுப்புவதாக கொழும்பில் உள்ள முகவரிடம் கையளித்தனர். ஆயினும் இவை இன்னமும் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்படவில்லை.

## தமிழருக்கு வெள்ள நிவாரண நிதி இல்லை

அண்மையில் பெய்த அடைமழையினால் வடக்குக் கிழக்கில் பெரும்பாதிப்புஏற்பட்ட போதிலும், அப்பகுதிகளுக்கு எவ்விதமான நிவாரணங்களும் இதுவரை வழங்கப்படவில்லை.

குறிப்பாக வன்னிப்பகுதிகளில் வெள்ளத்தினால் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. வீடுகள், வீதிகள்என்பன வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், உணவு போதியளவு கிடைக்காமல் மக்கள் பெரும் இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். சில இடங்களில் வெள்ள நீர் இன்னும் வடியாத நிலையே காணப்படுகிறது.

இதேவேளை சிறிலங்கா அரசு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சிங்கள மக்களுக்கு வெள்ள நிவாரண நிதியாக இலட்சக் கணக்கான ரூபாய்களை சமூக உதவிப்பணத்திட்டத்தின் கீழ் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.


**வாகன சேவை**



உங்கள் பொருட்கள்
வீட்டுத்
தளபாடங்கள்
போன்றவற்றை ஏற்றி
இறக்கவும் வெளியூர்
பிரயாணம் போன்ற தேவைகளுக்கும்

ரவி:
01 48 76 51 90
06 07 62 26 89
01 42 23 23 10

மேற்கு லண்டன் மாநகரில்
**துவாரகா**
Cash & Carry
இல்லை என்பது
இங்கில்லை
N°: 199, The BROADWAY,
Southall, Middx.
T.P: 0181 / 813 9126

இலண்டனில் நகைத்
தெரிவுகளுக்கு
**ராஜூ பட்னி அன் சன்**
**PATTNI HOUSE**
58-60 EALING ROAD WEMBLEY,
MIDDX HA0 4TQ
TEL: 0181-903 6677 / 2859,
0181-902 0577
FAX: 0181- 903 4887

# எம்.ஜி.ஆர். புகழை அழித்தவர் ஜெயலலிதா

## - நடிகை லதா

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா தனது ஆட்சியில் எம்.ஜி.ஆர். புகழை திட்டமிட்டே அழித்தார் என அ.தி.மு.க துணை பொதுச் செயலாளர் நடிகை லதா குற்றம் சாட்டியுள்ளார்.

திருச்செந்தூருக்கு வருகை தந்திருந்த நடிகை லதா நிருபர்களிடம் கூறுகையில்,

பத்திரிகையில் அ.தி.மு.க உறவு பற்றிய செய்திகள் வெளிவருகின்றன. எங்கள் கட்சியில் ஜனநாயகம் இருக்கின்றது. குறைகளை பேசித் தீர்த்துக்கொள்வோம். ஆனால் ஜெயலலிதாவின் பக்கம் போக நாம் தயாராகவில்லை. ஜெயலலிதா ஆட்சியில் இருக்கும் போது நான் அரசியலுக்கு வரவில்லை. பதவிக்கு ஆசைப்பட்டிருந்தால் எம்.ஜி.ஆர் இருந்த போதே அரசியலுக்கு வந்திருப்பேன். நம்மையெல்லாம் உருவாக்கியவர் எம்.ஜி.ஆர் அவரது புகழை காக்கவே நான் அரசியலுக்கு வந்தேன். நான் இயன்றளவு கட்சிக்காக உழைப்பேன். எதிர்வரும் டிசம்பர் மாதம் தமிழ்நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மக்களை சந்திக்கவுள்ளேன் என்றும் அவர் தெரிவித்தார்.

# இந்தியச் செய்திகள்

# பத்மநாபா கொலைவழக்கு மறு பரிசீலனை ?

பத்மநாபா கொலை வழக்கு தீர்ப்பை எதிர்த்து தமிழக அரசு மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று முன்னாள் தமிழக முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

பத்மநாபா மற்றும் பலர் கொலையானது தொடர்பான வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட பலர் விடுதலையாகி இருப்பதை எதிர்த்து தமிழக அரசு மறுபரிசீலனை செய்யாவிடின், இவ் வழக்கால் நமக்கென்ன என்று திமுக கருதுவதாக அர்த்தமாகும். இப்படியான சூழ்நிலையில் ஜெயின் ஆணைக் குழுவின் அறிக்கையில் கூறப்படுகின்ற குற்றச் சாட்டுக்கு, தி.மு.க.வும் கருணாநிதியும் அளித்த ஒப்புதல் வாக்குமூலம் ஆகும் என்று பத்திரிகையாளர்சோ தெரிவித்துள்ள சில கருத்தை நான் மக்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

பத்மநாபா கொலைவழக்கில் குற்றம் சாட்டப்பட்ட பலர் தடா சிறப்பு நீதிமன்ற தீர்ப்பில் விடுதலையாகியிருப்பது, ஜெயின் ஆணையாளரின் குற்றச்சாட்டுக்கு நேர் எதிராகவுள்ளது.



சம்பவம் நடந்த நேரத்தில், குற்றவாளியான சாந்தனின் முன்னிலையில் 4 பேர் இச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளனர். இவர்களின் தாக்குதல்களினால் 15 பேர் பலியாகியுள்ளனர். இவற்றை செய்த குற்றவாளிகள், சிவராஜன், டேவிட், நிலீபன், டானியல் ஆகியோர் வானில் புதுக்கோட்டை வழியாக தப்பிச் சென்றுள்ளதாக தடா சிறப்பு நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது. இச் சூழ்நிலையில் ஜெயின் ஆணைக்குழு கூறிய குற்றச் சாட்டை ஆராய வேண்டியுள்ளது.

பத்மநாபாவைக் கொலை செய்தவர்களை கண்டுபிடிக்கும் பணியில் பொலிசார் ஆர்வம் காட்டத் தேவை இல்லை. நாளை மற்றவற்றை நான் வந்து சொல்கின்றேன் என்று முதலமைச்சர் கருணாநிதி தம்மிடம் தெரிவித்ததாக பொலிசார் கூறியதாக முன்னாள் உள்துறை செயலாளர் ஆர்.நாகராஜன் சாட்சியளித்தார் என்ற ஜெயின் ஆணைக்குழுவின் குற்றச்சாட்டையும், குற்றவாளிகள் வானில் தப்பிச்சென்றுள்ளதாக தடா சிறப்பு நீதிமன்றத்தீர்ப்பையும் நாட்டுமக்களின் கவனத்திற்கு நான் கூற விரும்புகிறேன்.

அத்துடன் தடா சிறப்பு நீதிமன்றம் அளித்த தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்ய வேண்டியது கருணாநிதி அரசின் கடமையாகும். விடுதலை செய்யப்பட்ட அனைவரும் தி.மு.கவினர் என்பதால் இவ் வழக்கை மறுபரிசீலனை செய்ய வேண்டிய முக்கிய பொறுப்பு தி.மு.கவையே சாரும் என்று ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

# குமரி அனந்தனுக்கு கலாநிதிப் பட்டம்

தமிழ் நாடு காந்தி பேரவை செயல் தலைவர் குமரி அனந்தனுக்கு, மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் கடந்த வாரம் கலாநிதிப்பட்டம் வழங்கி கவுரவித்தது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு குமரி அனந்தன் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் தன்னை ஆய்வு மாணவராகப் பதிவு செய்துகொண்டார். அவர் தனது ஆய்வுக்காக தேர்ந்தெடுத்த தலைப்பு இருபதாம் நூற்றாண்டுக் கவிதைகளில் தொழிலாளர் நிலை என்பதாகும்.

மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் 31—வது பட்டமளிப்பு விழா கடந்த 20—ம் திகதி நடைபெற்றது. இவ் விழாவில் கலாநிதிப்பட்டம் அவருக்கு வழங்கப்பட்டது.

# வள்ளுவர் கோட்டைக்கு வந்த வீரப்பன் ?

தனியார் தொலைக்காட்சி நிறுவனம் நகைச்சுவைக்காக நடாத்திய படப்பிடிப்பு நிகழ்ச்சியினால், வள்ளுவர்கோட்டைக்கு வீரப்பன் வந்துவிட்டதாக பரபரப்பும், பதட்டமும் நிலவியது.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப்பார்க்கும் ரசிகர்களுக்கு நகைச்சுவைக்காக, பொது இடமொன்றில் தனியார் நிறுவனத்தினால் படப்பிடிப்பு நடாத்தப்பட்டது. இப்படப்பிடிப்பில் சந்தனக்கடத்தல் வீரப்பன் தனது உறுப்பினர்களுடன் பேருந்து நிலையத்தில் வைத்து, பயணக்கைதிகளை கடத்தமுற்பட்ட போது சிலர் கூச்சலிட்டபடி சிதறி ஓடினார்கள். இந்நிகழ்வை மறைந்திருந்து படப்பிடிப்பு செய்ததை அறியாத பொதுமக்கள் பீதியினால் சிதறியோடினார்கள். சிலர் வீரப்பன் வள்ளுவர் கோட்டைக்கு வந்துவிட்டதாகவும் பாடசாலை மாணவர்களையும், பொதுமக்களையும் கடத்த முற்பட்டதைத் தாம் நேரில் கண்டதாகவும் பொலிசில் புகார் கூறினார்கள்.

இதனையடுத்து, வள்ளுவர் கோட்டைப்பகுதிக்கு விரைந்த பொலிசார் மற்றும் அதிரடிப் படையினரும் சுற்றிவளைத்து வீரப்பனை கைதுசெய்து விசாரித்தனர். அதன் பின்னர் தான் படப்பிடிப்பு நடைபெற்றதாகவும், வீரப்பனாக நடித்தவர் ஒரு நிறுவனத்தின் காவல் ஊழியர் என்பது தெரியவந்தது.

# பெண் கலந்துரைஞர் சாகும்வரை உண்ணாவிரதம்

வாடிப்பட்டி பேரூராட்சித் தலைவர் மற்றும் நிர்வாக அதிகாரியை கைது செய்யக்கோரி, சாகும் வரை உண்ணாவிரதத்தை பெண் கலந்துரைஞர் ஆரம்பித்துள்ளார்.

கலந்துரைஞர் இந்திராணிக்கும், பேரூராட்சித் தலைவர் ராமசந்திர கென்னடி மற்றும் நிர்வாக அதிகாரி பெ. ராமநாதன் ஆகியோருக்கிடையே, குலசேகரம் கோட்டையில் பாலம் அமைப்பது தொடர்பாகப் பிரச்சினைகள் ஏற்பட்டபோது தன்னை இழிவாக பேசியதாக அவர் பொலிசில் புகார் கூறியுள்ளார்.

இதனையடுத்து அவர்கள் இருவரையும் கைது செய்யக்கோரி சாகும் வரை உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளதால், பொலிசார் இருவர் மீதும் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

# இந்திராகாந்தி விருது வழங்கப்பட்டது

தேர்தல் ஆணையர் ஜி.வி. கிருஷ்ணமூர்த்தி உட்பட 31 பேருக்கு இந்த ஆண்டு இந்திராகாந்தி விருது வழங்கப்பட்டுள்ளது.

இந்திராகாந்தியின் பிறந்த நாளையொட்டி ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு துறைகளில் சிறப்பாக சேவை ஆற்றிவருபவர்களுக்கு இவ் விருது வழங்கப்பட்டு வருகின்றது.

இவ்வருடம் தேர்தல் ஆணையாளர் ஜி.வி.கிருஷ்ணமூர்த்தி, ஜம்மு— காஷ்மீர் மாநில சபாநாயகர் அலி அகமது நாயக், விளையாட்டுத் துறையைச் சேர்ந்த மில்கா சிங் உட்பட 31 பேருக்கு இவ்விருது முன்னாள் ஜனாதிபதி சங்கர் தயாள சர்மாவினால் வழங்கப்பட்டது. இவ்விழாவில் முக்கிய அரசியல் பிரமுகர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# நரசிம்மராவ் மனுவை உயர்நீதிமன்றம் ஏற்கமறுப்பு

எதிர்க்கட்சி எம்.பிக்களுக்கு லஞ்சம் கொடுத்த குற்றம் தொடர்பாக வழக்கு டெல்லி தனி நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. இவ் வழக்கில் முன்னாள் பிரதமர் நரசிம்மராவ் மீதும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இவ் வழக்கு விசாரணையை நிறுத்தக் கோரி நரசிம்மராவ் தரப்பினர் உயர் நீதிமன்றத்தில் சிறப்பு மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளனர்.

இம் மனுவை விசாரணைக்கு ஏற்ற நீதிபதி எம்.கே. முகர்ஜீ தலைமையிலான மூன்று பேர் கொண்ட நீதிபதிகள், நரசிம்மராவின் கோரிக்கையை ஏற்க மறுத்து மனுவை தள்ளுபடி செய்துள்ளனர்.

# தபால் ஊழியர் வேலைநிறுத்தம் ஒத்திவைப்பு

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, தபால் ஊழியர் சங்கத்தினால் அறிவிக்கப்பட்டிருந்த வேலை நிறுத்தப் போராட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்தியா முழுவதும் 18.11.97 முதல் நடைபெறுவதாகவிருந்த தபால் ஊழியர் வேலை நிறுத்தம்; அஞ்சல் வாரியத்துடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட எழுத்துபூர்வமான ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஒரு மாதகாலம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இவ் அடிப்படையில் வேலைநிறுத்தம் எதிர்வரும் ஜனவரி மாதம் 5—ம் திகதிக்கு பின்போடப்பட்டுள்ளது.

தபால் ஊழியர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றாத பட்சத்தில் ஜனவரி மாதம் 6-ம் திகதி முதல் காலவரையற்ற வேலைநிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக தபால் ஊழியர்கள் எழுத்து பூர்வமாக தபால் வாரியத்திடம் வலியுறுத்தியுள்ளனர்.

# மாவீரர் குடும்பங்கள் கெளரவிப்பு

எதிர்வரும் 07.12.1997 அன்று சுவிஸ் பேர்ண் நகரில் நடைபெறவுள்ள மாவீரர் நாள் நிகழ்ச்சியில், தேசவிடியலுக்காக தம் இனிய உயிர்களை அர்ப்பணித்த மாவீரர்களின் உறவுகள் போற்றி கெளரவிக்கப்படவுள்ளனர். அந்தப் புனிதமானவர்களின் உறவுகளே!

தயை கூர்ந்து 01/273 34 07 என்ற தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளுங்கள். அல்லது அருகிலுள்ள 'மக்கள் கடைகள்' இல் உள்ள விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து ஒப்படையுங்கள்.

- சுவிஸ் பணியகம்

# சத்துணவினால் 175 மாணவர்கள் மயக்கம் பொதுமக்கள் பேருந்து மறியல்

துறையூர் அருகேயுள்ள பாடசாலையில் சத்துணவு உண்ட மாணவர்களுக்கு மயக்கம் ஏற்பட்டது. உடன் சிகிச்சையளிக்க வைத்தியர்கள் சமூகளிக்காததை கண்டித்து கிராம மக்கள் பேருந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்தவாரம் திருச்சி மாவட்டததிலுள்ள வெங்கடஜலபுரம் என்ற கிராமத்தில் நடுநிலைப் பாடசாலையொன்றிலுள்ள சத்துணவு மையத்தில் மாணவர்கள் மதிய உணவு சாப்பிட்டுக கொண்டிருந்த வேளையில், சிலருக்கு திடீரென மயக்கம் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து 175 மாணவர்கள் தலைசுற்றி விழ ஆரம்பிததனர்.

இவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக அருகிலுள்ள சுகாதார நிலையததிற்கு தகவல் கொடுத்தும் அங்கிருந்து வைத்தியர்கள் சமூகம் தராதபட்சத்தில் இவர்களை துறையூர் வைத்தியசாலையில் அனுமதிககபபட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களை பரிசோதித்த வைத்தியர் உணவில் பல்லி விழுந்திருப்பதாக தெரிவித்துள்ளார்.

இச் சம்பவத்திற்கு சிகிச்சை அளிக்க தவறியமைககாகவே பொதுமக்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத் தககது.

# இராமர் பிறந்தது எந்த அயோத்தி?

"உத்தரப்பிரதேச மாநிலத்தில் அமைந்துள்ள அயோத்தியில் இராமர் பிறக்கவில்லை. ஆப்கானிஸ்தானிலுள்ள ஹெராத் என்ற நகருக்கு அருகேயுள்ள அயோத்தியில்தான் இராமர் பிறந்தார்" என்று டாக்டர் சியாம் நாராயண் பாண்டே (74) என்ற வரலாற்று ஆசிரியர் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் நடைபெற்ற இந்திய வரலாற்று காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டு இது தொடர்பாக ஒரு கட்டுரையை சமர்ப்பித்தார். அக் கட்டுரையில் அவர் கூறியிருப்பதாவது.

ஆப்கானிஸ்தானில் உள்ள ஹெராத் நகரில் வரலாற்று அயோத்தியுள்ளது. அவ் அயோத்தி தற்போது கூறப்படும் அயோத்தியை விட பழமை வாய்ந்தது. இராமன் வசித்த அயோத்தி, ஆப்கானிஸ்தானில் உள்ள ஹரிருத் என்ற நதிக் கரையில் அமைந்திருந்தது. இராமரின் மறைவுக்குப்பின் அவரது அயோத்தி அழிக்கப்பட்டதை தொடர்ந்து, காசி அல்லது குஷிவாஹன் என்று அழைக்கப்படும் பழங்குடியினர் இராமரின் மகன் குஷாவின் பெயரில் 'குஷாக்' என்ற புதிய நகரமொன்றை நிர்மாணித்துள்ளனர்.

வரலாற்று ரீதியில் இராமன் ஆப்கானிஸ்தானில்தான் தோன்றினார். எனவே இராமனின் அயோத்தி குறித்து தகவல் ஆராய வேண்டுமானால் ஹரிருத் நதியின் வடக்குப் பக்கத்தில்தான் ஆய்வு நடத்தப்பட வேண்டும். அப்போது இராமர் மற்றும் அயோத்தி குறித்த உண்மையான தகவல் கிடைக்கும். உத்திர பிரதேசத்திலுள்ள அயோத்தி பழமைவாய்ந்தது அல்ல என்று அவர் தனது கட்டுரையில் விபரமாக கூறிப்பிட்டுள்ளார்.

# தி.மு.க உறவை த.மா.கா முறிக்காது

ஜெயின் ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையில் தி.மு.க மீது குற்றம் சாட்டியிருப்பது நிரூபிக்கப்பட்டாலும் தி.மு.க.வுடனான உறவை த.மா.கா. தற்போதைக்கு முறித்துக்கொள்ளாது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலையில் சதித்திட்டம் உள்ளதா என்பதை ஆராய ஓய்வு பெற்ற நீதிபதி ஜெயின் தலைமையில் ஆணைக் குழு அமைத்து விசாரணை நடத்தப்பட்டது. நீதிபதி ஜெயின் 110 சாட்சிகளை விசாரித்து, அறிக்கையை மத்திய அரசிடம் ஒப்படைத்தார். அவ் அறிக்கை பாராளுமன்றத்தில தாக்கல் செய்யப்பட்டு உத்தியோகபூர்வமாக வெளியாவதற்கு முன்பு 'இந்தியா டுடே' செய்திகளை வெளியிட்டுள்ளது.

தி.மு.க.வும், முதல்வர் கருணாநிதியும் ராஜீவ கொலைக்கு ஆதரவு அளித்தனர் எனவும், மத்திய அமைச்சரவையில் இருந்து தி.மு.கவை வெளியேற்ற வேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளமையால்,

அ.தி.மு.க ஊழல் ஆட்சியை எதிர்த்து குரல் கொடுத்து தனி அணியாக பிரிந்த கட்சியுமான த.மா.கா, ஜெயின் ஆணைக் குழுவின் அறிக்கையால் தி.மு.கவுடனான உறவை முறித்துக்கொள்ளும் என்றும் செய்திகள் வெளிவந்துள்ளன.

தற்போதைய சூழ்நிலையில் தி.மு.க.வுடன் உள்ள உறவை த.மா.கா. முறித்துக்கொள்ளாது என்று த.மா.கா.உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# ஐ.ஆர்.எஸ் 1-டி செயற்கைக்கோள் 5 ஆண்டுகள் இயங்கும்

இந்திய ராக்கெட்டான பி.எஸ்.எல்.வி மூலம் விண்வெளியில் ஏவப்பட்டு சுற்றிக்கொண்டிருக்கும் இந்தியச செயறகைக் கோள் ஐ.ஆர்.எஸ். 1-டி அதன் செயல்களை தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கு இயங்கும என்றும், அவ் செயற்கைக்கோள் செயலிழந்து போகும் என்ற அச்சத்தேவை இல்லை என்றும் இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தலைவர் டாக்டர் கேகஸ்தூரி ரங்கன் தெரிவித்துள்ளார்.

'விண்வெளித் துறையில் இந்தியாவின் சாதனைகளும் சவால்களும்' என்ற தலைப்பில் ஹைதராபாத்தில் நடந்த கருத்தரங்கில் அவர் உரையாற்றுகையில்,

ஐ.ஆர். எஸ். 1-டி செயற்கை கோள் எதிர்கொண்ட பிரச்சினைகளை இனங்கண்டு திருத்தங்கள் செய்துவிட்டோம். எங்களால் ஏவப்பட்ட தொலையுணர்வுச் செயற்கைக் கோள்கள் உலகிலேயே சிறந்தவை என்றும் அவர் கூறியுள்ளார்.

# டெல்லியில் குற்றவாளிக்கு தூக்கு தண்டனை

இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் படுகொலை தொடர்பாக 1984-ம் ஆண்டு டெல்லியில் நடைபெற்ற சீக்கிய எதிர்ப்புக் கிளர்ச்சியின்போது அதில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட 3 பேருக்குத் தூக்குத் தண்டனை விதித்து டெல்லி நீதிமன்றம தீர்ப்பளித்தது.

டெல்லியில் திரிலோக்புரி பகுதியில் 1984-ம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ம் திகதி மூன்று சீக்கிய இளைஞர்களைக் கொன்ற குற்றத்திற்காக கிஷோரிலால், புத் பிரகாஷ் மற்றும் முகமது அப்பாஸ் ஆகிய மூவருக்கும் சிறப்பு நீதிபதி ஓ.பி. துவேதி தூக்குத் தண்டனை அளித்து தீர்ப்பளித்துள்ளார்.

# மதுரையில் பலத்த மழை 1,879 வீடுகள் சேதம்

மதுரை மாவட்டத்தில் அண்மையில் பெய்த பலத்த மழையினால் 1,879 வீடுகள் சேதமடைந்துள்ளன. இதில் 174 வீடுகள் முற்றாக சேதமடைந்ததுடன், 1,705 வீடுகள் சிறு சேதங்களுக்குள்ளாகியுமுள்ளன.

மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முற்றாக சேதமடைந்த வீட்டு உரிமையாளர்களுக்கு தலா 1000 ரூபாவும், சிறுசேதத்துக்குள்ளான வீட்டு உரிமையாளர்களுக்கு தலா 500 ரூபாவும் வழங்கியதாக தெரிவித்துள்ளது.

இதன் போது ஒரு பெண் இடிந்த கட்டடங்களுக்குள் அகப்பட்டு உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

## வாய் மொழிகளும் கொசுறுச் செய்திகளும் ☹

☺ 'தி.மு.க. மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. எனவே தி.மு.கவை ஐக்கிய முன்னணியிலிருந்து நீக்க வேண்டும். தி.மு.க. வை நீக்க ஐக்கிய முன்னணி தயங்கினால், ஐ.மு.க்கு அளித்து வரும் ஆதரவை காங்கிரஸ் கட்சி விலக்கிக் கொள்ள வேண்டும்'

— வாழப்பாடி

❀ ❀ ❀

☺ 'சினிமாவில் நடித்து நடித்து நிஜ வாழ்க்கை என்ன என்பதே மறந்து போய் விட்டது. அதனால் நடிப்புத்துறையிலிருந்து விலக விரும்புகிறேன்.'

— நடிகர் ரஜனி

❀ ❀ ❀

☺ 'ஜெயின் ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையில் சம்மந்தம் இல்லாத இயக்கத்தினர்மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அதனால் அறிக்கையின் பிரதியை தீயிட்டு கொழுத்தப்போகின்றோம்.'

— கோவை செழியன்

❀ ❀ ❀

☺ 'காங்கிரஸ் கட்சியை வலுப்படுத்தவும், புத்துயிரூட்டவும் தலைமைப் பொறுப்பை சோனியா காந்தி ஏற்க வேண்டும்.'

— சீதாராம் கேசரி

❀ ❀ ❀

☺ 'இரு சக்கர வாகனங்களில் செல்பவர்கள் அவசியம் ஹெல்மெட் அணிந்து செல்ல வேண்டும், என்ற சட்டத்திலிருந்து சீக்கியப் பெண்களுக்கு விரைவில் விதிவிலக்கு'

— ஆளுனர் தேஜேந்திர கன்னா

❀ ❀ ❀

☺ 'ஜெயின் ஆணைக்குழுவின் அறிக்கை பத்திரிகையில் வெளியானதற்கு மத்திய உள்த்துறை அமைச்சர் இந்திரஜித் குப்தா பொறுப்பு ஏற்க வேண்டும்'

— சமாஜ் கட்சித் தலைவி மாயாவதி

❀ ❀ ❀

☺ 'நீதிமன்றங்களில், திருநாவுக்கரசு கூட்டிய பொதுக்குழு செல்லாது, செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லாது என்று நீதிபதி தீர்ப்பு வழங்கிய பின்னரும், அ.தி.மு.க பொதுச்செயலாளர் என்று போடுவது தவறான செயல். அதற்காக வழக்கு தொடரவுள்ளேன்'

— ஜெயலலிதா

❀ ❀ ❀

### தீப்பொறி!

☺ சிவகங்கையில் 26.10.97 அன்று தி.மு.க பொதுக்கூட்டம் நடைபெற்றது. தீப்பொறி ஆறுமுகமும், மத்திய அமைச்சர் டி.ஆர். பாலுவும் பேசுவதாக விளம்பரம் செய்திருந்ததால் பேச்சை கேட்க அதிக கூட்டம் ஆவலோடு இருந்தது. ஆனால் டி.ஆர். பாலு மட்டுமே வந்திருந்து பேசினார். தீப்பொறி சமுகம் கொடுக்கவில்லை. ஏன் தீப்பொறி சமுகம் கொடுக்கவில்லை என்று பலர் வினவியபோது, கட்சித்தொண்டர்கள் "கூட்டம் சேரட்டும் என்றுதான் அவரின் பெயரை சேர்த்து விளம்பரம் செய்தோம்!" என்றார்கள்.

— நக்கீரனில்

❀ ❀ ❀

### 'ஜெ' அணியில் மீண்டும் சேலம் அர்ச்சுனன்!

☺ சேலம் மாவட்டத்தில் கொடிகட்டிப் பறந்த அர்ச்சுனன் ஜெயலலிதாவின் கொடுமைகளைத் தாங்காமல் போட்டி அ.தி.மு.கவில் ஐக்கியமானார்.

ஆனால் அக்கட்சியில் நிலைமை தலைகீழ். கூட்டுத் தலைமை என்ற பெயரில் ஆளாளுக்கு நன்மை மட்டம் தட்டுவதை பொறுக்காத அர்ச்சுனன், ஜெயலலிதாவே மேல் என்று எண்ணி ரகுபதி மூலம் 'ஜெ' யிடம் தூது அனுப்பி இருக்கிறார்.

போட்டி அ.தி.மு.கவின் வளர்ச்சியை தடுப்பதற்காக ஜெயலலிதா சம்மதம் சொல்லிவிட்டார். விரைவில் 'ஜெ' அணியில் அருச்சுனன் தனது ஆதரவாளர்களுடன் ஐக்கியமாகி விடுவது உறுதி!

— நெற்றிக்கண்ணில் உமாசங்கர்

❀ ❀ ❀




நன்றி: நக்கீரன்




# தென்னாசியாவுக்குள் அமெரிக்க முன்னோடி நடவடிக்கைகள் ஆரம்பம்

ஆப்கானிஸ்தானில் இருந்து ரஷ்யா வெளியேறியதும், சோவியத் ரஷ்யாவின் உடைவும் தென்னாசியா மீது, அமெரிக்காவின் 'அக்கறையை' வேகப்படுத்தியுள்ளன என இராஜதந்திர செய்திகள் தெரிவிக்கின்றன.

இம்மாதம் 18,19 ஆம் திகதிகளில் தென்னாசியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்க இராஜாங்க அமைச்சர் திருமதி மடலின் அல்பிரைட்டின் கருத்துக்களை அடிப்படையாக வைத்தே மேற்படி செய்தி வெளியாகியுள்ளது.

ஆப்கானிஸ்தானில் உள்ள தலிபான்களின் ஆட்சியையும், தலிபான்களின் ஆட்சிக்கு பாகிஸ்தான் அளித்த அங்கீகாரத்தையும் கண்டித்த திருமதி மடலின் அல்பிரைட்,

இந்தியாவில் மூன்றுமணி நேரம் தங்கி நடாத்திய பேச்சுக்களின்போது அணுஆயுதம், தொழில்நுட்ப பரிமாற்றம் தொடர்பாக அதிக அக்கறை காட்டியுள்ளார்.

14 வருடங்களுக்குப் பின் இந்தியா சென்ற முதலாவது அமெரிக்க இராஜாங்க அமைச்சரான திருமதி மடலின் அல்பிரைட், அடுத்த வருடம் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்யவுள்ள அமெரிக்க அதிபரின் பயண ஏற்பாடுகளைப்பற்றியும் பேசியுள்ளார்.

அடுத்தவருடம் அமெரிக்க அதிபர் இந்தியா வருவதில் இருந்து தென்னாசியாவில் அமெரிக்கா பிரசன்னம் பாரிய அளவில் எதிர்பார்க்கப்படுகின்றது.

# வியட்னாமில் பிரெஞ்சு ஜனாதிபதி தலைமையில் கலாச்சார விரிவாக்க மாநாடு

பிரெஞ்சுக் கலாச்சாரத்தையும் பிரெஞ்சு மொழியையும் வியட்னாம் உட்பட முன்னாள் பிரெஞ்சுக் காலனிகளில் பரப்புவதற்கான பிரெஞ்சு மொழி பேசும் நாடுகளின் மாநாடு வியட்னாம் தலைநகர் Hanoi இல் பிரெஞ்சு ஜனாதிபதி ஜக்சிராக் தலைமையில் நடைபெற்றது.

கடந்த 16.11.97 ஞாயிறன்று முடிவுற்ற பிரெஞ்சு மொழிபேசும் நாடுகளின் மாநாட்டில் வாக்கெடுப்போ, தேர்தலோ நடாத்தப்படாமல் ஏகமனதாக இந்நாடுகளின் பொதுச் செயலாளராக எகிப்தை பிறப்பிடமாகக் கொண்ட ஐநா முன்னாள் செயலாளர் பூட்ரோஸ் காலி தெரிவானார். இப்பதவிக்கு போட்டியிடும் உரிமை மறுக்கப்பட்டபல உறுப்பினர்கள் பிரான்சின் தனிப்பட்ட முடிவின்படியே, செயலாளர் நியமனம் எனக் கருத்து வெளியிட்டனர்.

எகிப்தின் முன்னாள் ஜனாதிபதியான Pierre Boutros-Ghali இன் பேரனே, பூட்ரோஸ் காலியாவார். எகிப்தின் ஜனாதிபதியாக இருந்த இஸ்லாமிய மதத்தைச் சாராத ஒருவர் என்ற பெருமையைப் பெற்ற பூட்ரோஸ் காலியின் பேரன் 1910-ம் ஆண்டு இஸ்லாமியத தீவிரவாதியால் சுட்டுக்கொல்லப்பட்டார். 'மேற்குலகத்துக்கு முண்டு கொடுக்கும் பூட்ரோஸ்காலி குடும்பம்' என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே பூட்ரோஸ் காலியின் பேரன் எகிப்திய தேசியவாதி ஒருவரால் சுட்டுக் கொலைப்பட்டார்.

பூட்ரோஸ் பூட்ரோஸ் காலியின் நியமனம் பத்திரிகைகளில் வெளியான அதே தினம், எகிப்தில் உல்லாசப் பயணிகள் மீது தீவிரவாதிகள் சுட்டதில் 70 உல்லாசப் பயணிகள் கொல்லப்பட்டனர். இச்சம்பவத்திற்கும் பூட்ரோஸ் காலியின் பிரெஞ்சு மயப்படுத்தல் பதவி ஏற்புக்கும் தொடர்புள்ளதா என்பது உறுதிப்படுத்தப்படவில்லை.

இது ஒரு புறமிருக்க 'பிரெஞ்சு மொழிபேசும் நாடுகளில் மொழி பரப்பல் கொள்கை 'நவ காலனித்துவ' வடிவத்தில் ஒன்று' என புரட்சிக்காரரான சேகுவேராவின் பாசறையில் பயின்ற கொங்கோ ஜனநாயகக் குடியரசுத் தலைவர் கபிலா தெரிவித்துள்ளார்.

பிரெஞ்சு ஜனாதிபதி 'மொழியூடான பிணைப்பு எதிர்கால அரசியல் பொருளாதார முடிவுகளின் முக்கியமான அம்சம்' என பிரெஞ்சு மொழிபேசும் நாடுகளின் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.


விரைவில் வெளிவருகிறது

அமுதசுரபி

அழைப்பிதழ், வாழ்த்துமடல்,
பிரசுரங்களை தமிழ் கலாசார
ஓவியங்கள், வரம்புகளுடன்
தயாரித்து அச்சிடும்
கணனித் தமிழ் புரோகிராம்

மெனுக்கள்
அனைத்தும் தமிழில்!

வின்டோஸ் 95 இல் இயங்கும்

Amuthasurapi
Computer Tamil
Printing Program for
Windows 95

தொலைபேசி -
தொலைநகல்:
(01) 34 53 94 92
(பாரிஸ்)


## உலக நினைவலைகளில்

# Ho Chi Minh

## வியட்னாம் சுதந்திரப் போர் கருக்கொண்ட பாரிசில்- ஹோ சி மின் நடாத்திய பத்திரிகையில் ஆசிரியர்-செய்தியாளர்-கருத்தோவியம்

இந்தோசீனாவை காலனித்துவ ஆட்சியில் இருந்து விடுவித்து வியட்னாம் குடியரசை விடுவிக்கும் நோக்குடன் பாரிசில் Paria என்ற பத்திரிகையை நிறுவி வழி நடத்தியவர் சுதந்திர வியட்னாமின் முதலாவது ஜனாதிபதி ஹோ சி மின்.

பிரான்சின் காலனித்துவ ஆட்சியில் இருந்து வியட்னாமை மீட்கும் போர் பிரான்சின் தலைநகர் பாரிசில் தான் கருக்கொண்டது. விடுதலை வீரனுக்கே உரிய ஒரே அம்சமான அச்சமற்ற மனதுடன் பாரிசில் இருந்தே பிரெஞ்சுக் காலனித்துவத்துக்கெதிரான தனது பத்திரிகையை 1917 இல் ஆரம்பித்த ஹோ சி மின், அப்பத்திரிகையின் ஆசிரியராகவும், செய்தியாளராகவும், கருத்தோவியம் படைப்பவராகவும் மொத்தத்தில் எல்லாமுமாக இருந்தார்.



Rue Marche - Aux - Patriaches என்ற இடத்திலும் பின்னர் பாரிசில் Marcadet பகுதியிலும் வாழ்ந்த ஹோ சி மின் தனது 20-வது வயதில் தோட்ட வேலைக்காரனாக பிரான்ஸ் வந்தார். பிரான்சில் வேலைக்காரன் சீவியத்தை வெறுத்த ஹோ சி மின் பின்னர் பிரித்தானியாவுக்குச் சென்று வீதி துப்பரவு செய்யும் தொழிலாளியாகவும் பின்னர் சமையற்காரனாகவும் இருந்தார். சுதந்திர உணர்வுகொண்ட அவரது ஆத்மாவுக்கு பிரித்தானிய வாழ்வும் திருப்தி தரவில்லை. அமெரிக்கா சென்றார். 1917 இல் முதலாம் உலகப் போரின் பின் மார்க்சிய கொள்கைகள் பற்றி கேள்வியுற்ற ஹோ சி மினுக்கு சுதந்திர வெறி ஏற்பட்டது. மீண்டும் பாரிஸ் வந்தார். பிரான்சிலுள்ள புரட்சிகர கட்சிகளுடன் இணைந்து கொண்டார். பிரெஞ்சுக் காலனித்துவத்துக்கெதிரான விடுதலை வீரனுக்கு பிரெஞ்சுப் பாதுகாப்பு படைகள் மாலைபோட்டு வரவேற்பு நடாத்தவில்லை. அவர் அதற்காகப் பத்திரிகை ஆரம்பிக்கவும் இல்லை, அவர் நடாத்திய அறிவூட்டல் நிகழ்வுகள் பிரெஞ்சுப் பொலிசாரால் கலைக்கப்பட்டன. இரகசிய துண்டுப் பிரசுரம்தான் அவருக்கு துணையாகியது. பாரிசில் பத்திரிகையாளனாக இருந்தபோது பிரெஞ்சு பொலிசாரின் இடைஞ்சலைக் கண்டு ஒத்தூதவோ உண்மையை மறைக்கவோ விரும்பவில்லை. சுதந்திர வியட்னாமை உருவாக்கிய வியட்னாமின் முதலாவது ஜனாதிபதி ஹோசி மின் காலனித்துவத்தின் பாராட்டுஅல்ல 'நீ புரட்சிக்காரன் என்பதற்கு அத்தாட்சி காலனித்துவம் உன்னைக் கண்டு சீற்றமடைய வேண்டும்'. 'அதுதான் நீ புரட்சிக்காரன் என்பதற்கு சாட்சி' என்பதை உணர்ந்த ஹோசிமின் விட்டுக் கொடுக்கவில்லை.

கவர்ச்சிகரமானவராகவும், அதி தீவிரவாதிகளாகவும் காணப்பட்ட 30 வயது இளைஞன் ஹோசிமின் பிரான்சில் Tour என்னுமிடத்தில் நடைபெற்ற பிரெஞ்சு சோசலிசக் கட்சி கூட்டத்தில் வெள்ளையரல்லாத பிரெஞ்சு வாழ் மக்களின் உரிமைகள் பற்றி குரலெழுப்பினார். தேசியவாதியாக கருதப்பட்ட ஹோசிமினுக்கு சமவுடமைவாதியென்று அந்தஸ்து அப்போது தான் கிடைத்தது.

பாரிசில் Marcadet பகுதியில் ஹோசிமினுடன் ஒரு அறையில் வாழ்ந்த Trinh. பத்திரிகைகளுக்கு ஒரு முறை பேட்டியளிக்கையில் இரவுவேளைகளில் கூட என்னை நிம்மதியாகத் தூங்கவிடாது விடுதலையற்றியும் காலனித்துவ எதிர்ப்பு பற்றியும் நச்சரித்துக் கொண்டேயிருப்பார் ஹோசி மின் எனத் தெரிவித்துள்ளார். பாரிசில் அந்த இரவுகளில் ஒன்றின்போதுதான் Proies De La Colonisation Française காலனித்துவ பிரான்சுக்கெதிரான குற்றச்சாட்டு என்ற கட்டுரையை ஹோசி மின் வரைந்தார்.

இக்கட்டுரை 1945 செப்டெம்பர் 2-ம் திகதி வியட்னாம் குடியரசின் பிரகடனமாக அமைந்தது. பாரிசிலிருந்து வெளியேறி 1924 இல் மொஸ்கோ சென்ற ஹோ சி மின் 18 மாதங்கள் அங்கு தங்கியிருந்து புரட்சி பற்றிப் பயின்றார்.

அதன்பின் 03.02.1930 இல் வியட்னாமிய கம்யூனிஸ்கட்சியை அவர் நிறுவினார். வியட்னாமிய முதலாவது ஜனாதிபதி என்ற வரிசையில் முன்னாள் காலனித்துவ ஆட்சியாளரான பிரெஞ்சு ஆளுனரை முதற்தடவையாகச் சந்தித்தபோது அவர் பின்வருமாறு தெரிவித்தார்.

'சுதந்திரம் தொடர்பான இலக்கியப் படைப்புக்கள் பிரெஞ்சு மக்களிடம்தான் பிறந்தன. அந்தப் பிரெஞ்சு மக்கள் என்றும் என் மனதில் உள்ளார்கள். நீங்கள் எதைச் செய்தாலும் அந்த மக்களை நான் இன்னமும் மதிக்கிறேன். உங்கள் நாட்டு Victor Hugo வும் Michlete.... உட்பட பலரும் எங்கள் சகோதரர்கள். அவர்கள் மனிதம் பற்றி எழுதிய உன்னதமான கருத்துக்களை எந்தவிதமான சலிப்பின்றி நான் இன்னமும் படிக்கின்றேன்'

இன்னொரு இடத்தில் அவர் பின்வருமாறு தெரிவித்தார். 'உங்களுடன் இன்னுமொரு போர் ஏற்பட்டு எம்மவர்களில் 100 பேரை நீங்கள் அழித்தால் உங்களில் ஒருவரையாவது நாம் அழிக்கும் வலிமை எமக்குண்டு. அப்படி நடந்தால் கூட வெற்றி எமக்குத்தான்' எனத் தெரிவித்துள்ளார்.

**''இன்றைய செய்தி நாளைய வரலாறு**
**நேற்றைய செய்தி இன்றைய வரலாறு**
**வரலாறும் செய்தியும் வாழ்வியலின் வழிகாட்டிகள்''**

# ஆண் பெண் வயது வேறுபாடின்றி பிரான்சில் யூதர்கள் கைதாகி ஹிட்லரிடம் ஒப்படைத்ததை மறுத்துரைப்பதும், நியாயப்படுத்துவதும் பிரெஞ்சுச் சட்டப்படி குற்றம் ?

இரண்டாம் உலகப்போரின் போது ஆண், பெண் வயது வேறுபாடின்றி யூதர்களைக் கைது செய்து ஹிட்லரின் கொலை முகாம்களுக்கு அனுப்பிய அன்றைய பிரெஞ்சு ஆட்சியாளர்களின் செயல் குற்றமல்ல என எழுதுவதும், பேசுவதும் குற்றமாகும் என்ற 1990 ஜூலை 13 சட்டப்படி மேற்படி குற்றத்தை அண்மையில் புரிந்த வரலாற்றுத்துறை பேராசிரியர் மீது கடந்த 10.11.97 அன்று பிரெஞ்சு அரசு வழக்குத் தொடர்ந்துள்ளது.

ஒரு இனத்தை அழிப்பதை எக் காரணம் கொண்டும் நியாயப்படுத்த முடியாது. அது இனவாதமாகும் என்ற மேற்படி பிரெஞ்சு சட்டப்படி அந்த வரலாறு ஆசிரியருக்கு, ஒரு வருட சிறைத்தண்டனையும் 3 இலட்சம் பிராங்குகள் அபராதமும் விதிக்கப்படலாம் என 19.11.97 புதன் திகதியிட்ட 'லு மொன்ட்' பத்திரிகையின் 12-ம் பக்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. Robert Faurrison என்ற மேற்படி வரலாற்றுத்துறைப் பேராசிரியருக்கு ஏப்ரல் 1991-ல் இனவாதக் கொள்கையாளர்களால் மட்டும் நியாயப்படுத்தப்படும், யூதர்களின் மீதான படுகொலைகளை நியாயப்படுத்திய குற்றத்திற்காக 1 இலட்சம் பிராங்குகள் அபராதமும், ஒரு வருட ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தீவிர வலதுசாரி இனவாதக் கட்சியின் மாத சஞ்சிகையான 'le Choc Du Mois' என்ற பத்திரிகையில் யூதப்படுகொலைகளை நியாயப் படுத்தியதற்காகவே இவருக்கு 1991-ல் தண்டனை விதிக்கப்பட்டது. தண்டனையை விதித்து தீர்ப்பளித்த நீதிபதிகள், போர்க்குற்றமென நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்ட குற்றமான யூதப்படுகொலைகளை மறுத்துரைப்பது குற்றம் எனக் குறிப்பிட்டனர். தற்பொழுது Aaargh என்ற கணினிவலைச் செய்தி தொடர்பில் யூதப் படுகொலைகளை நியாயப்படுத்தி செய்தி வெளியிட்டதற்காக மேற்படி பேராசிரியர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

பிரான்சில் மொறிஸ் பப்பன் வழக்கு சூடு பிடித்துள்ளதாலேயே யூதப் படுகொலைச் செய்தி மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளது.

## கொரியா சமாதான மாநாடு ஜெனீவாவில் ஆரம்பமாகின்றது

முதலாளித்துவ தென்கொரியாவுக்கும் கம்யூனிச வடகொரியாவுக்கும் இடையே உள்ள மோதல் நிலையைத் தவிர்த்து சமாதான ஒப்பந்தமொன்றை கைச்சாத்திட வைக்கும் முன் நிபந்தனையுடன் இரு தரப்புச் சந்திப்பொன்று 09.12.97 அன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இச் சந்திப்பு அமெரிக்கா, சீனா ஆகிய இருநாடுகளின் மேற்பார்வையில் நடைபெறுகின்றது.

ஆசியாவில் 30 ஆயிரம் அமெரிக்கப் படைகளை நிலை கொள்ள இடம் தந்துள்ள தென்கொரியாவை ஆசியாவுக்குள் புகும் முக்கிய வாசலாக அமெரிக்கா கருதுகின்றது.

அமெரிக்காவில் கடந்த வாரம் நடைபெற்ற இரு தரப்பு சந்திப்புகளின் பின் இம்மாநாடு பற்றிய அறிவித்தல் வெளியாகியுள்ளது.

இது ஒருபுறமிருக்க, முதலாளித்துவ ஆலோசனைப்படி நடந்த தென்கிழக்காசிய நாடான தென்கொரியா, தனது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார ஸ்திரமற்ற தன்மையை பாதுகாக்க அவசர நிதிகோரி சர்வதேச நாணய நிதியத்திடம் சரணடைந்துள்ளது. மேற்கத்தைய நாணயச் சந்தைகளினால் தாய்லாந்து, இந்தோனேசியா ஆகிய தென்கிழக்காசிய நாடுகளில் இத்தகைய சூழ்நிலை கடந்த மாதம் ஏற்பட்டபோது சர்வதேச நாணய நிதியம் உதவி செய்தது.

## ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் உறுப்பினர் பாரிசில் கொலை பிரெஞ்சு உளவு நிறுவனம் மீது குற்றச்சாட்டு

1988-ம் ஆண்டு மார்ச் மாதம் 29-ம் திகதி ஆபிரிக்க தேசிய காங்கிரசின் முக்கிய உறுப்பினரான திருமதி டுல்சி செப்டெம்பர் என்பவர் பாரிசில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். தென் ஆபிரிக்காவில் வெள்ளையினவாத ஆட்சி நிலவிய காலத்தில் இக் கொலை நடைபெற்றது. தென்னாபிரிக்காவில் நெல்சன் மண்டேலா ஜனாதிபதியான பின் இச் சம்பவங்கள் தொடர்பாக விசாரிக்க ஆணைக்குழு ஒன்றை அமைத்தார். TRC என இவ் ஆணைக் குழுவின் நெதர்லாந்துக் குழு ஒன்று சமர்ப்பித்த அறிக்கையின்படி, பிரெஞ்சு உளவுத்துறை இக் கொலை தொடர்பாக அறிந்திருந்தும் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை எனவும், கொலைஞர்களுக்கும் உளவுநிறுவனத்திற்கும் தொடர்ப்பு இருந்திருக்கலாம் என்ற ஊகத்தைத் தருவதாக உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Institut Neerlandais Pour L'afrique Australe என்ற பெயருடைய மேற்படி நிறுவனத் தலைவர் Peter Hermes மேலும் தெரிவிக்கையில், சர்வதேசத் தடைகளை மீறி தென்னாபிரிக்க வெள்ளையின ஆட்சியாளர்களுக்கு ஆயுத வியாபாரம் செய்த பிரெஞ்சு அரசின் நடவடிக்கைகளை அறிந்து வைத்திருந்த திருமதி டுல்சி செப்டெம்பரின் கொலை, பிரெஞ்சு அரசுக்கு தேவையான ஒன்றாக இருந்தது எனவும் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்க வெள்ளையின ஆட்சியாளர்களின் ஆதரவாளர்கள் பிரெஞ்சு உள்நாட்டமைச்சில் இருந்தனர் எனவும் அவ் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இச்செய்தி பற்றி வெளியாகி உள்ள மற்றொரு தகவலின் படி ஒரு ஆயுத வியாபாரியும், தென்னாபிரிக்க உளவுத்துறை அதிகாரி ஒருவரும் இக்கொலைக்கும் பிரான்சுக்குமுள்ள தொடர்பை உறுதிப்படுத்தியுள்ளனர். எனினும் கொலையைப் புரிந்தவர்கள் தனிப்பட்ட ரீதியிலேயே செயற்பட்டுள்ளனர். தனிப்பட்ட ரீதியில் கொலையைப் புரிந்த அவர்கள் கொலையின் பின்னணியை உணராதிருந்தனர் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்க அதிகாரிகள் மீண்டும் ஈராக் செல்வர் ரஷ்ய இராஜதந்திர ஆலோசனையை ஈராக் ஏற்றது

ஈராக் அரசிடம் உயிரியலாயுதம், இரசாயன ஆயுதம் மற்றும் பேரழிவுகளை ஏற்படுத்தும் ஆயுதங்கள் உள்ளனவா என பரிசோதிப்பதற்காக ஐ.நா வினால் உருவாக்கப்பட்ட UNSCOM ஆணைக் குழுவில் அமெரிக்க மேலாண்மை இருப்பதாக ஈராக் தெரிவித்தது. ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலில் அங்கம் வகிக்கும் நாடுகளின் பிரதிநிதிகளை விகிதாசார ரீதியில் கொண்டதாகவும் அமெரிக்க பக்கச்சார்பு மேலாண்மை அற்றதாகவும் UNSCOM உருவாக்கப்படவேண்டுமென தனது நாட்டில் பரிசோதனைப் பணிகளில் ஈடுபட்ட UNSCOM இங்கு அனுமதி மறுத்த ஈராக் அவர்களை நாடுகடத்தியது அனைவரும் அறிந்ததே.

இதனைத் தொடர்ந்து ஐ.நாவின் அங்கீகாரம் பெறாமலே வளைகுடா பகுதிக்கு பலநூற்றுக் கணக்கான தாக்குதல் விமானங்களையும் பல ஆயிரக்கணக்கான படையினையும், விமானம் தாங்கிக் கப்பல்களையும் அமெரிக்கா அனுப்பி வைத்தது. ஐ.நாவின் செலவில் போர் ஒன்றை நடாத்த தீவிர முயற்சியில் அமெரிக்கா இறங்கியிருந்தவேளை, சோவியத் ரஷ்யாவின் மூத்த தலைவரும் 'பிராவ்தா' பத்திரிகையில் பணிபுரிபவர்களும் KGB யின் முக்கிய உறுப்பினரும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய உறுப்பினரும், தற்போதைய ரஷ்ய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சருமான பிறிமக்கோவ் இராஜதந்திர பணியில் தீவிரமாக இறங்கி வெற்றியுமடைந்துள்ளார்.

UNSCOM மீண்டும் தனது பணிகளில் இறங்க கடந்த 22.11.97 முதல் ஈராக் அனுமதி வழங்கியுள்ளது. ரஷ்யாவின் இந்த இராஜதந்திர வெற்றியை ரஷ்யா கம்யூனிஸ்ட் கட்சியின் உத்தியோகபூர்வ ஏடு மட்டும் பாராட்டியுள்ளது.

பரிசோதனைகளில் ஈடுபட அனுமதிக்கப்பட்டுள்ள UNSCOM இன் அறிக்கை எவ்வாறு அமையும் என்பதில்தான் ஈராக் மீதான பொருளாதார தடை நீக்கம் பற்றி ஆராயலாம் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

## வாரக் குறிப்பு

**16.11.97 ஞாயிற்றுக்கிழமை**

- பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் செயலாளர் றாபகும் தனது 77வது வயதில் காலமானார். ஆப்கானிஸ்தானில் ரஷ்யாவின் தலையீடு 'சந்தர்ப்ப சூழ்நிலைகளின் நிர்ப்பந்தம்' என நியாயப்படுத்திய ஐரோப்பிய தலைவர்களின் முக்கியமான இவர், ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சிக்கு மிக நெருங்கியவர்.
- அமெரிக்காவுக்கும் சுவிசிற்குமிடையேயான உறவுகள் மீண்டும் சுமுக நிலைக்குத் திரும்புகின்றன. இரண்டாம் உலகப்போரில் ஹிட்லருடன் சுவிஸ் வங்கிகள் இணைந்து செயற்பட்ட விடயம் தொடர்பாக இரு நாடுகளும் அண்மையில் முரண்பட்டுக்கொண்டன.
- நைஜீரிய இராணுவ ஆட்சியாளர் பாராளுமன்றத்தை கலைத்துள்ளார். சில கைதிகளுக்கு பொது மன்னிப்பும் வழங்கப்பட்டது.
- இத்தாலியில் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் இடதுசாரிக் கட்சி வெற்றிபெறும் என இறுதிக் கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

**17.11.97 திங்கட்கிழமை**

- மலேசியப் பிரதமர் பதவிவிலக வேண்டும் என அமெரிக்க காங்கிரசில் தீர்மானமியற்றப்பட்டதைத் தொடர்ந்து. மலேசியாவில் அமெரிக்கர்கள் மீது தாக்குதல் நடாத்தப்படும் என இனம் தெரியாத குழுவொன்று எச்சரிக்கை விடுத்துள்ளது.
- சீனச் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டு அமெரிக்கா வந்தடைந்த சீனரான WEI, Homan Right Watch என்ற நிறுவனம் தனது விடுதலைக் காற்றிய பணிகளுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.
- தென்னாபிரிக்காவில் வெள்ளையின இனவாத ஆட்சியின் முன்னாள் ஜனாதிபதி, விசாரணைக் குழுமுன் செல்ல மறுத்துள்ளார்.

**18.11.97 செவ்வாய்க்கிழமை**

- திபெத்திய போராட்டத்தை கவனிக்கவென விசேட தூதுவர் ஒருவரை அமெரிக்கா நியமித்துள்ளது.
- துருக்கிய இஸ்லாமியக் கட்சியைத் தடை செய்தது தொடர்பான விசாரணை நீதிமன்றத்தில் ஆரம்பம்.
- பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் செய்யும் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் திருமதி மடலின் அல்றைட், ஆப்கானிஸ்தான் தலிபன்கள் ஆட்சியை கண்டித்துள்ளதோடு பெண்ணுரிமை பற்றியும் பேசியுள்ளார்.

**19.11.97 புதன்கிழமை**

- ரஷ்யாவில் தனியுடமைப் பொருளாதாரக் கொள்கையை அமுல்படுத்திய முக்கிய அதிகாரியும் உதவிப் பிரதமருமான அனற்றொலி சொபாய் தனியுடமையாக்கலால் பதவியையிழந்தார்.
- அந்நிய நாடுகளில் அமெரிக்கர்களுக்கெதிரான தாக்குதல்கள் ஏற்படலாம் என அமெரிக்கா தனது பிரஜைகளுக்கு எச்சரித்துள்ளது. பாகிஸ்தான், ஈராக், மலேசியா ஆகிய நாடுகளில் உருவாகும் வெளிப்படையான அமெரிக்க எதிர்ப்பு கருத்துக்களே இவ்வறிவித்தலுக்குக் காரணம் எனக் கருதப்படுகின்றது.
- இந்தியாவில் தெலுங்கு தேசக் கட்சியின் தலைவர் Paritala Ravi குண்டுத் தாக்குதலில் படுகாயமடைந்தார். தனி நாட்டுப் போராட்டம் நடாத்திய பின்னர் 10 வருடத்துக்குமுன் சரணடைந்த ரவி தயாரித்த பட விழாவில் இடம் பெற்ற இக் கார்க் குண்டுத் தாக்குதலில் 23 பேர் பலியாகினார்கள்.

**20.11.97 வியாழக்கிழமை**

- அமெரிக்காவில் ஒலிம்பிக் விளையாட்டுப்போட்டி இடம்பெற்றபோது இடம்பெற்ற TWA விமான விபத்து, இயந்திரக் கோளாறு காரணமாக ஏற்பட்டது எனவும் பயங்கரவாத செயலோ ஏவுகணைத் தாக்குதலோ விபத்துக்குக் காரணம் அல்ல என விசாரணைக்குழு தெரிவித்துள்ளது.
- ஈரானுக்கான அணு ஆயுத விற்பனையை ரஷ்யா தொடர்ந்து மேற்கொள்வதாக இஸ்ரேல் பிரதமர் நெட்டன்யாகு குற்றம் சாட்டியுள்ளார்.
- ஐ.நா. சபையை மறு சீரமைப்பு செய்வதற்கான கொபி அனானின் ஆலோசனை ஐ.நா. உறுப்பினர்களின் அங்கீகாரத்தைப் பெற்றது.

**21.11.97 வெள்ளிக்கிழமை**

- கம்யூனிச 'வர்க்கப் போராட்டத்தில்' புரியப்பட்ட 80 மில்லியன் கொலைகளும், ஹிட்லரால் புரியப்பட்ட 'ஆரியமயப்படுத்தல்' கொலைகளும் போர்க் குற்றங்களே எனத் தெரிவிக்கும் 'Black Book of Communism' பிரான்சில் பரபரப்பாக விற்பனையாகிறது.
- தென்னாபிரிக்காவில் நெல்சன் மண்டேலாவால் நியமிக்கப்பட்ட TRC விசாரணைக் குழுவின் முன் ஆஜராக மறுத்துள்ள முன்னாள் வெள்ளையினவாத அரசின் ஜனாதிபதி சிறைத் தண்டனை அனுபவிக்க நேரும் என ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
- பயங்கரவாத செயல் குற்றவாளியாக ஈரானிய அரசை ஜேர்மன் நீதிமன்றம் தீர்ப்பளித்ததையடுத்து மேற்கத்தேய இராஜதந்திரிகள் ஈரான் திரும்பினர்.

**22.11.97 சனிக்கிழமை**

- உலக அழகியாக (Miss World) இந்தியாவை சேர்ந்த Diane Hayden தெரிவு செய்யப்பட்டுள்ளார். அரை நிர்வாண ஆடை மட்டும் அழகல்ல என்பதை நிரூபிப்பதற்காக அவரணிந்த ஆடையில் வெற்றியுமமைந்திருந்தது. 24 வயதுடைய இவர் 1.70 மீ. உயரமுடையவர். இரண்டாமிடம் நியூசிலாந்திற்கும், மூன்றாமிடம் தென்னாபிரிக்காவுக்கும் கிடைத்தது.
- சேர்பிய- பொஸ்னியாவில் பாராளுமன்றத் தேர்தல் அசம்பாவிதமெதுவுமின்றி நடைபெற்றது.
- ஈராக்கிடம் பாரிய அழிவுகளைச் செய்யும் ஆயுதம் உண்டா எனப் பரிசோதிக்கும் ஆணைக்குழு மீண்டும் தனது நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. உறுப்பினர் மாற்றமெதுவும் இல்லாது பணியை தொடரும் இவ் ஆணைக்குழுவின் முடிவுகளே ரஷ்யாவின் இராஜதந்திர வெற்றியின் தலைவிதியை நிர்ணயிக்க உள்ளது. ரஷ்யாவின் இராஜதந்திர வெற்றி அமெரிக்க இராஜ தந்திரிகளுக்கு எரிச்சலை ஊட்டியுள்ளதாக செய்திகள் ஏற்கனவே வெளியாகியுள்ளன.